PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY PAGANERI.

தேசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்.
பாகனேரி.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

# தமிழின்பம்

ஆசிரியர்
ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.
தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

விற்பனை உரிமை:
நியூ இந்தியா புக் ஹவுஸ்
இராமச்சந்திரபுரம் (P. O.)
திருச்சி ஜில்லா.

ரூ. 3—0—0

முதற்பதிப்பு—1948.

உரிமை ஆசிரியருக்கே.

சென்னை விற்பனை உரிமை:—

முருகன் நூலகம்,
80, திருப்பள்ளித்தெரு,
சென்னை 1.

Printed at the Rajan Electric Press, Madras.
Paper supplied by the auther, T. P. 14 and Q.H. No. 191, —1—'48.

# முன்னுரை

தமிழே இன்பம், இன்பமே தமிழ். கம்பன், சேக்கிழார், திருப்புகழ், அருட்பா போன்ற நூல்களைப்படித்தால், இந்த உண்மை விளங்கும். இவை செய்யுட்கள். உரை நடையில் தமிழின்பம் நுகர வேண்டுமானால் திரு. வி. க., சேதுப்பிள்ளை ஆகிய இரு புலவர்களின் செந்தமிழைச் செவிமடுக்க வேண்டும். "செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை" என்றும் சொல்லலாம். அவர் பேச்சு அளந்து தெளிந்து குளிர்ந்த அருவிப் பேச்சு. அவர் எப்பொருளை எடுத்து விளக்கினாலும், அது மனத் திரையில் சொல்லோவியமாக நடமாடும். அவர் எழுதிய "வேலும் வில்லும்", "ஊரும் பேரும்" முதலிய நூல்கள் தமிழின்பத் தேன் துளிகளாகும்.

மற்றொரு நூல் இதோ இருக்கின்றது! இதன் பெயரே "தமிழின்பம்" என்றால் இதை இன்பத்துள் இன்பம் என்று சொல்ல வேண்டும். இதில் உள்ள கட்டுரைகள் தமிழுக்கும், பொருளாராய்ச்சிக்கும் பயன்படும் அரிய சொல்லணிகளாகும். மேடைப் பேச்சு எப்படி யிருக்க வேண்டும்; கட்டுரைகள் எப்படி அமைய வேண்டும் என்பதை இந்நூல் மாணவர்களுக்கு நன்கு விளக்கும். புறநானூறு, சிலப்பதிகாரம், கந்த புராணம், திருக்குறள், கம்ப ராமாயணம், பெரிய புராணம் முதலிய பழைய நூல்களின் சுவை இக்கட்டுரைகளில் ததும்புகின்றன. "கண்ணகிக் கூத்து, சேரனும் கீரனும், அறிவும் திருவும், தமிழும்

சைவமும், ஆண்மையும் அருளும், கர்ணனும் கும்ப கர்ணனும், காளத்தி வேடனும் கங்கை வேடனும்'' முதலிய கட்டுரைகள், படிக்கப் படிக்கத் தெவிட்டாது இனிக்கின்றன. தமிழர் படித்துப் படித்துப் பயன் பெறுக!

எண்ணுறும் போது தமிழையே யெண்ணீர்;
இசைத்துழி தமிழையே யிசைப்பீர்;
பண்ணுறும் போது தமிழ்ப்பணி தனையே
பழுதறப் பண்ணியின் புறுவீர்;
உண்ணுறும் போதும் உறங்கிடும் போதும்,
உயிருளந் துடித்திடும் போதும்,
கண்ணினு மரிய தமிழையே கருதிக்
காரிய வுறுதிகொண் டெழுவீர்!

புதுவை
9-1-1948

எந்தாய் வாழ்க
சுத்தானந்த பாரதி

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY PAGANERI

எண் **உள்ளுறை** பக்கம்

I. மேடைப் பேச்சு

1. தமிழாசிரியர் மகாநாடு —தலைமை உரை ... 1
2. புறநானூறு மகாநாடு —தலைமை உரை ... 6
3. வேளாளப் பெருமக்கள் மகாநாடு —திறப்புரை ... 23

II. இயற்கை இன்பம்

4. பொங்கலோ பொங்கல் ... 31
5. சித்திரை பிறந்தது ... 34
6. தமிழ்த் தென்றல் ... 36

III. சிலம்புச் செல்வம்

7. காதலும் கற்பும் ... 39
8. கண்ணகிக் கூத்து ... 46
9. சிலம்பின் காலம் ... 51

IV. அறிவும் திருவும்

10. காயும் கனியும் ... 58
11. சேரனும் கீரனும் ... 62
12. பாரியும் மாரியும் ... 66

V. கற்பனைக் கட்டுரை

13. முருகனும் முழுமதியும் ... 70
14. பயிர்வண்டும் படர் கொடியும் ... 74
15. நல்ல மரமும் நச்சு மரமும் ... 78

VI. மொழியும் நெறியும்

16. தமிழும் சைவமும் ... 84
17. தமிழும் சாக்கியமும் ... 91
18. இறையவரும் இன்னுயிரும் ... 98

VII. உருப்படிவ ஒற்றுமை

19. ஆண்மையும் அருளும் ... 102
20. கர்ணனும் கும்பகர்ணனும் ... 108
21. காளத்திவேடனும் கங்கை வேடனும் ... 114

VIII. ஆட்டும் பாட்டும்

22. சிவனடியார் முழக்கம் ... 123
23. சரம கவிராயர் ... 129
24. சொக்கர் பாட்டு ... 140
25. பந்து விளையாட்டு ... 148

IX. பாரதியார் பாட்டின்பம்

26. செந்தமிழ் நாடு ... 153
27. முப்பெருங் கவிஞர் ... 157
28. கலையின் விளக்கம் ... 161
29. பண்டாரப் பாட்டு ... 166
30. தமிழ்த் தாய் வாழ்த்து ... 171

# I. மேடைப் பேச்சு

## 1. தமிழாசிரியர் மகாநாடு*

### தலைமை உரை

**கல்வித்துறை அமைச்சர் அவர்களே! ஆசிரியத் தோழர்களே!**

'கற்றாரைக் காண்பதுவும் நன்று; கற்றார் சொற் கேட்பதுவும் நன்று; கற்றாரோடு இணங்கி இருப்பதுவும் நன்று' என்பர் நற்றமிழ் வல்லார். அந் நலத்தை இம் மாகாணத் தமிழாசிரியர் மாநாட்டில் எனக்குச் சிறப் பாகத் தந்த அன்பர்களை மனமாரப் போற்றுகின்றேன்.

இம் மாநாட்டிலே தமிழ்த்தாயின் மணிக்கொடி ஏறக் கண்டேன்; மனம் களித்தேன். வில்லும் கயலும் வேங்கையும் தாங்கிய மணிக்கொடி, முத்தமிழ் வளர்த்த மூவேந்தரையும் நம் மனக் கண்ணெதிரே காட்டி நிற்கின்றது. அன்பர்களே! இன்று நாம் அனைவரும் அரசியல் வானத்தையே நோக்கி நிற்கின்றோம்.[1] சென்ற ஆண்டிலே விடிவெள்ளி தோன்றிற்று; இன்று கிழக்கு வெளுத்து விட்டது. இது வரை மேற்கு நோக்கிய முகங்களெல் லாம் இன்று கிழக்கு நோக்கி நிற்கின்றன. இன்னும் பதி னைந்து திங்களில் நாமிருக்கும் நாட்டை நாமே ஆளப் போகின்றோம். இந்திய நாடு இந்தியர்களுக்குச் சொந்த மாகப் போகின்றது. அந்த முறையில் தமிழ்நாடு தமிழ ருக்கே ஆகும் என்பதில் தடையும் உண்டோ? தமிழ்நாடு தன்னரசு பெறும் என்று எண்ணும் பொழுது தமிழர்

---

* **1—3—1946-ல் சென்னையிலே நடைபெற்றது.**

**1.** மாநாடு நடந்தபோது அப்படி நின்றோம்.

உள்ளம் தழைக்கின்றது; தொண்டர் உள்ளம் துடிக்கின்றது. தமிழ்த் தாய் முன்னாளில் எய்தியிருந்த ஏற்றமும் தோற்றமும் அலை அலையாக மனத்திலே எழுகின்றன.

சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று குலத் தமிழ் மன்னர் நித்தம் தமிழ் வளர்த்த நீர்மை நம் நினைவிற்கு வருகின்றது. சேரநாட்டு மாளிகையில் மெல்லிய வீரமஞ்சத்தில் கண்ணுறங்கும் தமிழறிஞர் ஒருவருக்குக் கவரி வீசி நிற்கும் காவலனை மனக்கண்ணெதிரே காண்கின்றோம். சோழநாட்டு மாநிலமன்னன் — கங்கை கொண்ட காவலன்—கடாரம் வென்ற கொற்றவன்—தமிழ்த்தாயின் திருவடி தொழுது, ‘நான் பண்டித சோழன்’ என்று இறுமாந்து பேசும் இனிய வாசகத்தைக் கேட்கின்றோம். சங்கத் தமிழ் மணக்கும் மதுரையில் அரியாசனத்தில் அமர்ந்து,ஆசிரியரின் சிறப்பையும் அவர்களை ஆதரித்தற்குரிய முறையையும் அழகிய பாட்டால் எடுத்துரைக்கும் பாண்டியனைப் பார்க்கின்றோம். “உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே” என்று பாண்டியன் அன்று பிறப்பித்த ஆணை என்றென்றும் தமிழ்நாட்டில் நின்று நிலவுதல் வேண்டும் என்று ஆசைப் படுகின்றோம்.

மூவேந்தர் காலத்திற்குப் பின்பு நம் தாய்மொழிக்கு நேர்ந்த சிறுமையை நினைத்தால் நெஞ்சம் உருகும். வேற்றரசர் ஆட்சி இந்நாட்டில் வேரூன்றிற்று. அவர் மொழியாகிய ஆங்கிலம் ஆதிக்கம் பெற்றது. எல்லாப் பாடங்களும் ஆங்கில மொழியிலே பயிற்றப்பட்டன. ஆங்கில மாது களிநடம் புரிந்த கல்விச் சாலைகளில் தமிழ்த்தாய் நிலையிழந்து, தலைகவிழ்ந்து, ஒடுங்கி, ஒதுங்கி நிற்பாளாயினாள். தமிழ் ஆசிரியர்களின் உள்ளம் இடிந்தது; ஊக்கம் மடிந்தது. புகைபடிந்த ஓவியம் போல் புலவர்மணிகள் பொலிவிழந்தார்கள். தமிழ் மாணவர்களும் தமிழை

எள்ளி நகையாடத் தொடங்கினர்; அல்லும் பகலும் ஆங்கிலத்தைக் கற்று, ஆங்கிலேயரது நடையுடைகளில் மோகமுற்று, தாய்மொழியைப் பழித்தும் இழித்தும் பேசுவாராயினர். இவ்வாறு கட்டழிந்து, பதங் குலைந்து கிடந்த தமிழ்நாட்டில் தமிழ்க்கலை விளக்கு அவிந்து போகாமல் பாதுகாத்தவர் தமிழாசிரியர்களே யாவர். மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, அருமையும் கருதாது, அவமதிப்பும் கொள்ளாது, அன்று தமிழ்த்தாயின் பொன்னடி போற்றி நின்ற தமிழாசிரியரை இன்று மறக்கலாகுமோ?

'ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கல்வி முறை இந்நாட்டு முன்னேற்றத்திற்கு ஏற்றதன்று; அதனை மாற்றியே தீரவேண்டும்' என்று இப்போது நல்லறிஞர் எல்லோரும் ஒன்றுபட்டுக் கூறுகின்றார்கள். இனி வருகின்ற தமிழரசில் கலைகள் எல்லாம் தமிழ்மொழியின் வாயிலாகவே பயிற்றப்படும் என்பது திண்ணம். அந்த முயற்சியில் கல்வி அமைச்சர் ஈடுபட்டிருக்கின்றார். இப்பொழுது அவர் வகுத்துள்ள திட்டம் உயர்தரப் பள்ளிகளுக்கே யாயினும், அதனோடு நிற்கப் போவதில்லை; கல்லூரியிலும் கலைகளெல்லாம் தாய்மொழியின் மூலமாகவே கற்பித்தல் வேண்டும் என்னும் ஆணையை ஒல்லையிற் பிறப்பிப்பார் என்று நம்புகின்றோம். அதற்குரிய கலைச்சொற்களை ஆக்கும் பணியில் இப்பொழுதே தமிழறிஞர் தலைப்படல் வேண்டும். கலைச்சொல்லாக்கம் வேகமாகச் செய்யக்கூடிய வேலையன்று. பல்லாற்றானும் பதைப்பற ஆராய்ந்து, தமிழின் நீர்மைக்கு ஏற்றவாறு கலைச்சொற் காணுதலே தமிழ்மொழிக்கு ஆக்கம் தருவதாகும்.

இனி, வருங்காலத்தில் தமிழ் ஆசிரியர்கள் செய்தற்குரிய சிறந்தவேலைகள் பல இருக்கின்றன. குடியரசாட்சியில் பேச்சுக்கும் எழுத்துக்கும் பெருஞ்சிறப்புண்டு. தமிழ்

மேடையில் நிகழும் பேச்சுக்களைச் சுருக்கெழுத்திலே எடுக்கும் கலையைத் தமிழாசிரியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று பத்திரிகையுலகம் பெரும்பாலும் தமிழ்ப் பேச்சுக்களை மதிப்பதில்லை; பிரசுரம் செய்வதில்லை. திருவள்ளுவர் முதலிய புலவரின் நினைவு நாட்கள் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றன. அவ்விழாக்களிலே பெரும் புலவர்கள் பேசுகின்றார்கள்; பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து கேட்கின்றார்கள்; கிளர்ச்சி பெறுகிறார்கள்; பயனடைகிறார்கள். ஆனால் அந்நிகழ்ச்சிகளைப் பற்றித் தமிழ்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகளில் விவரமாக ஒன்றும் காண முடியாது. தமிழ்ப் பத்திரிகைகளிலும் சிலவற்றைத் தவிர, மற்றவை ஏனோ தானோ என்றுதான் அந்நிகழ்ச்சியை வெளியிட்டிருக்கும். இந்த நிலையை மாற்றவே வேண்டும். அதனை மாற்றும் ஆற்றல் தமிழறிஞரிடம் இருக்கின்றது. நாடெங்கும் தமிழ் மயமாக்கிவிட்டால் பத்திரிகைகள் தாமே தமிழிற் கனிந்து வரும். தமிழ்ப் பேச்சுக்களைப் பரப்புகின்ற பத்திரிகைகளைப் பெருவாரியாகத் தமிழ் மக்கள் ஆதரிக்கத் தலைப்பட்டால் இன்றுள்ள நிலை நாளையே மாறிவிடும்.

ஆதலால், தமிழ் அறிஞர்களே! தமிழ்நாடெங்கும் தமிழ்ச் சங்கம் நிறுவுங்கள்; தமிழ்ப் பாடம் சொல்லுங்கள்; கலைச்செல்வத்தை வாரி வழங்குங்கள்; தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். இவ்விதம் ஒல்லும் வகையால் நாம் ஒவ்வொருவரும் பணிசெய்வோமானல் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ் நாடு புத்துயிர் பெற்றுவிடும். அக்காலத்தில் நாடு முற்றும் தமிழுணர்ச்சி பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கும். கல்லூரிகளில் நல்லாசிரியர்கள் எல்லோரும் தமிழறிஞராயிருப்பர். பல்கலைக் கழகங்களில் நக்கீரர் போன்ற நற்றமிழ்ப் புலவர் தலைவராக வீற்றிருப்பர். 'எந்த மொழியும் எமது சொந்த மொழிக்கு இணையாகாது' என்று தமிழ் நாட்டு இளைஞர்

செம்மாந்து பேசுவர்; தே மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்வோம் என்று முரசு கொட்டுவர். எட்டுத் திசையிலும் தமிழ்நாடு ஏற்றமுற்று விளங்கும். அந்த நிலையினை இன்று எண்ணிப் பாரீர்! அதனை எய்தியே தீர்வோம்; பணிசெய்ய வாரீர்!

# 2. புறநானூறு மகாநாடு*

## தலைமை உரை

மெய்யன்பர்களே! செந்தமிழ்ச் செல்வர்களே!

இந்நாள் தமிழ்நாட்டுக்கு ஒரு நன்னாள் ஆகும். தமிழ்த் தாயைப் போற்றும் அன்பரும் அறிஞரும் நூற்றுக் கணக்காக இங்கே நிறைந்திருக்கின்றார்கள். தமிழ் நாடெங்கும் தமிழ் முழக்கம் செழித்து வருகின்றது; எங்கும் தமிழ்மணம் கமழ்கின்றது. சிந்தைக்கினிய செவிக்கினிய செந்தமிழைத் தமிழ் நாட்டார் சீராட்டத் தொடங்கி விட்டார்கள். பண்டைத் தமிழ்நூல்களைப் படிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் தொண்டர் பல்லாயிரவர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய உணர்ச்சியின் வடிவமே இம் மகாநாடு. தலை சிறந்த ஒரு தமிழ் நூலின் திறத்தினை எடுத்துரைப்பதே இம் மகாநாட்டின் கருத்து. புறநானூறு என்னும் பெருமை சான்ற நூலைப்பற்றிப் புலவர் பலர் இங்கே பேச இசைந்துள்ளார்கள். அவர்தம் நல்லுரைக்கு முன்னுரையும் பின்னுரையும் நிகழ்த்தும் பேறு எனக்குக் கிடைத்திருக்கின்றது. இம் மகாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு உங்கள் அன்பையும் ஆதரவையும் வேண்டுகின்றேன்.

பழந்தமிழ் நாட்டின் தன்மையை எடுத்துக் காட்டும் தொகை நூல்களில் தலைசிறந்தது புறநானூறு என்பர். அந்நூலில் படைத்திறம் வாய்ந்த பெருவேந்தரைக் காணலாம்; கொடைத்திறம் வாய்ந்த வள்ளல்களைக் காணலாம்; கற்றறிந்து அடங்கிய சான்றோரைக் காணலாம்; பழந்தமிழ்க் குலங்களையும் குடிகளையும் காணலாம், சுருங்கச் சொல்லின், கலைமகளும் திருமகளும் களிநடம்

---

* சென்னையில் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் நடத்தப் பெற்றது.

புரிந்த பழந்தமிழ்நாட்டைப் புறநானூற்றிலே காண லாம்.

கவிதையும் காவலரும்.

முற்காலத் தமிழ் மன்னரிற் பலர் பொன்மலர் மணமும் பெற்றாற் போன்று, புவிச் செல்வத்தோடு கவிச் செல்வ மும் உடையராய் விளங்கினார்கள். முத்தமிழ் நாட்டை ஆண்ட சேர சோழ பாண்டியருட் சிலர் பாடிய பாடல் கள் புறநானூற்றிலே காணப்படும். கற்பின் செல்வி யாகிய கண்ணகியின் சீற்றத்தால் ஆவி துறந்து அழியாப் புகழ்பெற்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் கவி பாடும் திறம் பெற்ற காவலருள் ஒருவன். மக்களாகப் பிறந்தோர் எல்லாம் கல்வி கற்று மேம்படல் வேண்டும் என்ற ஆசையை அம்மன்னன் ஒரு பாட்டால் அறிவிக் கின்றான்.

*"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"*

என்ற பாட்டு அவ்வரசனிடம் அமைந்திருந்த ஆர்வத் தைக் காட்டுகின்றது.

இனி, சோழநாட்டு அரசனாகிய கோப் பெருஞ் சோழனைச் சிறிது பார்ப்போம். அவனும் கவிபாடும் திறம் பெற்றவன்; தமிழறிந்த புலவர்களைத் தக்கவாறு போற்றியவன். அச் சோழன் செல்வத்திலே தனக்கு நிகரான ஒருவனைத் தோழனாகக் கொண்டான் அல்லன்; பிசிராந்தை என்னும் தமிழ்ப்புலவரையே உயிர் நண்ப னாகக் கொண்டான். அம்மன்னன் உலக வாழ்க்கையில் வெறுப்புற்று நாடு துறந்து உண்ணா நோன்பை மேற் கொண்டபொழுது அவன் மனம் பிசிராந்தையை நாடிற்று. தோழன் வருவான் வருவான் என்று வழிமேல் விழிவைத்து ஆவி காத்திருந்தான். எப்படியும் பிசிராந்

தையார் வந்தே தீர்வாரென்று அருகே யிருந்த அன்ப ரிடம் அகம் குழைந்து கூறினான்.

"செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன்"

என்பது அந்நிலையில் அவன் பாடிய பாட்டு. இங்ஙனம் ஏங்கி நின்ற நல்லுயிர் நீங்கிப் போயிற்று. பிற்பாடு ஆந்தையார் வந்து சேர்ந்தார்; நிகழ்ந்ததை அறிந்தார். தாமும் உண்ணு நோன்பிருந்து தம் உயிர் கொண்டு சோழன் நல்லுயிரைத் தேடச் செல்வார் போல ஆவி துறந்தார்.

சேரநாட்டை ஆண்ட மன்னருள்ளும் சிலர் செந் தமிழ்க் கவிபாடும் சிறப்பு வாய்ந்திருந்தனர். அன்னவ ருள் ஒருவன் சேரமான் இரும்பொறை. அம் மன்னன் செங்கண்ணன் என்ற சோழ மன்னனுடன் பெரும்போர் செய்து தோற்றான். வெற்றிபெற்ற சோழன் சேரமா னைப் பிடித்துச் சிறைக் கோட்டத்தில் அடைத்தான். சிறையிடைத் தேம்பிய சேரன் ஒருநாள் தாகமுற்று வருந்தினான்; தண்ணீர் தரும்படி சிறை காப்பாளனை வேண்டினான். அவன் காலம் தாழ்த்து ஒரு கலத்தில் நீர் கொண்டு வந்தான். அத்தண்ணீரைப் பருகி உயிர் வாழ்வதற்கு அம் மானவேந்தன் மனம் இசையவில்லை; "மானம் அழிந்த பின் வாழாமை முன் இனிது" என் றெண்ணி உயிர் துறக்கத் துணிந்தான். காவலாளன் கொடுத்த தண்ணீர்க் கலத்தைக் கையிலே வைத்துக் கொண்டு ஒரு கவி பாடினான்; உயிர் துறந்தான்.

முற்காலப் போர்முறை.

பகைமையும் போரும் எக்காலத்தும் உண்டு. முற் காலப் போர்முறைகளில் சிலவற்றைப் புறநானூற்றிலே

காணலாம். அக்காலத்தில் ஒரு அரசன் மாற்றரசனது நாட்டின்மீது படையெடுத்தால் அந்நாட்டில் வாழும் நல்லுயிர்களை நாசமாக்கக் கருதுவதில்லை. பசுக்களையும், அறவோரையும், பெண்களையும், பிணியாளரையும், இவர் போன்ற பிறரையும், போர் நிகழும் இடத்தை விட்டுப் புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும். இந்த அறப்போர்முறை முதுகுடுமிப் பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்ற புலவர் பாராட்டுகின்றார். இன்னும் போர்க்களத்தில் வீரர் அல்லாதார் மேலும், புறங்காட்டி ஓடுவார் மேலும், புண்பட்டார் மேலும், முதியவர் மேலும், படைக்கலம் செலுத்தலாகாது என்பது பழந்தமிழர் கொள்கை. அன்னார் மீது படைக்கலம் விடுத்த பொருநரைப் படைமடம் பட்டோர் என்று தமிழ் உலகம் பழித்துரைத்தது.

## கோட்டை கொத்தளங்கள்.

முற்காலத்தில் தமிழரசர்கள் கட்டிய கோட்டைகளும் கொத்தளங்களும் புறநானூற்றிலே குறிக்கப்பட்டுள்ளன. பாண்டி நாட்டிலே கானப் பேர் என்ற ஊரில் ஒரு பெரிய கோட்டை இருந்தது. ஆழ்ந்த அகழியும், உயர்ந்த மதிலும், நிறைந்த ஞாயிலும், செறிந்த காடும் அக் கோட்டையின் உறுப்புக்கள்.

"கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
அருங்குறும் புடுத்த கானப்பேர் எயில்"

என்று அதன் பெருமையைப் பாடினார் ஐயூர் மூலங் கிழார். எயில் என்பது கோட்டை. கானப்பேர் எயில் வேங்கை மார்பன் என்ற வீரனுக்குரியதாக இருந்தது. அக் கோட்டையைத் தாக்கி, வேங்கையை வென்றான் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி; அவ் வெற்றியின்

காரணமாகக் "கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி" என்று பாராட்டப் பெற்றான். இந்நாளில் கானப்பேர் என்பது காளையார்கோவில் என வழங்குகின்றது.

கானப்பேர் எயிலுக்கு அருகே ஏழெயில் என்ற கோட்டையும் இருந்ததாகத் தெரிகின்றது. ஒருகால் அக்கோட்டையைக் கைப்பற்றினான் நலங்கிள்ளி என்ற சோழன்.

"தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவம் எறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை"

என்று கோவூர் கிழார் அவனைப் புகழ்ந்துள்ளார். இக்காலத்தில் ஏழு பொன்கோட்டை என வழங்கும் ஊரே பழைய ஏழெயில் என்று கருதப்படுகின்றது.

தொண்டை நாட்டில் முற்காலத்திருந்த இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்று எயிற் கோட்டம் என்று பெயர் பெற்றிருந்தது. அக் கோட்டத்தைச் சேர்ந்ததே காஞ்சிமாநகரம். எயிற்பதி என்று அந் நகரைச் சேக்கிழார் குறித்துப் போந்தார். இன்னும் சோழநாட்டின் ஆதித்தலைநகராகிய திருவாரூருக்கு அருகே பேரெயில் என்ற பெயருடைய ஊர் ஒன்று உள்ளது. அது தேவாரப் பாடல் பெற்ற பழம்பதி. சோழமன்னர்கள் அவ்விடத்தில் பெருங் கோட்டை கட்டியிருந்தார்கள் என்று தோற்றுகிறது. அவ்வூர் ஓகைப் பேரையூர் எனவும் வழங்கும்.

கோட்டையின் பல கூறுகளும் உறுப்புக்களும் புறப் பாடல்களால் புலனாகின்றன. கோட்டையின் சிறந்த அங்கம் மதில். மதிலைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள்

பலவாகும். அவற்றுள் ஆரை, எயில், இஞ்சி, நொச்சி புரிசை என்பன புறநானூற்றில் வழங்குகின்றன. மதில்களில் செப்புத்தகடுகளைச் செறித்துத் திண்மை செய்யும் முறை முற்காலத்தில் கையாளப்பட்டதாகத் தெரிகின்றது. இலங்கைமா நகரின் திண்ணிய மதில்களின் திறத்தினையும், அம்மதிலால் சூழப்பட்ட நகரத்தின் செழுமையையும் "செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்" என்று கூறிப்போந்தார் கம்பர். தென்பாண்டி நாடாகிய திருநெல்வேலியில் பாண்டிய மன்னர் கட்டியிருந்த கோட்டையின் குறிகள் பல இடங்களில் உள்ளன. அவற்றுள் ஒன்று பொருநை ஆற்றின் கரையில் அமைந்த செப்பறையாகும். செப்பறை என்பது செம்பினால் செய்த அறை என்ற பொருளைத் தரும். செப்பறை என்ற இடத்தில் இக்காலத்தில் குடி படை ஒன்றுமில்லை. அழகிய கூத்தர் கோவில் ஒன்றே காணப்படுகின்றது. ஆயினும் அக்கோவிலைச் சுற்றிச் சிதைந்த மதில்களும் மேடுகளும் உண்டு. செப்பறைக்கு எதிரே ஆற்றின் மறுகரையில் மணற்படைவீடு என்ற ஊர் அமைந்துள்ளது. படைவீடு என்பது அரசனது படை தங்கி இருக்கும் பாசறையாகும். பாண்டி மன்னன் சேனை தங்கிய படைவீட்டுக்கு அண்மையில் செப்பறை அமைந்திருத்தலை நோக்கும் பொழுது அவ்விடம் பாண்டியனுர்க்குரிய கோட்டைகளுள் ஒன்ருக இருந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது.

மதிலுறுப்புகளில் ஞாயில் இன்றியமையாததொன்றென்பது தமிழ்நாட்டார் கருத்து. படையெடுத்து வரும் பகைவன் மீது மறைந்து நின்று அம்பு எய்வதற்குரிய நிலையங்களே ஞாயில் எனப்படும். மதிலுக்கு ஞாயிலே சிறந்த உறுப்பென்பது புறநானூற்றுப்பாட்டு ஒன்ருல் விளங்குகின்றது.

"மதிலும் ஞாயில் இன்றே; கிடங்கும்
நீர் இன்மையின் கன்றுமேய்ந்து உகளும்
ஊரது நிலைமையும் இதுவே"

என்று ஒரு புலவர் கோட்டையின் நிலையைக் கூறுகின்ருர். பாழாய்க் கிடந்த ஒரு பழங் கோட்டையின் தன்மையை இப்பாட்டு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. 'கோட்டையைச் சூழ்ந்த அகழியில் தண்ணீர் இன்றிப் புல்லும் புதரும் செறிந்திருக்கின்றன. மதில்கள் ஞாயில் இன்றிப் பாழ் பட்டிருக்கின்றன' என்பது இப்பாட்டின் கருத்து.

அகழி சூழ்ந்த இடத்தைக் கிடங்கில் என்று கூறுவர். முற்காலத்தில் கிடங்கில் என்னும் கோட்டை கோடன் என்ற சிற்றரசனுக்கு உரியதாக இருந்தது. பத்துப்பாட்டுள் ஒன்ருகிய சிறுபாணுற்றுப் படையில் பாராட்டப்படுகின்ற தலைவன் இவனே. இவ்வரசனை நன்ருகனுர் பாடிய பாட்டுப் புறநானூற்றிலே தொகுப்பட்டிருக்கின்றது. கிடங்கில் என்னும் கோட்டை இப்பொழுது திண்டிவனத்திற் கருகே அழிந்து கிடக்கின்றது. சிதைந்த அகழியும், இடிந்த மதிலும் அதன் பழம் பெருமையை எடுத்துரைக்கின்றன. திண்டிவனம் என்ற சொல் 'புளியங்காடு' என்ற பொருளைத் தரும். இவ்வனம், முற்காலத்திருந்த கிடங்கிற் கோட்டையின் காட்டரணுக இருந்தது போலும். அக்காடு நாளடைவில் நாடாயிற்று. பழைய கோட்டையும் ஊரும் அமைந்திருந்த இடம் பாழாயிற்று.

திண்டிவனத்திற்கு மேற்கே பதினேழு மைல் தூரத்தில் செஞ்சிக் கோட்டை அமைந்திருக்கின்றது. செஞ்சி என்ற சொல்லின் பொருள் செவ்வையாக விளங்காவிடினும் கோட்டைமதிலைக் குறிக்கும் இஞ்சி என்பது அவ் ஊர்ப்பெயரிலேகுழைந்து கிடப்பதாகத் தோன்றுகின்றது.

தரையில் அமைந்த கோட்டைகளே யன்றி வானத்தில் ஊர்ந்து செல்லும் கோட்டைகளையும் முற்காலத் தமிழர் அறிந்திருந்தனர். ஆகாயக் கோட்டைகளைத் 'தூங்கு எயில்' என்று குறித்தார்கள். ஆகாய வழியாகப் போந்த மூன்று பெரிய கோட்டைகளை ஒரு சோழ மன்னன் தகர்த்தெறிந்த செய்தி புறநானூறு முதலிய பழந்தமிழ் நூல்களால் விளங்கும். பகைவரை அழிக்கும் படைத்திறமைக்கு அவன்செயலையே எடுத்துக் காட்டாகப் புலவர்கள் பாடினர்.

இத்தகைய அருஞ்செயல் புரிந்த சோழனது இயற்பெயர் தெரிய வில்லை. அவன் எப்படையைக் கொண்டு ஆகாயக் கோட்டையைத் தகர்த்தான் என்பதும் துலங்கவில்லை. ஆயினும் அவனுக்கு அமைந்துள்ள சிறப்புப் பெயரைப் பார்க்கும் பொழுது அவன் தோள்வலிமையை அக்காலத்தினர் பெரிதும் பாராட்டினர் என்பது புலனாகும். "தூங்கு எயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்" என்பது அவனது சிறப்புப் பெயராக வழங்கிற்று.

குறுநில மன்னர்.

புறநானூற்றிலே புகழப்படுகின்ற குறுநிலமன்னரிற் பலர், குன்று சார்ந்த நாடுகளில் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. பாண்டி நாட்டில், பழனி மலையை ஆண்ட தலைவன் பேகன். பறம்பு மலையை ஆண்டவன் பாரி. கோடை மலையை ஆண்டவன் கடியநெடுவேட்டுவன். பொதிய மலையை ஆண்டவன் ஆய் அண்டிரன். சோழ நாட்டில் வல்வில் ஓரி என்பவன் கொல்லிமலையை ஆண்டான். அதிகமான் குதிரைமலையில் அரசுபுரிந்தான். குமணன் முதிர மலையின் கொற்றவன். பெருநள்ளி என்பவன் தோட்டி மலையின் தலைவன். இச்சிற்றரசரிற் சிலர் பேரரசரினும் சாலப்புகழ் பெற்று விளங்கினர்; வறிஞரை ஆதரித்தனர்; அறிஞரைப் போற்றினர். பாண்டி நாட்டிலுள்ள

பறம்பு மலையையும் அதை அடுத்த முந்நூறு ஊர்களை யும் ஆண்டு வந்தான் பாரி. அவன் மனத்தில் அமைந்த அருளுக்குக் கங்கு கரையில்லை. அவன் நாவில் இல்லை யென்ற சொல்லே இல்லை. பாரியின் பெருந்தகைமையைப் பொய்யறியாக் கபிலர் புகழ்ந்து போற்றினர்.

பொதியமலைத் தலைவனாய் விளங்கிய ஆய் என்பவன் மற்றொரு வள்ளல். வறுமையால் வாடி வந்தடைந்தவ ரைத் தாயினும் சாலப் பரிந்து ஆதரித்த ஆயின் பெரு மையைப் புறநானூற்றால் அறியலாம்.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வாணிகன் ஆய் அல்லன்"

என்று அவன் பணப்பான்மையை முடமோசியார் என்னும் புலவர் விளக்கிப் போந்தார். இரப்போர்க்கு இல்லை என்னாது கொடுத்தான் அவ்வள்ளல். ஆனால் கைப்பொரு ளைக்கொடுத்து அறத்தைஅதற்கு ஈடாகப்பெறும் வணிக னல்லன் அவன். கொடுப்பது கடமை, முறைமை என்ற கருத்து ஒன்றே அவன் உள்ளத்தில் நின்றது. இத்தகைய செம்மனம் படைத்தவர் இவ்வுலகில் நூறு யிரவருள் ஒருவர் அன்றோ? பாரியும் ஆயும் போன்றவர் பலர் பண்டைத் தமிழ் நாட்டில் வாழ்ந்தார்கள். கொல்லி மலையை ஆண்ட ஓரியும், மலையமான் என்னும் திருமுடிக் காரியும், மழவர் கோமானாகிய அதிகமானும், பழனிமலைத் தலைவனாகிய பேகனும், கொங்கர் கோமானாகிய குமண னும், தோட்டி மலை நாடனாகிய நள்ளியும் கொடையிற் சிறந்த குறுநிலமன்னர்கள்.

### பழைய குலமும் குடியும்.

பழந்தமிழ் நாட்டில் விளங்கிய குலங்களையும் குடி களையும் புறநானூற்றிலே காணலாம். மழவர் என்ப வர் ஒரு குலத்தார். அவர் சிறந்த வீரராக விளங்கினர். சோழ நாட்டில் கொள்ளிட நதியின் வடகரையில் உள்ள

திருமழபாடி என்னும் பழம்பதி அவர் பெயரைத் தாங்கி நிற்கின்றது. திருமழபாடி மூவர் தமிழ்மாலையும் பெற்று மிளிரும் மூதூராகும்; 'பொன்னார் மேனியனே' என்று எடுத்து 'மன்னே மாமணியே, மழபாடியுள் மாணிக்கமே, அன்னே உன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே' என்று சுந்தரமூர்த்தி புகழ்ந்து போற்றிய பெருமை சான்றது. மழவர்பாடி என்பதே மழபாடி யாயிற்று. மழவர் குலத்திலே அதிகமான் என்னும் பெருமகன் தோன்றினான். அவன் சிவ நெறியில் நின்ற சீலன்; பொய்யறியாப் புலவர்களால் புகழப் பெற்றவன். அவன் படைத்திறத்தைப் பாடினார் பரணர்; கொடைத்திறத்தைப் பாடினார் ஔவையார். இக்காலத்தில் சேலம்நாட்டில் தர்மபுரி என வழங்கும் தகடூர் அவன் கடிநகராய் இருந்தது. அவ்வூருக்கு அருகே அதிகமான் ஒரு கோட்டை கட்டினான். அது அதிகமான்கோட்டை என்று பெயர் பெற்றது. இந்நாளில் அதமன்கோட்டை என அவ்வூர் வழங்குகின்றது. இன்னும் கெடிலநதியின் வடகரையில் அமைந்த திருவதிகை என்னும் பாடல் பெற்ற பழம்பதியும் அதிகமானோடு தொடர்புடையதாகத் தோற்றுகின்றது.

மற்றொரு பழந்தமிழ் வகுப்பார் பாணர். பண்ணோடு இசை பாடவல்லவர் பாணர் எனப்பட்டார். பாணரை அக்காலத்துப் பெருநிலமன்னரும் குறுநில மன்னரும் வரிசை அறிந்து ஆதரித்தார்கள். சோழநாட்டின் தலை நகராய் விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்தில் பெரும் பாணர் சிறந்து வாழ்ந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. யாழில் இசைபாடும் பாணர் யாழ்ப்பாணர் என்று பெயர் பெற்றார். சிவனடியார்களுள் ஒருவராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் இக்குலத்தவரே. திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பாடல்களை இவர் யாழில் அமைத்துப்பாடி இன்புற்றார் என்று திருத்தொண்டர் புராணம் கூறுகின்றது. இலங்கையில் உள்ள

யாழ்ப்பாணம் என்ற நகரம் யாழ்ப்பாணர் பெயரைத் தாங்கி யுள்ளது.

இப்பொழுது இக்குலத்தார் தமிழ் நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் பழைய சேரநாடாகிய மலையாளத்தில் பாணர் குலம் இன்றும் காணப்படுகின்றது. ஓணம் திருநாளில் பாணர் தம்மனைவியருடன் சிறுபறையும் குழித்தாளமும் முழக்கிக் கொண்டு இல்லந்தொறும் போந்து இசைபாடுவர், அன்றியும் திருச்சூர்க் கோவிலுக்கு வெளியே நின்று பாணர்கள் பாட்டிசைத்துப் பரிசு பெறும் வழக்கம் இன்றும் உண்டு என்பர்.

இனி, புறநானூற்றில் பேசப்படுகின்ற வையாவிக் கோப் பெரும்பேகன் என்பவன் ஆவியர் குடியில் பிறந்தவன். ஆவியர் பெருமகன் என்று சிறுபாணாற்றுப் படை அவனைப் போற்றுகின்றது. ஆவியர் குடியிலே தோன்றிய அரசர்களால் ஆளப்பட்டமையால் ஆவிநன் குடி என்பது பழனிக்குப் பெயராயிற்று. நக்கீரதேவர் அருளிய திருமுருகாற்றுப் படையில் திரு ஆவிநன்குடி முருகனுக்குரிய படைவீடுகளில் ஒன்றாகப் போற்றப்பட்டுள்ளது. வையாபுரி என்பது அதற்கு மற்றொரு பெயர். ஆவியர் குடியில் தோன்றிய வையாவிக் கோவால் ஆளப்பட்ட நகரம் வையாவிபுரி என்று பெயர் பெற்றுப் பின்பு வையாபுரி ஆயிற்று என்பர்.

ஆவியரைப் போலவே ஓவியர் என்பாரும் பழந்தமிழ் நாட்டில் இருந்தனர். ஓவியர்குடியில் பிறந்து சிறந்து வாழ்ந்த சிற்றரசன் ஒருவனை ஓய்மான் நல்லியக் கோடன் என்று புறநானூறு குறிக்கின்றது. ஓய்மான் ஆண்ட நாடு ஓய்மாநாடு என்று வழங்கலாயிற்று. இந்நாளில் திண்டிவனம் எனவழங்கும் ஊர் ஓய்மா நாட்டைச்சேர்ந்ததென்று சாசனங்களால் அறிகின்றோம்.

புலவர் வாழ்க்கை.

அக்காலத்துப் புலவர்கள் மதியாத மன்னர் அளித்த கொடையை அறவே வெறுத்தார்கள். பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் கோடைமலைத் தலைவனாகிய கடியநெடு வேட்டுவனைக் காணச் சென்றார். அவன் உரிய காலத்தில் பரிசில் அளியாது காலம் தாழ்த்தான். அதுகண்ட சாத்தனார்.

"முற்றிய திருவின் மூவர் ஆயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே"

என்றார். 'கல்வியின் பெருமை யறிந்து பேணிக் கொடுக்கின்ற கொடையையே யாம் பெறுவோம். அன்பற்றார் முடியுடை வேந்தராயினும் அவர் அளிக்கும் கொடையை ஏற்றுக்கொள்ளோம்' என்றுபாடி அவனைவிட்டு அகன்றார்.

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் ஒருநாள் அதிகமானைக் காணச் சென்றார். அவன் புலவரை மதிக்கும் பெற்றி வாய்ந்தவனாயினும் அரசாங்க வேலையில் ஈடுபட்டிருந்தான். ஆதலால் புலவர்க்குரிய பரிசுப்பொருளை மற்றொருவரிடம் கொடுத்தனுப்பினான். அப்பரிசைக்கண்ட சித்திரனார் சீற்றம்கொண்டார். 'என்னையாரென்று நினைத்தான் அதிகமான். அவனைக்கண்டு பரிசுபெற வந்தேனே அன்றிப் பராமுகமாக அவன் கொடுக்கும் பொருளைக் கொண்டு போக வந்தவன் அல்லேன் யான். பாட்டைப் பாடிவிட்டு அதற்கு ஈடாகப் பரிசில் பெற்றுச் செல்பவன் வாணிகப் புலவன் ஆவான். அவ்வகையைச் சேர்ந்தவன் அல்லன் யான். கவியின் சுவையறிந்து அன்புடன் அரசன் தினையளவு பொருள்தரினும் அதனை ஏற்று மகிழ்வேன்' என்று உணர்ச்சி ததும்பப் பாடினார்.

இசைத்தமிழ் வளர்ச்சி.

இயற்றமிழை ஆதரித்த பண்டைத்தமிழரசர்கள் இசைத்தமிழையும் நன்கு போற்றினார்கள். அக்காலத்து

இசைக்கருவிகளில் சிறந்தன குழலும் யாழும். யாழ் பல திறப்பட்டதாக அமைந்திருந்தது. பாணர் என்பவர் சீறி யாழ் என்னும் சிறிய யாழைச் செல்லும் இடமெல் லாம் எடுத்துச் சென்றனர். சிறிய யாழ் எப்பொழுதும் அவர் கையகத்து இருந்தமையால் "கைவழி" என்னும் பெயர் பெற்றது. இசைவாணராகிய பாணரைப் பெரு நள்ளி என்ற குறுநிலமன்னன் அன்போடு ஆதரித்தான். அவனைப் பாடினார் வன்பரணர் என்ற புலவர்.

> "நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
> மாலை மருதம் பண்ணிக் காலைக்
> கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
> வரவுஎமர் மறந்தனர் அதுநீ
> புரவுக்கடன் பூண்ட வண்மையானே"

என்ற பாட்டின் நயம் அறியத்தக்கதாகும். 'அரசே! பாணர்க்கு நீ பெருங்கொடை கொடுக்கின்றாய். உன் உணவை உண்டு மயங்கி இசை மரபினை மறந்து விட்டார் இசைப்பாணர். மாலைப் பொழுதில் பாடுதற்குரிய செவ் வழிப் பண்ணைக் காலைப்பொழுதிலே பாடுகின்றார்கள். காலையில் பாடுதற்குரிய மருதப் பண்ணை மாலையில் பாடு கின்றார்கள். இதற்குக் காரணம் நின் கொடையே' என்று கூறினார் புலவர். இப்பாட்டால் பண்டை இசை வாணர் பண்களை வகுத்திருந்ததோடு அவற்றைப் பாடுதற் குரிய பொழுதையும் வரையறுத்திருந்தார்கள் என்பது இனிது விளங்குகின்றது. இசைபாடும் பாணர்க்குத் தமிழரசர் வரிசை யறிந்து பரிசளித்தார்கள். வெள்ளிநாரால் தொடுத்த பொற்றாமரைமலர் பாணர்க்கு உரிய உயர்ந்த பரிசாகக் கருதப்பட்டது.

**சங்ககாலப் பெண்மணிகள்.**

அக்காலத்தில் கலைஞானம் பெற்ற பல பெண் மணிகள் தமிழ் நாட்டில் வாழ்ந்தார்கள். 'பேதைமை

என்பது மாதர்க்கு அணிகலம்' என்பது தமிழ் நாட்டாரது பழங்கொள்கை யன்று என்பதற்குப் புறநானூறு ஒன்றே போதிய சான்றாகும். செவ்விய கவி பாடும் திறம் பெற்ற பெண்பாலர் பாடிய அருமை சான்ற பாடல்கள் புறநானூற்றிலே சேர்க்கப்பட்டுள்ளன. கரிகாற் சோழன் வெண்ணிப் போர்க்களத்தில் பெற்ற வெற்றியை வியந்து பாடினாள் ஒரு பெண். அவள் குயவர் குலத்திற் பிறந்தவள். வெண்ணிக் குயத்தியார் என்று புறநானூற்றிலே அம்மாது போற்றப் படுகின்றார். இன்னும் நப்பசலையார் என்ற நல்லிசைப் புலமை மெல்லியலார் மலையமான் திருமுடிக்காரியையும்பிறரையும் பாடியுள்ளார். இவர் தென்பாண்டி நாட்டிலுள்ள கொற்கை மூதுரைச்சூழ்ந்த மாறோக்கம் என்ற நாட்டிலே தோன்றியவர். இனி, அக் காலத்திய அரசராலும் அறிஞராலும் பெரிதும் பாராட்டப்பட்ட ஔவையாரை அறியாதார் யாரே? ஆகவே, ஆண்பெண்ணாகிய இருபாலாரும் முற்காலத்தில் கல்வியறிவால் மேம்பட்டிருந்தார்கள் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

இன்னும், வெம்மை சான்ற போர்க்களத்தில் அஞ்சாது நின்று அமர் புரியுமாறு தாம் பெற்ற அருமை மைந்தரை ஊக்கி அனுப்பிய வீரத்தாயரும் அக்காலத்தே விளங்கினர். மாற்றார்க்குப் புறங்கொடாது மார்பிலே புண்பட்டுச் சிதைந்த மைந்தனது மேனியைக் கண்ட நிலையில் பெற்றபோதினும் பெரியதோர் இன்பம் அடைந்தாள் ஒருதாய். மற்றொரு வீரமாது முதல்நாள் நடந்த போரில் தமையனை இழந்தாள்; மறுநாள் நடந்த போரில் கணவனை இழந்தாள்; பின்னும் போர் ஒழிந்தபாடில்லை. அவள் குடும்பத்தில் சிறுபையன் ஒருவனே எஞ்சி நின்றான். முன்னே இறந்துபட்ட தலைவனையும் தமையனையும் நினைந்து அவள் தளர்ந்தாள் அல்லள்; தன் குடியைக் காப்பதற்கு மைந்தன் ஒருவனே உள்ளான் என்பதையும் உணர்ந்தா

ளல்லள். அருமந்தபிள்ளையை அன்போடு அழைத்தாள்; வெள்ளிய ஆடையை உடுத்தாள்; தலையில் எண்ணெய் தேய்த்துச் சீவி முடித்தாள்; வேலைக் கையிலே கொடுத்தாள்; போர்க்களத்தை நோக்கி அவனை விடுத்தாள். இவ் வீரமங்கையை ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண் புலவர் வியந்து பாடியுள்ளார்.

**மக்கள் வாழ்க்கை நலம்.**

இனி, அந்நாளில் தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையைக் குறித்துப் புறநானூறு பல செய்திகள் கூறுகின்றது. 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்றவாறு முற்கால மக்கள் மன்னனையே பின்பற்றி நடக்க முயன்றார்கள். அரசன் கடமையை அறிவிக்கின்ற புறநானூற்றுப் பாட்டு ஒன்று இக்கருத்தைக் குறிக்கின்றது. பிள்ளையைப் பெற்று வளர்ப்பது தாயின் கடமை என்றும், அவனை அறிவுடையவனாக்குவது தந்தையின் கடமை என்றும், ஒழுக்கநெறியில் நிறுத்துவது அரசன் கடமை என்றும் பொன்முடியார் என்ற புலவர் திறம் படப் பாடியுள்ளர்.

அரசன் அறநெறி தவறாதவனாய் ஆண்டுவந்தால் குடிகளுக்கு எவ்வகைக் கவலையும் இல்லை. அவன் அறநெறி தவறினால் மழை பருவத்திற் பெய்யாது; பசியும் பிணியும் குடிகளை வருத்தும். இது பழந்தமிழர் கொள்கை. இதனாலேயே 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்ற வாசகம் எழுந்தது.

வேளாண்மை என்னும் பயிர்த்தொழில் சிறந்த தொழிலாகக் கருதப்பட்டது. இல்லறம் துறவறம் என்னும் இருவகை அறமும் நாட்டில் நிலைபெறுதற்கு வேளாண்மை முட்டின்றி நடைபெறல் வேண்டும் என்பது தமிழ் நாட்டார் கண்ட உண்மை. அந்நாளில் வேளாளர் சிறந்த குடிகளாகக் கருதப்பட்டார்கள். அறத்தையும் அறிவை

யும் வளர்ப்பதற்கு இன்றியமையாத வளத்தை நாட்டிலே பெருக்கியவர் அவர்களே. இத்தகைய பெருமக்கள் இருத்தலாலேயே உலகம் நிலைபெற்றிருக்கின்றதென்று இளம்பெருவழுதி என்னும் பாண்டியன் பாடினான்.

இன்னும் வாழ்க்கைக்கு உரிய சிறந்த நெறிகளையெல்லாம் எடுத்தோதுகின்ற புறநானூறு எல்லாரும் கடைப்பிடித்தற்குரிய ஓர் அறத்தினைத் திட்டவட்டமாகக் கூறுகின்றது.

"பல்சான்றீரே, பல்சான்றீரே,
நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்ற அறவுரையைக் கடைப்பிடித்தல் தமிழ் மக்கள் கடனாகும்.

இலக்கிய நயம்.

புறநானூற்றுப் பாடல்களில் அமைந்துள்ள சொல்லையும் பொருளையும் பிற்காலப் பெருங்கவிஞர் பொன்னேபோல் போற்றினர். நாட்டில் வாழும் உயிர்களுக்கு அரசனே உயிர் என்ற உண்மை,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்று புறப்பாட்டிலே கூறப்படுகின்றது. இப்பாட்டின் சொல்லும் பொருளும் கம்பரால் போற்றப்பட்டுள்ளன. இராமனுடைய இனிய பண்புகளை எடுத்துரைக்கப் போந்த கம்பர்,

"கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்."

என்று அருளிப் போந்தார். இன்னும் புறநானூற்றுப் பாடல்களைத் தழுவி எழுந்த கவிகளும் நூல்களும் பலவாகும். தமிழறிஞரது துயரைத் தீர்ப்பதற்காகத் தன்

தலையைக் கொடுக்க முன்வந்த குமணவள்ளலின் பெருமையை விளக்கிப்பாடினர் ஒப்பிலா மணிப்புலவர்.

"அந்த நாள் வந்திலை அருந்தமிழ்ப் புலவோய்
இந்த நாள் வந்துநீ நொந்தெனை அடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே"

என்னும் பாட்டு புறநானூற்றுப் பாடலொன்றைத் தழுவி எழுந்ததாகும். இன்னும் பாரி வள்ளலைக் குறித்துக் கபிலர் பாடிய பாடல்களையே பெரிதும் ஆதாரமாகக் கொண்டு 'பாரிகாதை' என்னும் பனுவல் இக்காலத்தில் தோன்றியுள்ளது.

ஆகவே, புறநானூறு தமிழ்ச்சுவை தேரும் மாணவர்க்கு ஓர் இலக்கியக் கேணியாகும்; பழைமையைத் துருவுவார்க்குப் பல பொருள் நிறைந்த பண்டாரமாகும்; தமிழ்நாட்டுத் தொண்டர்க்கு விழுமிய குறிக்கோள் காட்டும் மணிவிளக்காகும். இத்தகைய பெருநூலைத் தமிழ் மக்களாகிய நாம் போற்றிப் படித்து இன்பமும் பயனும் எய்துவோமாக.

# 3. வேளாளப் பெருமக்கள் மகாநாடு*

## திறப்புரை

பெரியோர்களே! தாய்மார்களே!

பழம் பெருமை வாய்ந்த மதுரையம்பதியில் வேளாளப் பெருமக்கள் மகா நாடு இன்று கூடுகின்றது. வேளாண்குல மாந்தர் பல்லாயிரவர் இங்கே குழுமியிருக்கின்றார்கள். முன்னாளில் வேளாளராகிய நாம் இந் நாட்டில் மிக மேன்மை யுற்று வாழ்ந்திருந்தோம். வேளாளருக்குரிய பயிர்த்தொழிலைப் புகழாதார் தமிழ் நாட்டில் எவரு மில்லை. "மேழிச் செல்வம் கோழை படாது" என்பது இந் நாட்டார் கொள்கை. மேழியே வேளாண்மையின் சின்னம். அம்மேழிக்கொடி இந்த மகாநாட்டுக் கொட்டகையில் அழகுற மிளிர்கின்றது. அதனை 'வாழி வாழி' என்று வாழ்த்துகின்றோம்.

முன்னொரு காலத்தில் தமிழ் நாட்டிலே ஒரு திருமணம். மன்னரும் முனிவரும், பாவலரும், நாவலரும், குடிகளும், படைகளும் மண மாளிகையில் நிறைந்திருந்தார்கள். ஔவையாரும் அங்கே வந்திருந்தார். மன்னன் திருமகனே மணமகன். மணம் இனிது முடிந்தது. மங்கல வாழ்த்துத் தொடங்கிற்று. முனிவர் ஒருவர் எழுந்தார். 'மணமக்கள் பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க' என்று வாழ்த்தினர். 'இளவரசு வாழை யடி வாழை யென வையகத்தில் வாழ்க' என்று வாழ்த்தினார் மற்றொரு முனிவர். ஔவையார் எழுந்தார். "அரசே உன் நாட்டில் வரப்பு உயர்க" என்று வாழ்த்தினார். அவ் வாழ்த்துரையின் பொருத்தமும் பொருளும் அறியாத சபையார் ஒருவரை ஒருவர் வெறித்து நோக்கினர்.

---

***1-6-1947**ல் மதுரையில் நடைபெற்றது இம்மகா நாடு.

அது கண்ட ஔவையார் தம் வாழ்த்துரையின் கருத்தை விரித்துரைப்பாராயினர். "சபையோரே! வரப்பு உயர்க என்று இளவரசை நான் வாழ்த்தினேன். நிலத்தில் வரப்பு உயர, நீர் உயரும். நீர் உயர, நெல் உயரும். நெல் உயரக் குடி உயரும். குடி உயரக் கோன் உயர்வான்" என்று விளக்கம் கூறினர்.

தமிழ் நாட்டாரது கொள்கையை இவ்வாறு சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார் ஔவையார். உழவனே நாட்டின் உயிர் நாடி; அவன் ஊக்கமே அரசனது ஆக்கம்; அவன் கையால் நட்ட நாற்று முடி தழைத்தால் மன்னன் மணி முடி சிறக்கும் என்று புலவர் பாடினர்கள். அரசனது செங்கோலை நடத்தும் கோல் உழவன் ஏரடிக்கும் சிறு கோலே என்றார் கம்பர். உலகம் என்னும் தேருக்கு உழவனே அச்சாணி என்றார் வள்ளுவர். இதனாலன்றோ உழவன் கையைப் புகழ்ந்தனர் கவிஞர்?

"மேழி பிடிக்கும் கை, வேல்வேந்தர் நோக்கும் கை,
ஆழிதரித்தே அருளும் கை - சூழ்வினையை
நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடுழி
காக்கும்கை காராளர் கை."

என்ற பாட்டின் ஒவ்வொரு சொல்லும் உண்மை என்பது இன்று நாட்டுக்குப் படியளக்கும் அரசாங்கத்தார்க்கும் நன்கு தெரியுமன்றோ? சுருங்கச் சொல்லின் பயிர்த் தொழிலே நாட்டின் உயிர்த்தொழில். அத்தொழிலே பொல்லாப் பசியைப் போக்கும்; நல்லறத்தைக் காக்கும்.

இத்தகைய சிறந்த தொழிலைச் செய்யும் உழவன் பெருமை யெல்லாம் அவன் உழைப்பின் பெருமையே யாகும். உழவன் எந்நாளும் உழைப்பாளன்; நெற்றி வேர்வை நிலத்தில் விழ வஞ்சமின்றிப் பாடுபடுபவன். விளைநிலத்தை உழுது பண்படுத்தி, பருவத்தே

பயிர் செய்து, கண்ணுங் கருத்துமாய்க் களை பறித்து, நீர்ப் பாய்ச்சி, பயன் விளைக்கும் உழவன் பணியைப் பற்றிய பழமொழிகள் தமிழ் நாட்டிலே பல உண்டு. "உழுகின்ற காலத்தில் ஊர்வழி போனால் அறுவடை காலத்தில் ஆள் தேட வேண்டாம்" என்பது ஒரு பழமொழி. "வயலில் மோட்டை போனால் கோட்டை போச்சு" என்பது மற்றொரு பழமொழி. கண்ணினைக் காக்கும் இமை போல் பயிரினைக் காத்துப் பயன் விளைப்பவன் உழவன் என்பது இப் பழமொழிகளின் கருத்து.

உழவன் உழைப்பாளன் என்பது அவன் தொழிலைக் குறிக்கும் ஒரு சொல்லாலே விளங்கும். இக்காலத்தில் விவசாயம் என்பது உழவுத் தொழிலைக் குறிக்கின்றதல்லவா? அச் சொல் வடசொல். உழைப்பு என்பதே அச் சொல்லின் பொருள். மற்றத் தொழில்களை விட்டுப் பயிர்த் தொழிலை மட்டும் விவசாயம் என்ற சொல் ஏன் குறிக்கின்றது? தமிழ் நாட்டார் உழவனது உழைப்பே உழைப்பு என்று கருதியதாலன்றோ உழவுத் தொழிலை விவசாயம் என்று அழைத்தனர்?

பயிர்த் தொழிலைக் குறிக்கும் மற்றொரு சொல் வேளாண்மை. பயிர்த் தொழில் எவ்வளவு பழமை வாய்ந்ததோ, அவ்வளவு பழமை வாய்ந்தது வேளாண்மை என்ற சொல்லும். வேளாண்மை செய்பவர் வேளாளர். இந்நாட்டிலே அன்றும் இன்றும் வேளாளருக்குத் தனிச் சிறப்புண்டு. வேளாளர் தம் நிலத்தைப் பண்படுத்தியவாறு மனத்தையும் பண்படுத்தினார்கள்; தம் உழைப்பால் வந்த உணவுப் பொருள்களைத் தங்கு தடையின்றி எல்லோர்க்கும் தந்தார்கள்; அற்றாரையும் அலந்தாரையும் ஆதரித்தார்கள்; பசித்தோர் முகம்பார்த்துப் பரிவு கூர்ந்தார்கள்; வருந்தி வந்தவர் அரும்பசி தீர்த்து அவர் திருந்திய முகம் கண்டு

திளைத்தார்கள். அதனால் வேளாண்மை என்ற சொல்லுக்கே உபகாரம் என்னும் பொருள் வந்தது. திருக்குறளிலே அப்பொருளைக் காணலாம்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று திருக்குறள் பாடிற்று. இக்குறளில் வேளாண்மை என்ற சொல்லுக்குப் பரோபகாரம் என்பது பொருள். திருவள்ளுவர் காலத்திலேயே வேளாண்மை என்பது பரோபகாரம் என்ற பொருளில் வழங்கியிருக்குமானால் அதற்கு எவ்வளவு காலத்திற்கு முன்னமே வேளாளரிடம் அப் பண்பாடு தோன்றி வளர்ந்து சிறப்பாக இருந்திருக்க வேண்டும் என்பது உய்த்துணரத்தக்கது. "வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்று பழைய நீதிநூல் பாடியதும் இக்கருத்துப் பற்றி யன்றோ? திருஞானசம்பந்தரும் வேளாளருடைய பண்புகளைத் தேவாரத் திருப்பாட்டிலே கூறுகின்றார்.

"வேளாளர் என்றவர்கள்
வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர்"

என்பது அவர் தேவாரம். இப் பாட்டால் வேளாளர் சிறந்த உழைப்பாளர் என்பதும், கொடையாளர் என்பதும் திருஞானசம்பந்தர் கருத்தாகத் தெரிகின்றது.

பயிர்த் தொழில் செய்வதற்கு ஏர் இன்றியமையாதது. ஏரில்லாத குடியானவனுக்கு ஏற்றமில்லை.

"எரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்றுவர அணித்தாய்ச் செய்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது"

என்ற பாட்டு, சிறு குடியானவனுக்கு வேண்டுவனவற்றைக் கூறுகின்றது. குடிகளுக்குச் சீரும் சிறப்பும் ஏரால்

வரும் என்பது தமிழ்நாட்டார் கொள்கை. 'சீரைத்தேடின் ஏரைத் தேடு' என்று பணித்த நாடு தமிழ் நாடு. ஏரே நிலத்தைச் சீர்படுத்துவது. ஏரே பசிப்பிணியை வேரறுப்பது. ஏரே இனிமை தருவது; இன்பம் பயப்பது.

இத்தகைய ஏரை அழகிய பொருளாகக் கண்டனர் பழந் தமிழர். ஏர் என்ற சொல்லுக்கு அழகு என்னும் பொருள் பண்டைத் தமிழில் உண்டு. அழகுடைய இளங் கிளியை 'ஏர் ஆர் இளங்கிளியே' என்று அழைத்தார் மாணிக்கவாசகர். ஏரில் என்ன அழகு உண்டு? கோண மாணலாக,கட்டை நெட்டையாக,கரடு முரடாக இருப்பதன்றோ ஏர்? இத்தகைய கருவியில் அழகைக் கண்டது தான் தமிழர் பெருமை! தமிழர் பண்பாடு.

கண்ணுக்கு இனிய அழகு ஒன்றே அழகு என்று கொண்டாரல்லர் பண்டைத் தமிழர். கருத்துக் கினிய குணங்களின் அழகையும் அவர்கள் கொண்டாடினார்கள்; பயனுள்ள பொருள்களின் பண்பறிந்து பாராட்டினார்கள்; மழைபொழியும் மேகத்தை ஓர் அழகிய பொருளாகக் கண்டார்கள், எழிலி என்று அதற்குப் பெயர் இட்டார்கள். எழில் என்பது அழகு. அழகுடைய பொருள் எழிலி எனப்படும். அமிர்தம் போன்ற மழையைப் பொழிந்து, உலகத்தை வாழ்விக்கும் கார் மேகத்தின் கருணை அழகியதன்றோ? அவ்வாறே உழுகின்ற ஏரின் சீரை அறிந்து, அதனால் விளையும் பயனை உணர்ந்து, ஏர் என்ற சொல்லுக்கு அழகு என்னும் பொருளைத் தந்தார் பழந்தமிழர்.

முன்னாளில் ஏருக்கு இருந்த ஏற்றமும் எடுப்பும் வேறு எதற்கும் இருந்ததாகத் தோற்றவில்லை. படை எடுக்கும் வீரனையும், பாட்டிசைக்கும் புலவனையும் ஏரடிக்கும் உழவனாகவே கண்டது தமிழ் நாடு. திருவள்ளுவர் வில்லாளனையும், இனிய சொல்லாளனையும் ஏராளனாகக் காட்டுகின்றார்.

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை"

என்ற திருக்குறளில் வில்லையும் சொல்லையும் ஏராக உருவகம் செய்தருளினர் திருவள்ளுவர். அப்படியே வாளேந்திய வீரனை வாள் உழவன் என்றும், வேல் ஏந்திய வீரனை அயில் உழவன் என்றும் தமிழ்க் கவிஞர்கள் கூறக் காணலாம்.

ஏரால் விளையும் உணவுப் பொருள்களை யெல்லாம் ஒரு சொல்லால் உணர்த்தினர் தமிழ் நாட்டார். இக்காலத்தில் மளிகைக் கடை என்பது பலசரக்குக் கடையின் பெயராக வழங்குதல் போன்று, முற்காலத்தில் கூலக் கடை என்பது பலவகைத் தானியங்களும் விற்கும் கடைக்குப் பெயராக அமைந்தது. நெல்லும் புல்லும், வரகும் தினையும், எள்ளும் கொள்ளும், அவரையும் துவரையும், பயறும் உளுந்தும், பிறவும் கூலம் என்ற சொல்லாலே குறிக்கப்பட்டன. பெரிய நகரங்களில் கூல வீதிகள் சிறந்திருந்தன. சோழ நாட்டின் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்திலும், பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையிலும் "கூலங் குவித்த கூலவீதிகள்" இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இன்றும் கூல வீதியைத் திருநெல்வேலியிலே காணலாம். மேல ரத வீதியை அடுத்துள்ள தெரு, 'கூலக் கடைத்தெரு' என்றே இன்றும் வழங்கி வருகின்றது. மதுரைமாநகரில் கூலக் கடை வைத்திருந்த சாத்தனார் கூலவாணிகன் சாத்தனார் என்று பெயர் பெற்றார். அவரே மணிமேகலைக் காவியம் இயற்றிய கவிஞர் என்பர். அந்நாளில் இசையரங்குகளிலும், நடன சாலைகளிலும் உழவரை வாழ்த்தும் வழக்கம் இருந்ததாகத் தெரிகின்றது. நாடாளும் மன்னனை வாழ்த்திய பின்பு உணவளிக்கும் உழவனை வாழ்த்துவர் இசைவாணர். 'பதினெண் கூலமும் உழவர்க்கு மிகவே' என்னும் வாழ்த்துரை ஒருபழைய இசை நூலிற் காணப்படுகின்றது.

உழவுத்தொழிலால் மேன்மையுற்ற நாடொன்று 'நாஞ்சில் நாடு' என்று பெயர் பெற்றது. நாஞ்சில் என்பது ஏர். மலையாள மன்னருடைய ஆட்சியில் அமைந்துள்ளது நாஞ்சில் நாடு. அந்நாட்டை ஏராலே சீராக்கி உழைப்பாலே செழிப்பாக்கியவர் தமிழ்நாட்டு உழவரே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

முன்னாளில் சொன்ன சொல் தவறாதவர் என்ற பெருமை வேளாளருக்கு உண்டு. "ஊழிபேரினும் பெயரா உரையுடைய பெருக்காளர்" என்று வேளாளரைப் புகழ்ந்து பாடினார் கம்பர். அன்னார் வாய்மையை உயிரினும் அருமையாகப் போற்றி வாழ்ந்தனர். இதற்கு ஒரு சான்று கூறுவேன்.

தொண்டை நாட்டுத் திருவாலங்காட்டுக்கு அருகே பழையனூர் என்ற மூதூர் உள்ளது. அங்கே எழுபது வேளாளர் முற்காலத்தில் அறநெறி வழுவாது வாழ்ந்து வந்தனர். அவர்கள் வழிப்போக்கன் ஒருவனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் வண்ணம் நெருப்பில் இறங்கி உயிர் நீத்தார்கள். அச் செய்தி தமிழக முழுவதும் பரவியிருந்தது.

"மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகன் உயிரிழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியில் எழுபது பேரும் முழுகிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திரு ஆலங்காட்டப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ் மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்தளவிட்டு இவளவெனப் பேசலாமோ"

என்ற ஆன்றோர் பாட்டிலே இவ்வரலாறு பேசப்படுகின்றது. இவற்றையெல்லாம் இப்பொழுது நாம் மறந்து விட்டோம். தமிழ் நாட்டு மாணவன் ஒருவனை நோக்கிச்

"சொன்ன சொல் தவருதவர் யார்" என்று வினவினல் பழையனூர் வேளாளர் என்ற பதில் கிடைக்குமா? அவர் பெருமை தான் அவனுக்குத் தெரியாதே! அரிச்சந்திரன் பெயர் தெரியும்; அவன் கதை தெரியும். ஆதலால் அவன் படித்தகதைப்பாடத்திலுள்ள அரிச்சந்திரனையே எடுத்துக்கூறுவான். அப்படியே வரையாது பொருள்கொடுத்த வள்ளல் யார் என்று கேட்டால் பாரி என்றுசொல்ல நம் இளைஞர் படித்தாரில்லையே! கொடைக்குக் கர்ணன் என்பதுதானே அவர் படித்த பாடம்! இந்தப் பாண்டி நாட்டிலே யுள்ள பறம்புமலைக் கோமானகப் பாரி என்ற தமிழ் வள்ளல் விளங்கினன் என்பதும், "கொடுக்கிலாதானைப்பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று தேவாரமே அவன் பெருமையைப் பாடிற்று என்பதும் அறியாமல் இந்நாட்டில் வாழ்வது இழுக்கன்றோ? இனியேனும் நம் பிள்ளைகள் படிக்கும் நூல்களிலும், கேட்கும் கதைகளிலும், பார்க்கும் நாடகக் காட்சிகளிலும், பழையனூர் வேளாளரும், பாரி வள்ளலும் இவர்போன்ற பெருமக்களும் இடம்பெறல்வேண்டும் என்பதுஎன் ஆசை. இந்நாட்டிலே உழைப்பாலும், ஒழுக்கத்தாலும் ஒற்றுமையாலும் நம் முன்னோர் சிறப்புற்று வாழ்ந்தார்கள். அப்பண்புகளைப் பாதுகாத்து வளர்த்தல் வேண்டும். வருங்கால வாழ்க்கைக்கு இம்மாநாடு வழி காட்டுதல் வேண்டும் பல துறைகளிலும் நம் குலத்தார் முன்னேற்ற மடைவதற்குரிய முறைகளை வகுத்தல் வேண்டும். இவ்வரும் பெருஞ் செயல்களெல்லாம் நடைபெறப் போகின்ற வேளாளப் பெருமக்கள் மகா நாட்டை வாழ்த்துகின்றேன். மகா நாட்டின் தோற்றுவாயாக இதுகாறும் நான் பேசிய மொழிகளைக் கேட்டருளிய பெருமக்கள் அனைவரையும் மனமாரப் போற்றுகின்றேன்.

---

# II. இயற்கை இன்பம்

## 4. பொங்கலோ பொங்கல் *

தமிழ் நாட்டிலே பல சாதிகள் உண்டு; பல சமயங்கள் உண்டு. ஆயினும் தமிழர் எல்லார்க்கும் பொங்கல் நாள் ஒரு புனித நாள். அந்த நாளில் வீடுதோறும் சுதையின் விளக்கம்; வீதி தோறும் மங்கல முழக்கம். பொங்கல் பொங்கல் என்பதே எங்கும் பேச்சு.

பொங்கல்விழா நடைபெறும் காலமும் இனிய காலம்; கார் உலாவும் வானமும், நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலம்; இயற்கை அன்னை பசுமையான புடவை உடுத்து, பன்னிறப் பூக்களைச் சூடி, இனிய காயும் கனியும் கரும்பும் அணிந்து இன்பக் காட்சி தருங் காலம்.

பொங்கலுக்குத் தலைநாள் போகிப் பண்டிகை. அதைக்கொண்டாடும் கருத்தென்ன? போகி என்பவன் இந்திரன். அவன் மேகங்களை இயக்கும் இறைவன். தமிழ் நாட்டார் பழங்காலத்தில் இந்திரனை விளைநிலங்களின் இறைவனாக வைத்து வணங்கினார்கள். சோழவள நாட்டில் இந்திரவிழா இருபத்தெட்டு நாள் கோலாகலமாக நடைபெற்றது.

> "பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்க"

வேண்டும் என்று அவ்வானவனைத் தமிழ் நாட்டார் வழிபட்டார்கள். பண்டைத்தமிழரசர் காலத்தில் சிறப்பாக நடந்த அத்திருநாள், இப்பொழுது குன்றிக் குறுகி ஒரு நாளில் நடை பெறுகின்றது.

போகிப் பண்டிகையை அடுத்து வருவது பொங்கற் புதுநாள். அந்நாளில் 'பழையன கழிதலும் புதியன புகுத

---

* சென்னை, 'பாரத தேவி'யின் பொங்கல் மலரில் எழுதியது.

லும்' நிகழும். வீட்டிலுள்ள பழம்பானைகள் விடைபெறும். புதுப்பானைகளில் பொங்கல் நடைபெறும். பால் பொங்கும் பொழுது "பொங்கலோ பொங்கல்" என்னும் மங்கல ஒலி எங்கும் கிளம்பும். அப்போது பெண்கள் குரவையிடுவர்; பின்பு "பூவும் புகையும் பொங்கலும்" கொண்டு இல்லுறை தெய்வத்தை வணங்கி, வயிறுர உண்டு மகிழ்வர்.

பொங்கலுக்கு அடுத்த நாள் நிகழ்வது மாட்டுப் பொங்கல். நாட்டுப் புறங்களில் அது மிக ஊக்கமாக நடக்கும். முற்காலத்தில் மாடே செல்வமாக மதிக்கப்பட்டது. மாடு என்ற சொல்லுக்கே செல்வம் என்னும் பொருள் உண்டு. மன்பதைக்காக உழைக்கும் வாயில்லா உயிர்களில் மாட்டுக்கு ஒப்பாகச் சொல்லத் தக்கது மற்றென்று இல்லை. விளை நிலத்தில் ஏர் இழுப்பது மாடு; மரம் அடிப்பது மாடு; அறுவடைக் காலத்தில் சூடடிப்பது மாடு. களத்து நெல்லைக் களஞ்சியம் சேர்ப்பது மாடு. ஆகவே, மாடு இல்லையென்றால் பண்ணையும் இல்லை; பயிர்த் தொழிலும் இல்லை.

இன்னும், பாலும் நெய்யும் தந்து மாந்தர் உடலைப் பாதுகாப்பதும் மாடல்லவா? பாலில் உயர்ந்தது பசுவின் பால். சாந்தம் உடையது பசு; பொறுமை உடையது பசு. தன் கன்றுக்கு உரிய பாலைக் கவர்ந்து கொள்ளும் கல் நெஞ்சருக்கும் கரவாது பால் கொடுக்கும் கருணை வாய்ந்தது பசு. "அறந்தரு நெஞ்சோடு அருள் சுரந்து பால் ஊட்டும்" பசுக்களை ஆதரித்தல் வேண்டும் என்பது தமிழர் கொள்கை. கழனியிற் பணி செய்யும் காளை மாடுகளும், காலையும் மாலையும் பாலளிக்கும் கறவை மாடுகளும் நோயின்றிச் செழித்து வளர்வதற்காக நிகழ்வது மாட்டுப் பொங்கல்.

அந்நாளில் கன்று காலிகளுக்குக் கொண்டாட்டம். அவற்றை ஆற்றிலும் குளத்திலும் குளிர்ப்பாட்டுவர்;

கொம்பிலே பூவும் தழையும் சூட்டுவர்; மணிகளைக் கழுத்திலே மாட்டுவர்; இனிய தீனியை ஊட்டுவர்; பொங்கல் முடிந்தவுடன் அந்தி மாலையில் வீதியிலே விரட்டுவர். அவை குதித்துப் பாய்ந்து கும்மாளம் போடுவது கண்ணுக்கு இனிய காட்சியாகும்.

சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் பொங்கல் மங்கலாக நடந்து வருகின்றது. இன்றும் அந்த நிலை மாறி விடவில்லை. அரிசிப் பஞ்சமும், ஆடைப் பஞ்சமும், அகவிலைக் கொடுமையும் நாட்டை அரித்துக் கொண்டிருக்கும்பொழுது, பொங்கல் எப்படி இன்பப் பொங்கலாகும்?

"இனி வரும் பொங்கல் பெரும் பொங்கலாக வேண்டும்; தமிழ் நாட்டில் உள்ள வெற்றிடம் எல்லாம் விளை நிலமாக வேண்டும். உண்ண உணவும், உடுக்க உடையும் எல்லார்க்கும் கிடைக்க வேண்டும்; சென்னைமாநகரில் 'கன்ருவி'யாக வுள்ள தோற்கன்றுகள் ஒழிந்து பாற்கன்றுகள் பெருக வேண்டும்; தமிழ் நாடு தன்னரசு பெறுதல் வேண்டும்; தமிழ்த்தாய் அரியாசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும்" என்று எல்லாம் வல்ல ஆண்டவனை இந்நன்னாளில் வேண்டுவோமாக.

---

# 5. சித்திரை பிறந்தது *

தமிழ் நாட்டில் பங்குனி மாதம் கழிந்தால் எங்கும் மங்கல ஒலி. "கூனி குடி போகாதே; ஆனி அடி கோலாதே" என்பது பழமொழி. இப்படிக் கூனியும் ஆனியும் கூடா தென்று கருதும் தமிழர் சித்திரையைச் சிறந்த ஆர்வத் தோடு வரவேற்கின்றார்கள்; தமிழ் ஆண்டுப் பிறப்பை அதன் தலை நாளில் அமைத்துக் கொண்டாடுகின்றார்கள்; அந்நாளைப் புனித நாளாகப் போற்றுகிறார்கள். அதன் காரணம் என்ன?

சித்திரை மாதத்தில் இளவேனிற் காலம் தொடங்கு கின்றது. வசந்தம் என்னும் இளவேனில் இன்ப சுகந் தரும் காலம். அப்போது பசுமையான செழுஞ்சோலை பார்க்குமிடமெங்கும் கண்ணுக்கு விருந்தளிக்கும். மாஞ் சோலை மெல்லிய தளிராடைபுனைந்து இலங்கும். வேம்பின் கொம்பிலே பூத்த சிறு வெண்மலர்கள் புதுமணம் கமழும். தென்னை மரங்கள் இனிமையான இளநீரைத் தரும். பனை மரங்கள் சுவையான பதநீரைத் தரும்.

வசந்தகாலம் பிறந்ததென்று மகிழ்ந்து, பசுங்கிளிகள் மழலைமொழி பேசி, மரக்கிளைகளிலே கொஞ்சிக் குலாவும். கருங்குயில்கள் மறைந்து நின்று கூவும். "மன்னன் மாரன் மகிழ்துணையாகிய இன் இளவேனில் வந்தனன்" என்று குயில் கூவுவதாக இளங்கோவடிகள் பாடுகின்றார். எனவே, இளவேனிற்காலம் மன்மதன் மகிழ்ந்து ஆட்சி செய்யுங் காலம்.

புதுமணம் புரிய விரும்புவோர் சித்திரையின் வரவை மெத்த ஆசையுடன் நோக்குவர். திருமணத்திற் குரிய சூழ்நிலை அப்போது இயல்பாக அமைந்திருக்கும். பகலவன் ஒளி தருவான். வீடு தோறும் நெல்லும் பிற

---

* 'பாரத தேவி'யின் சித்திரை மலரில் எழுதியது.

வும் நிறைந்திருக்கும். தென்றல் என்னும் இளங்காற்று வீசிக்கொண்டிருக்கும். இனிய திருமணம் இன்பமாக நடைபெறும்.

இத்தகைய இன்பம் நிறைந்த இளவேனிலின் சுகத்தை ஈசனுடைய பேரின்பத்திற்கு நிகராகப் பாடுகின்றார் வடலூரடிகளார். இளங்கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளுதற் கேற்ற செழுஞ் சோலையாகவும், ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தெண்ணீராகவும், மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்ருகவும் ஈசனது இனிய கருணையைக் கண்டு போற்றுகின்றார் அக்கவிஞர்.

எனவே, இயற்கை அன்னை இனிய கோலத்தில் இலங்கும் காலம் இளவேனிற் காலம். மாந்தர் ஐம்பொறிகளாலும் நுகர்தற்குரிய இன்பம் பொங்கும் காலம் இளவேனிற்காலம். பனியால் நலிந்த மக்கள் பகலவன் ஒளியைக் கண்டு "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்று இன்புற்று ஏத்தும் காலம் இளவேனிற்காலம். எனவே, இயற்கையோடு இசைந்து வாழ்ந்த பழந்தமிழ் மாந்தர், இன்பநெறி காட்டும் இளவேனிற் பருவத்தின் முதல்நாளைத் தமிழ் ஆண்டில் தலை நாளாகக் கொண்டது மிகப் பொருத்தமுடையதன்றோ?

# 6. தமிழ்த் தென்றல்*

தென்னாட்டிலே தென்றல் என்றொரு பொருள் உண்டு; தனியே அதற்கொரு சுகம் உண்டு. வசந்த காலத்தில் தெற்கேயிருந்து அசைந்து வரும் தென்றலின் சுகத்தை நன்றாக அறிந்தவர் தமிழர். வடக்கே யிருந்து வரும் காற்றை வாடை என்றார்கள்; தெற்கேயிருந்து வரும் இளங்காற்றைத் தென்றல் என்றார்கள். வாடை என்ற சொல்லிலே வன்மை யுண்டு; தென்றல் என்ற சொல்லிலே மென்மை யுண்டு. தமிழகத்தார் வாடையை வெறுப்பர்; தென்றலில் மகிழ்ந்து திளைப்பர்.

இயற்கையன்னை இனிய கோலங்கொண்டு விளங்கும் இளவேனிற் காலத்தில், மெல்லிய தென்றலைத் தேராக வும், இனிய கரும்பை வில்லாகவும், குயிலைத் தூதாகவும் கொண்டு மன்மதன் ஆட்சி புரிகின்றான் என்று கவிஞர் பாடி மகிழ்வர்.

இத்தகைய தென்றல் பிறப்பு வகையிலும் சிறப்பு வாய்ந்தது. நறுமணங் கமழும் சந்தனச்சோலை சூழ்ந்த செந்தமிழ் மலையே அதன் பிறப்பிடம் என்பர்.

> "திங்கள்முடி சூடுமலை, தென்றல்விளை யாடுமலை
> தங்குமுகில் சூழுமலை, தமிழ்முனிவன் வாழுமலை"

என்று அம்மலையைப் புகழ்ந்து பாடினாள் ஒரு குறவஞ்சி. மெல்லிய முகிலைத் துகிலாக உடுத்து, வெள்ளிய மதியை முடியிலே அணிந்து விளங்கும் பொதிகைத் தாயின் மடியிலே தவழ்ந்து விளையாடும் இளங் குழந்தையாக அவ்வஞ்சிக்குத் தென்றல் காட்சி யளிக்கின்றது.

'திக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி'க்குத் திருஞான சம்பந்தர் எழுந்தருளிய பொழுது பொதிகைத் தென்றல்

---

*விருதுநகரிலே தோன்றியுள்ள "தமிழ்த் தென்றல்" என்ற பத்திரிகையின் தலையங்கம்.

அவரை வரவேற்று இன்ப சுகம் தந்தது. செழுஞ்சோலை களிலும், தாழம்பூக்களிலும் நுழைந்து, நறுமணம் கவர்ந்து வந்த பொதியத் தென்றலைத் தேவாரப் பாட்டில் இசைத்துப் பாராட்டினுர் அவ்விளங் கவிஞர்.

> ''துன்று தண் பொழில் நுழைந்து எழுவிய
>     கேதகைப் போதளைந்து
> தென்றல்வந் துலவிய திருநெல்வேலி
>     உறை செல்வர் தாமே''

என்பது அவர் திருப்பாட்டு. பொதிகையிலே தவழ்ந்த குழவித் தென்றல், நெல்லையம்பதியிலே நடந்து உலாவக் கண்டு இன்புறுகின்ருேம்.

மதுரைமாநகரின் அருகே கண்ணகியும் கோவலனும் நடந்து வந்த பொழுது தென்றல் அவரை எதிர்கொண்டு அழைத்தது. அதன் பிறப்பையும் வளர்ப்பையும் எடுத்து உரைக்கின்ருர் இளங்கோவடிகள்.

> ''மலயத்து ஓங்கி மதுரையில் வளர்ந்து
> புலவர் நாவிற் பொருந்திய தென்றல்''

என்பது அவர் புகழுரை. முத்தமிழ் முனிவன் வாழும் மலையிலே பிறந்து, சங்கத் தமிழ் வழங்கும் மதுரையிலே வளர்ந்த தென்றலைத் 'தமிழ்த் தென்றலாகவே' கருதி இன் புறுகின்ருர் கவிஞர்; புலவர் பாடும் புகழுடைய தென் றலைப் போற்றி மகிழ்கின்ருர்.

மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத பேரின்ப சுகத்தை ஓல்லும் வகையால் உணர்த்தலுற்ருர் ஓர் அருட் கவிஞர். இளவேனிற் காலம்; சித்திரை மாதம்; முழுமதி எங்கும் ஒளி வீசுகின்றது. தண்ணீர் நிறைந்த ஒரு தாம ரைக் குளத்திலே அவ்வொளி தவழ்கின்றது. இவ்வியற் கைக் காட்சியைக் கண்டு இன்புற்றிருக்கின்ருன் ஒருவன்; அப்போது தென்றல் அசைந்து வருகின்றது. அம்மெல்லிய காற்றிலே நல்ல வீணையின் ஒலி மிதந்து வந்து செவிக்கு

விருந்தளிக்கின்றது. இதனைக் கவிதையிலே காண்பது ஓர் ஆனந்தம்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்பது திருநாவுக்கரசர் இசைத்த பாட்டு. ஈசன் அளிக்கும் இன்ப சுகம் வசந்த காலத்தில் இசைந்த இயற்கை இன்பம் போன்றது என்று அருளினார் அவ் அருட் கவிஞர்.

புகழ் பூத்த பொதிய மலையிற் பிறக்கும் தென்றலைப் போன்று, பொருள் பூத்த விருதுநகரிலே பிறக்கின்றது 'தமிழ்த் தென்றல்". இலக்கிய மறுமலர்ச்சிச் சோலையிலே புகுந்து தமிழ்மணத்தையெல்லாம் தமிழ்த்தென்றல் வாரி வழங்கும் என்று தமிழகம் எதிர்பார்க்கின்றது. தென்றல் வீசும் காலத்தில் பிரிந்தவர் பொருந்துவர்; பிணக்கமுற்றவர் இணக்கமுறுவர்; ஊடி நின்றவர் கூடி மகிழ்வர் என்பது தமிழர் கொள்கை.

"ஊடினீர் எல்லாம் உருவிலான் தன்ஆணை

கூடுமின் என்று குயில் சாற்று"வதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. எனவே, தமிழ்த் தென்றல் தமிழர் இனத்திலே பிரிந்தவரைப் பொருத்தும்; வேறுபட்டவரை ஒன்றுபடுத்தும்; தமிழ்க் குலத்தை அரிக்கின்ற வேற்றுமைகளை ஒழிக்கும்; தமிழருக்கு இன்பநெறி காட்டும் என்று நம்புகின்றோம்.

## III. சிலம்புச் செல்வம்

### 7. காதலும் கற்பும்*

காதல் என்பது காதுக் கினிய சொல்; கருத்துக் கினியபொருள். காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு. காதல் இல்லையேல் ஒன்றும் இல்லை. ''காதல் காதல், காதல் — இன்றேல் சாதல், சாதல், சாதல்'' என்று பாடினர் பாரதியார், ஆயினும் அச்சொல்லை எல்லோரும் கூசாமல் பேசுவதில்லை. சின்னஞ் சிறியவர் காதில் அது விழலாகாதாம். கன்னியர் வாயில் அது வரலாகாதாம். இப்படி ஏன் அச்சொல் ஒதுக்கப்படுகின்றது? தமிழ்க் கவிகள் காதல் என்ற சொல்லை எடுத்தாள வில்லையா? நீதிநூல்களில் அச்சொல் வரவில்லையா? திருப்பாடல்களில் அது இடம் பெற வில்லையா? காவியங்களிலும், நீதி நூல்களிலும், திருப்பாசுரங்களிலும் பயின்ற அழகிய தமிழ்ச்சொல்லை ஏன் நாணிக் கோணி, கூசிக் கூசிப் பேச வேண்டும்? தேவாரத்திலே அடியாரது காதல் பேசப்படுகிறது.

''காதலாலே கருதும் தொண்டர்
காரணத்தர் ஆகி''

நின்ற சிவபெருமானைச் சுந்தரர் பாடுகின்றார். இன்னொரு பெரியார்—திருஞான சம்பந்தர், இறைவன் திருநாமத்தை ஓதும் காதலடியார் பெருமையைக் கூறுகின்றார்.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே''

என்பது அவர் திருப்பாட்டு. இவ்வாறு தேவாரம்

---

* சென்னை வானொலி நிலையத்திலே பேசியது; நிலையத்தார் இசைவுபெற்றுச் சேர்க்கப்பட்டது.

முதலிய தெய்வப் பாடல்களிற் பயின்ற காதல் என்ற சொல்லைக் கடி சொல்லாகக் கருதலாமோ?

காதல் என்னும் சொல்லின் பொருள் தான் என்ன? அன்பு என்றாலும் காதல் என்றாலும் பொருள் ஒன்றே. பெற்றோர்க்குப் பிள்ளையிடம் உள்ள அன்பு காதல்தான். 'கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள் மேல் காதல்' என்று கவிஞர் பாடவில்லையா? பெற்ற பிள்ளையைக் காதலன் என்று கூறுவதுண்டு. வாலியின் மைந்தனாகிய அங்கதனை 'வாலி காதலன்' என்று குறிக்கின்றார் கம்பர். இவ்வாறே நண்பனையும் காதலன் என்று கவியரசர் கூறுவர். கங்கைக் கரையிலே குகன் இராமனுடைய நண்பனாயினான். அவன் அன்பிற்குக் கங்கு கரையில்லை. அது கண்ட இராமன்,

> ''சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
> காதலனாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
> யாதினும் இனிய நண்ப இருத்தி ஈண்டு எம்மொடு என்றான்''

எனவே, பக்தியும் காதல், பிள்ளைப் பாசமும் காதல், நேசமும் காதல். சுருங்கச் சொல்லின் தலை சிறந்த அன்பே காதல்.

இவ்வளவு விரிந்த பொருளில் வழங்கிய காதல் என்ற சொல் இப்பொழுது ஆண் பெண் என்னும் இரு பாலாரிடையே உள்ள அன்பையே பெரும்பாலும் குறிக்கின்றது. காதலன் என்றால் கணவன்; காதலி என்றால் மனைவி. இவ்விருவரையும் இல்வாழ்க்கையில் இழுப்பது காதல். பின்பு இல்வாழ்க்கையை நல் வாழ்க்கையாக நடைபெறச் செய்வதும் காதல். கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது போல இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருவரையும் ஒரு நெறிப்படுத்துவது காதல். ''காதல் மனையாளும்

காதலனும் மாறின்றித் தீதில் ஒரு கருமம் செய்பவே"
என்றார் ஒரு கவிஞர்.

ஆதியில் காதல் மணமே தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிற்று. காதல் இல்லாத வாழ்க்கை உயிரில்லாத உடல் போன்றது, என்பது தமிழர் கொள்கை காதலுற்ற கன்னியர் தம் கருத்து நிறைவேறும்படி காமதேவனை வேண்டிக் கொள்ளும் வழக்கமும் முற்காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. காதல் விளைக்கும் காமதேவனைக் 'காமன்' என்றும், 'காமவேள்' என்றும் அழைத்தனர். கருதிய காதலனைக் கணவனாகப் பெறுவதற்கும், பிரிந்த கணவனை மீண்டும் அடைவதற்கும், காமன் கோயிலிற் சென்று மங்கையர் வழிபடும் வழக்கம் அந்நாளில் இருந்தது. கோவலன், மாதவி என்னும் நடிகையின் மையலிலே மூழ்கித் தன் மனைவி யாகிய கண்ணகியைப் பிரிந்திருந்த போது, காமவேள் கோவிலிற் சென்று தொழுதால் கணவன் மீண்டும் வந்து சேர்வான் என்று தலைமகளிடம் அவள் உயிர்த்தோழி எடுத்துரைத்தாள்.

> "கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
> காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
> தாமின் புறுவர் உலகத்துத் தையலார்"

என்று கூறினாள் தோழி. இதனால் காவிரிப்பூம் பட்டினத்தில் அந்த நாளிலே காமன் கோயில் இருந்ததென்றும் குலமாதர் அங்குச் சென்று வழிபடும் முறை இருந்ததென்றும் நன்றாக விளங்குகின்றது. இன்றும் தமிழ் நாட்டின் பல பாகங்களில் காமன் பண்டிகை கொண்டாடப் படுகின்றது. ஈசனுடைய நெற்றிக் கண்ணால் காமன் எரிந்து போனான் என்று வாதிப்பாரும், அப்படியில்லை என்று சாதிப் பாரும் —ஆக இருகட்சியார் இக்காலத்தும் தமிழ் நாட்டிலுண்டு.

காமம் என்ற சொல்லும், காமன் என்ற பெயரும் தமிழ் நூல்களிலே எடுத்தாளப்பட்டாலும் இன்று அவை இழிந்த பதங்களாகவே எண்ணப்படுகின்றன. காமம் என்பது வடசொல் இன்பம் என்னும் பொருள் அதற்குண்டு. "தர்மார்த்த காம மோட்சம் என்று வடமொழியாளர் கூறுவர். உறுதிப்பொருள்களை. இவ்வட மொழித்தொடருக்கு நேரான தமிழ், அறம் பொருள் இன்பம் வீடு என்பது. எனவே காமம் என்பது இன்பம் என்ற பொருளைத் தருகின்றது. திருவள்ளுவர் காலத்தில் காமம் இழிந்த சொல்லாகக் கருதப்படவில்லை என்று தெரிகின்றது. அறம் பொருள் இன்பம் என்ற மூன்றைப் பற்றி எழுதிய திருவள்ளுவர் இன்பப் பகுதிக்குக் காமத் துப்பால் எனப் பெயரிட்டார் என்றால் அவர் காலத்தில் காமம் இழிந்த சொல்லாகக் கருதப்படவில்லை என்பது தெரிகின்றதல்லவா?

ஆயினும் காலகதியில் காமம் என்பது துன்மார்க்கத் திற் பெறும் இன்பத்தைக் குறிப்பதாயிற்று. காமி, காமு கன் முதலிய சொற்கள் தூர்த்தன் என்ற பொருளிலே வழங்குகின்றன. காமுகன் கல்வி கற்பதற்குக் கூடத் தகுதியற்றவன் என்று நன்னூல் கூறுகின்றது.

இனி, காதலுக்கும் கற்புக்கும் உள்ள தொடர்பைச் சிறிது பார்ப்போம். காதல் என்பது உணர்ச்சி; கற்பு என்பது ஒழுக்கம். உணர்ச்சியால் ஒன்றுபட்ட நம்பியும் நங்கையும், (தலைமகனும் தலைமகளும்) ஒருவரை யொரு வர் தமக்கே உரியவராகக் கொண்ட நிலையிலே தோன்றும் ஒழுக்கமே கற்பு என்பர்.

சீதையின் காதலில் வைத்து இந்த உண்மையைக் காட்டுகின்றார் கம்பர். மிதிலை மாநகரத்தில், கன்னி மாடத்தின் மேடையிலே நின்ற சீதையும், வீதியின் வழி யாகச் சென்ற இராமனும் தற்செயலாக ஒருவரையொரு வர் நோக்கினர். இருவர் கண்களுக்கும் ஒத்தது; காதல்

பிறந்தது. காதலர் இருவரும் ஒருவர் இதயத்தில் ஒருவர் புகுந்து உறைவராயினர்.

இந்த நிலையில் இராமன் தன்னுடன் வந்த தம்பியோடும் முனிவரோடும் வீதியிற் சென்று மறைந்து விட்டான். அவன் இன்னான் என்று அறியாள் சீதை; அவன் எங்கே சென்றான் என்பதும் உணராள். ஆயினும் அவனையே கருத்தில் அமைத்துக் கரைந்து உருகுகின்றாள். அந்த வேளையில் ஓடிவருகின்றாள் அவள் தோழியாகிய நீலமாலை; ஆனந்தமுற்று ஆடுகின்றாள்; பாடுகின்றாள். தோழீ! என்ன செய்தி என்று கேட்கின்றாள் சீதை. அப்போது தோழி சொல்லுகின்றாள். "அயோத்தி அரசனுடைய மைந்தன்; அஞ்சன வண்ணன்; செந்தாமரைக் கண்ணன்; அவன் தம்பியோடும் முனிவரோடும் நம் மாளிகைக்கு வந்தான்; உன் திருமணத்திற்காக வைத்திருந்த வில்லைக் கண்டான்; எடுத்தான்; வளைத்தான்; ஒடித்தான்" என்று கூறி முடிக்கின்றாள்.

அப்பொழுது சீதையின் மனம் ஊசலாடத் தொடங்கிற்று. கவலை உண்டாயிற்று. வில்லை எடுத்து வளைத்து ஒடித்த வீரன் தான் கன்னிமாடத்திலிருந்து கண்ட காதலனோ? அல்லனோ? என்ற ஐயம் பிறந்தது. அவனாகத் தான் இருக்க வேண்டுமென்று ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு தோழி சொல்லிய அடையாளங்களை மீளவும் நினைத்துப் பார்த்தாள்.

"கோமுனி யுடன்வரு கொண்டல் என்றபின்
தாமரைக் கண்ணினன் என்ற தன்மையால்
ஆம் அவனே கொல் என்று ஐயம் நீங்கினாள்"

ஆனால் நொடிப்பொழுதில் மற்றொரு கருத்து அவள் மனத்தில் புகுந்தது. "என் தோழி சொல்லிய அடையாளங்கள் எல்லாம் உடைய மற்றொருவன் வில்லை வளைத்து

ஒடித்திருந்தால் நான் என்ன செய்வேன்'' என்று எண்ணி னாள்; ஏங்கினாள்.

அந்த ஏக்கத்தி னிடையே ஓர் ஊக்கம் பிறந்தது; உணர்ச்சினிடையே ஒழுக்கம் எழுந்தது. காதல் கற்பாக உருவெடுத்தது. 'அவன் அல்லனேல் இறப்பேன்'' என்று முடிவு செய்தாள். 'கண்ணுற்கண்ட காதலனும் வில்லை ஒடித்த வீரனும் ஒருவனேயாயின் அவனை மணம் புரிந்து வாழ்வேன். இல்லாவிட்டால் இறந்து படுவேன்' என்று உறுதிகொண்டாள் சீதை. கற்புநெறி என்பது இது தான். காதலனையன்றி மற்றொரு ஆடவனை மனத்திலும் கருத ஒருப்படாத உறுதியே கற்பு எனப்படும். இதையே திருவள்ளுவர் வியந்து பாடினார்.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின்''

என்பது அவர் திருவாக்கு.

கற்புடைய மாதரிடம் மென்மையும் உண்டு; மனத் திண்மையும் உண்டு. பொறுக்கும் திறமும் உண்டு; மாறு பட்டோரை ஒறுக்கும் திறமும் உண்டு. சிலப்பதிகாரத் தின் கதாநாயகியாகிய கண்ணகியிடம் இவ்விரு தன்மை யையும் பார்க்கின்றோம். கொண்ட கணவன் அவளுக் குக் கொடுமை செய்தான். செல்வத்தை யெல்லாம் செல வழித்தான். அயலார் அறியாமல் அல்லும் பகலும் கண் ணீர் வடித்தாள் கண்ணகி. மங்கல அணியைத் தவிர மற்றைய நகைகளை யெல்லாம் மறந்தாள். தன்னை அழகு செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை அறவே துறந்தாள்.

''அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப
பவள வாள் நுதல் திலகம் இழப்ப

மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி''

என்று கூறுகின்றது சிலப்பதிகாரம். அடக்கமும், பொறுமையும், கற்பும், கண்ணீரும் கண்ணகியின் வடிவம். "கண்டார் வெறுப்பனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்'' என்று ஆழ்வார் பாடிய திருப்பாட்டுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்தாள் கண்ணகி.

இத்தகைய மென்மையும் பொறுமையும் வாய்ந்த கண்ணகி மதுரைமாநகரில் கணவனை இழந்தபோது வன்மையின் வடிவம் கொண்டாள். கற்பெனும் திண்மை அவ் வடிவத்திலே களிநடம் புரிந்தது. அத்திண்மையைக் கண்டு திடுக்கிட்டான் அரசன்; அப்பால் அவள் பேசிய திடமொழியைக் கேட்டபோது மடங்கி விழுந்து மாண்டான். தவறு செய்த அரசனைக் கற்பின் திண்மையால் ஒறுத்த கண்ணகியை வீர பத்தினியாகக் கண்டது பண்டைத் தமிழ் நாடு. அன்று முதல் இன்றளவும் கண்ணகி மாதர் குல மணி விளக்காய், வீரக் கற்பின் விழுமிய கொழுந்தாய் விளங்குகின்றாள்.

———

# 8. கண்ணகிக் கூத்து

சிலப்பதிகாரம் என்னும் நாடகக் காவியம் தமிழ் நாட்டு மூவேந்தர்க்கும் உரியதாகும். கதைத் தலைவியாகிய கண்ணகி சோழநாட்டிலே பிறந்தாள்; பாண்டி நாட்டிலே தன் கற்பின் பெருமையை நிறுவினாள்; பின்பு சேரநாடு போந்து வானகம் எய்தினாள். ஆகவே நூலாசிரியர் சேர சோழ பாண்டியர்கள் ஆண்டு வந்த முந்நாட்டின் பெருமை யையும் முறையாக எடுத்துரைக்கின்றார். இவ்வுண்மை

> "முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
> அடிகள் நீரே அருளுக"

என்று சீத்தலைச் சாத்தனார் இளங்கோவடிகளை நோக்கிக் கூறுமாற்றால் இனிது விளங்கும். இவ்வாறு முந்நாட்டின் பெருமையையும் எழுதப்போந்த ஆசிரியர் அவற்றின் அர சியல் முறைகளையும், சமய நெறிகளையும், பிறவற்றையும் குறிப்பாகக் கூறியருளினார். ஆகவே முந்நாட்டின் நீர்மை யையும் ஒருங்கே எடுத்துரைக்கும் நூல் தமிழ்மொழியில் சிலப்பதிகாரம் ஒன்றேயாகும்.

மூவேந்தர்க்கும் உரிய நூலாக விளங்கும் சிலப்பதி காரம் முத்தமிழ் நயங்களும் அமைந்த அரிய நூலாகவும் திகழ்கின்றது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமி ழில் இயற்றமிழ், இனிய மொழிகளால் மாந்தர் அறி வினைக் கவர்ந்து உயரிய இன்பம் அளிப்பதாகும். இசைத் தமிழ், செவியின் வாயிலாக உள்ளத்தைக் கவர்ந்து உலப் பிலா இன்பம் பயப்பதாகும். நாடகத்தமிழ், இயற்றமி ழின் அழகையும், இசைத்தமிழின் சுவையையும், காட்சி யின் நலத்தோடு கலந்தளித்து மனத்தை மகிழ்விப்ப தாகும். நாடகசாலைக்குச் செல்வோர், மணிமுடி தரித்த மன்னரும், மதிநலஞ் சான்ற அமைச்சரும், வெம்படை தாங்கிய வீரரும், நல்லணி புனைந்த நங்கையரும், பிறரும் அரங்கத்தில் நடிக்கக் கண்டு களிப்புறுவர்; பண்ணார்ந்த

பாட்டின் இசைகேட்டு இன்புறுவர்; நாடகக் கதையில் அமைந்துள்ள கருத்தினை அறிந்து நலமுறுவர். இவ்வாறு கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இன்பமும் பயனும் ஒருங்கே எய்துவிக்கும் தன்மையாலேயே தமிழ்நாட்டு அறிஞர் நாடகத்தமிழைப் போற்றி வளர்ப்பாராயினர்.

மாந்தரை ஒழுக்க நெறியில் நிறுத்துதற்கு நாடகம் ஒரு சிறந்த கருவியாகும் என்பர். நல்ல நாடகங்களைக் காணும் மக்கள் அறத்தாறறிந்து ஒழுகத் தலைப்படுவர். உயிர்க்கு நலம்பயக்கும் உயரிய உண்மைகளைக் கொண்ட கதைகளே முற்காலத்தில் நாடகமேடைகளில் நடிக்கப் பட்டமையால், மக்கள் பெரும்பாலும் நன்மையில் நாட்டமும், தீமையில் அச்சமும் உடையராய் வாழ்ந்தார்கள். ஆனால் இக்காலத்தில் புன்னெறிப்பட்டோரை இன் புறுத்திப் பொருள் கவரும் நோக்கமே பெரும்பாலும் நாடக சாலையை இயக்குகின்றது. அதனாலேயே தற்கால நாடகங்களைக் காண்பதுவும் தீதென்று தக்கோர் கருது கின்றனர்.

தமிழ்நாட்டு நாடகமேடையில் நடைபெறும் கோவலன் என்னும் நாடகம் பழந்தமிழ்க் காவியமாகிய சிலப் பதிகாரத்திலுள்ள சிறந்த கதையைத் தழுவி எழுந்ததாகும். ஆயினும், நாடகக் கண்ணகிக்கும் காவியக் கண்ணகிக்கும் உள்ள வேற்றுமை புல்லுக்கும் நெல்லுக்குமுள்ள வேற்றுமையைப் போன்றது. கோவலனைக் 'கோவிலன்' என்றும், கண்ணகியைக் 'கர்னகி' என்றும் சிதைத்து வழங்கும் சிறுமை ஒருபுறமிருக்க, கற்பின் கொழுந்தாகிய கண்ணகி, நாடகமேடையில் ஆவேசமுற்று வெறியாட்டயர்வதும், தவறிழைத்த பாண்டியன் மார்பைப்பிளந்து அவன் குடரை மாலையாக அணிந்து குருதியிலே திளைத்துக் கூத்தாடுவதும் அருவருக் கத்தக்க காட்சியன்றோ? பெண்மைக்குரிய நாணமும் மென்மையும் அமைந்த நல்லியற் கண்ணகியை அலகை

போல் அலற வைத்தல் அழகாகுமோ? காளியாட்டங் கண்டு கல்லார் உள்ளங்களிக்கும் என்னும்காரணத்தால் கண்ணகியின் மேன்மையை அழித்தல் முறையாகுமோ? அன்றியும் நீதி வழுவா நெறிமுறையில் நின்ற நெடுஞ் செழியனுயிரை வலிந்து பிழிதலும் வேண்டுமோ? அவ் வரசன் நீதி தவறியதென்றறிந்த பின்னர் உயிர் வாழ இசைவானோ?

நாடகக் கண்ணகியின் தன்மை இவ்வாறாக, காவியக் கண்ணகியின் செம்மையும் மேன்மையையும் சிறிது காண் போம். மதுரைமாநகரில் கோவலன் கொலையுண்டிறந் தான் என்றறிந்த கண்ணகி பாண்டிய மன்னனிடம் வழக் குரைத்து நீதியை நிலைநிறுத்துமாறு அவன் மாளிகை யினுள்ளே சென்றாள். காவிமலரனைய கண்கள் கண்ணீர் சொரிய, கருங்கூந்தல் விரிந்து கிடக்க, ஒற்றைச் சிலம் பைக் கையிலேந்திக் கொற்றவன் முன்னே போந்த கண் ணகியின் கோலத்தை,

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்"

என்று சிலப்பதிகாரம் உருக்கமாக உரைக்கின்றது. கண் ணீருகுத்து நின்ற கண்ணகியைப் பாண்டியன் குழைந்து நோக்கி 'மனம் வருந்தி வந்த மாதே நீயார்? என்று வினவி னான். அதற்கு மாற்ற முரைக்கப்போந்த மங்கை 'அரசே கன்றை இழந்த பசுவொன்று மனங்கரைந்து கண்ணீர் வடிக்கக்கண்டு அவ்வான் கன்றைக் கொன்ற தன் அருமந்த மைந்தன் மீது தானே தேராழி ஊர்ந்து முறைசெய்த சோழமன்னனது புகழமைந்த புகார்நகரமே என் பதி யாகும். அந்நகரில் மாசாத்துவானுக்கு மகனாய்த்தோன்றி ஊழ்வினைப் பயனால் உன் நகரிற் புகுந்து, என்சிலம்பை விற்கப்போந்த வீதியில்உன் ஆணையால்கொலையுண்டிறந்த கோவலன் மனைவியேயான்' என்று கொதித்துக்கூறினாள். அப்பொழுது அரசன், 'மாதே! கள்வனைக் கொல்லுதல்

கொடுங்கோலன்று; அது நீதியின் நெறியேயாகும்' என்று நேர்மையாய் உரைத்தான். கோவலன் குற்றமற்றவனென்றும், அவனைக் குற்றவாளி என்று கொன்ற கொற்றவன் தவறிழைத்தான் என்றும், ஐயந்திரிபற விளக்க வந்த கண்ணகி, காவலனை நோக்கி, "அரசே! என் கணவன் கள்வனல்லன்; அவனிடம் இருந்த சிலம்பு அரண்மனைச் சிலம்பன்று. அதன் இணைச்சிலம்பு இதோ, என் கையில் உள்ளது. இதனுள்ளே அமைந்த பரல் மாணிக்கம்" என்று மயங்காதுரைத்தாள். அப்பொழுது மன்னவன் மனம் பதைத்து, தன் காவலாளர் கோவலனிடமிருந்து கொணர்ந்த சிலம்பினை எடுத்து வந்து கண்ணகியின் முன்னே வைத்தான். அச்சில்லரிச் சிலம்பைக் கண்ணகி தன் செங்கையால் எடுத்து நோக்கிக் காவலன் கண்ணெதிரே உடைத்தாள். சிலம்பின் உள்ளே இருந்த மாணிக்கம் விரைந்தெழுந்து அரியணை மீதமர்ந்திருந்த அரசனிடம் தானே நேராகச் சான்றுரைப்பதுபோல் அவன் முகத்தில் தெறித்தது. தெறித்து விழுந்த மாணிக்கத்தைக் கண்டான் மன்னன். அந்நிலையில் அவன் வெண்குடை தாழ்ந்தது; செங்கோல் தளர்ந்தது; 'பொற்கொல்லன் சொற்கேட்டுப் பிழைசெய்த யானோ அரசன்? யானே கள்வன்; இதுகாறும் என் வழிமுறையில் இத்தகைய பிழை செய்தார் எவருமில்லை. இன்றே என்னுயிர் முடிவதாக' என்று மயங்கி மண்மீது விழுந்தான். விழுந்த மன்னன் எழுந்தானல்லன்.

"தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே"

என்று சிலப்பதிகாரம் இரங்கிக் கூறுகின்றது. காவலன்

மயங்கி விழுந்து மாண்டதைக் கண்ட கோப்பெருந்தேவி, கணவனை இழந்து நின்ற கண்ணகியின் அடி பணிந்து பிழை பொறுக்குமாறு வேண்டினாள்.

இங்ஙனம் அறநெறி பிழைத்த அரசனுக்கு அறமே கூற்றாக அமைந்தது. 'அல்லவை செய்தார்க்கு அறங்கூற்ற மாம்' என்பது தமிழ் நாட்டு அரசியற் கொள்கையாகும். இவ்வுண்மையை உணர்த்துதல் சிலப்பதிகாரத்தின் குறிக் கோள் என்பது,

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டு மென்பதும்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என்ற அழகிய அடிகளால் அறியப்படும். அரசி யில் பிழைத்தோரை அறமே ஒறுக்குமென்றும், கற்ப மைந்த மாதரை மக்களும் தேவரும் போற்றுவ ரென்றும், வினையின் பயனை விலக்கலாகாதென்றும் இவ்வுலக மாந் தர் அறிந்து உய்யுமாறே இளங்கோவடிகள் சிலப்பதி காரம் இயற்றினார் என்பது இதனால் இனிது விளங் கும். இவ்வுண்மைக்கு முற்றும் மாறாக அரசியல் பிழைத்த பாண்டியன் அறத்தால் ஆவி துறவாது கண்ணகியின் மறத்தால் ஆவி துறப்பதை நாடகமேடையிலே காண்கின் றோம்! கணவனாகிய கோவலனையன்றி ஆடவர் எவரையும் சிந்தையாலும் தொடாச் செம்மை வாய்ந்த கண்ணகி, பாண்டியன் மெய்தீண்டி, அவன் மார்பைப் பிளந்து, உயி ரைப் பருகப் பார்க்கின்றோம்! இவ்வாறு தமிழ்நாட்டு மன் னர் அறமும், மாதர் கற்பும் நிலைகுலையுமாறு நிகழ்த்தப் பெறும் கூத்தைக் கண்டு கல்லார் நெஞ்சம் களிக்கு மெனினும் பழந் தமிழ்நாட்டின் பெருமை பாழ்படுவதைக் கண்டு பயனறிந்தோர் வருந்துவர்.

# 9. சிலம்பின் காலம்*

தமிழ் நாட்டார் போற்றும் ஐம்பெருங் காவியங்களுள் தலை சிறந்தது சிலப்பதிகாரம். பழந்தமிழ் நாட்டின் சீர்மைக்கும் செம்மைக்கும் சான்றாக நிற்பது அக்காவியம். சோழ நாட்டின் செழுமையும், பாண்டிய அரசாட்சியின் சிறப்பும், சேரநாட்டரசனது வீரமும், அக்காவியத்திலே விளங்கக் காணலாம்.

இத்தகைய சிலப்பதிகாரம் எப்பொழுது தமிழ்நாட்டில் எழுந்தது? அதைப்பாடிய இளங்கோவடிகள் எப்பொழுது தமிழ் நாட்டில் வாழ்ந்தார்? அவருடன் பிறந்த செங்குட்டுவன் எப்பொழுது அரசு வீற்றிருந்தான்? இவற்றைச் சிறிது பார்ப்போம்.

சிலப்பதிகாரத்தைப் பொது நோக்காகப் பார்க்கும் பொழுது தமிழ்நாடு சிறந்த நிலையில் இருந்த காலமே சிலப்பதிகாரக் காலம் என்று தோன்றுகின்றது. சேர, சோழ, பாண்டியர்கள் தமிழ் நாட்டை யாண்ட காலம் அது. இயல்,இசை, நாடகமென்னும் மூத்தமிழும் செழித்து வளர்ந்த காலம் அது. கடல் வழியாக நிகழ்ந்த வாணிபத்தால் தமிழ் நாட்டில் செல்வம் பெருகி நின்ற காலம் அது.

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் சிறந்த துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. காவேரியாறு கடலோடு கலக்கு மிடத்தில் வளமும் அழகும் வாய்ந்து விளங்கிற்று அந்நகரம். பட்டினம் என்னும் சொல் சிறப்பு வகையில் காவிரிப்பூம் பட்டினத்தையே குறிப்பதாயிற்று. இக்காலத்தில் பட்டணம் என்பது சென்னபட்டணத்தைக் குறிப்பதுபோன்று, அக்காலத்தில் பட்டினம் என்னும் பெயர் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வழங்கிற்று. அதன் அழகையும் அமைப்பையும்

---

* சென்னை வானொலி நிலையத்திலே பேசியது. நிலையததார் இசைவு பெற்றுச் சேர்க்கப்பட்டது.

கண்டு மகிழ்ந்த கவிகள் பூம்புகார் நகரம் என்றும் அழைத் தார்கள். "பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்று தும்" என்று பட்டினத்தைப் பாடினர் சிலப்பதிகார ஆசிரியர்.

அந்நகரின் துறைமுகத்தில் ஏற்றுமதியும் இறக்கு மதியும் இடையருது நடந்தது. தமிழ் நாட்டாரோடு வாணிகம் செய்து வளம் பெற்ற யவனர் என்ற கிரீக்கர் காவிரிப்பூம் பட்டினத்தின் கடற்கரையில் விண்ண ளாவிய மாடங்கள் கட்டி வசித்தார்கள். தெய்வ மணமும் அந்நகரிலே கமழ்ந்து கொண்டிருந்தது. சிவன்கோயில், முருகன் கோயில், பெருமாள் கோயில், வாசவன் கோயில் இன்னும் பல கோயில்கள் அங்கு நின்று அணி செய்தன. இந்திரன் திருநாள் கோலாகலமாக இருபத்தெட்டு நாள் கொண்டாடப்பட்டது. இங்ஙனம் காவிரிப்பூம்பட் டினம் பொருள் வளமும், தெய்வ நலமும் பெற்று விளங்கிய காலமே சிலப்பதிகாரக் காலம்.

அக்காலத்தில் சேரநாட்டை ஆண்டவன் ஒரு சிறந்த மன்னன். செங்குட்டுவன் என்பது அவன் பெயர். கற்புத் தெய்வமாய கண்ணகி தன் நாட்டில் வந்து விண் ணுலக மடைந்தாள் என்று அறிந்த செங்குட்டுவன் அவ ளுக்குத் தன் தலைநகரத்தில் ஒரு கோயில் கட்டினன்; இமய மலையிலிருந்து சிலை எடுத்து வந்து, கண்ணகியின் திருவுரு வம் செய்து அக்கோயிலில் நிறுவினுள். அத்திருவிழாவைக் காண அயல்நாட்டு அரசர் சிலரை அழைத்திருந்தான்.

"அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தனும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்"

அங்கு வந்திருந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறு கின்றது.

இக்காட்சிகளை எல்லாம் கண் களிப்பக் கண்டார் செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோ; அவர் செந்தமிழ்ச் செல்வர்; இளவரசுப் பதவியை உதறி யெறிந்து, முனிவராயிருந்து தவம் புரிந்தவர். அவர் அரச குலத்திற் பிறந்த பெருமையும், துறவு பூண்டு ஆற்றிய தவத்தின் அருமையும் தோன்ற இளங்கோ அடிகள் என்று தமிழுலகம் பாராட்டுவதாயிற்று. சிலப்பதிகாரம் பாடியவர் அவரே. இளங்கோ அடிகள் இயற்றிய காவி யத்தை 'நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்,' என்று போற் றினர் பாரதியார்.

"சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை கண்டதும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்ததும் தருமம் வளர்த்ததும்
..............................
அன்ன யாவும் அறிந்திலர் பாரதர்
ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்"

என்று பரிந்து பாடிய பாட்டில் சேரன் செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோவடிகளைப் போற்றுகின்றார் பாரதி யார்.

இத்தகைய சிலப்பதிகாரத்தின் காலத்தைத் தெரிந்து கொள்வதற்குச் சேரன் செங்குட்டுவன் காலத்தை ஆராய்ந்து அறிதல் வேண்டும். வீரனாகிய அச்சேரனைப் பல புலவர்கள் பாடியுள்ளார்கள். அவர்களுள் பரணர் என்பவர் ஒருவர். தமிழ் நாட்டில் சங்கப் புலவர்கள் என்று பாராட்டப்படுகின்ற புலவர்களுள் பரணருக்கும் கபிலருக்கும் ஒரு தனிப் பெருமை யுண்டு. 'பொய்யறியாக் கபிலரொடு பரணர் ஆதிப் புலவோர்' என்ற வரிசையில் வைத்துப் புகழப்பட்ட பரணர், சேரன் செங்குட்டுவனைப் பற்றிப்பாடிய பாடல்களுள் பதினொன்று நமக்குக்கிடைத்

துள்ளன. பரணரது புலமையையும் பண்பையும் பெரிதும் மதித்த சேரன் சிறந்த பரிசில் அளித்ததோடு தன் மகனையும் அவரிடம் மாணுக்கனுக ஒப்புவித்தான் என்பது பண்டை நூல்களால் தெரிகின்றது. எனவே, சங்கப் புலவர்களாகிய பரணர் முதலிய சான்றோர் வாழ்ந்த காலமே செங்குட்டுவன் காலமாகும்.

அக்காலத்தை இன்னும் சிறிது தெளிவாகத் தெரிந்து கொள்வதற்குச் சிலப்பதிகாரமே ஒரு சிறந்த சான்று தருகின்றது. கண்ணகியின் திருவிழாவிற்குச் சேரன் செங்குட்டுவன் அனுப்பிய அழைப்புக்கிணங்கி வஞ்சிமா நகரில் வந்திருந்து, பத்தினிக் கடவுளை வணங்கிய மன்னருள் ஒருவன் 'கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்' என்பதை முன்னமே கண்டோம். இலங்கையரசனுகிய கயவாகுவின் காலத்தைத் தெரிந்து கொண்டால் செங்குட்டுவன் காலமும் விளங்கி விடுமன்றே? இந்த வகையில் சரித்திர ஆசிரியர்களாகிய கனகசபை முதலிய அறிஞர்கள் ஆராய்ந்திருக்கிருர்கள். இலங்கையரசர் வரலாற்றைக் கூறும் 'மகா வம்சம்' என்ற நூலில் கஜபாகு என்னும் பெயருடைய மன்னர் இருவர் குறிக்கப்படுகின்றனர். முதல் கஜபாகு *கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் அரசாண்டவன். அவன் காலத்துக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு மற்றொரு கஜபாகு அரசு புரிந்தான். இவ்விரண்டு அரசர்களில் முதல் கஜபாகுவே செங்குட்டுவன் காலத்தவன் ஆதல் வேண்டும் என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கொள்கை. எனவே, செங்குட்டுவன் அரசாண்ட காலம் இரண்டாம் நூற்ருண்டின் பிற்பகுதி என்பது தெளிவாகின்றது. அதுவே சிலப்பதிகாரத்தின் காலமும் ஆகும்.

இக்கொள்கைக்கு இன்னும் ஆதாரமான செய்திகளிற் சிலவற்றைப் பார்ப்போம். கரிகாற் சோழன்

*கி. பி. 176—193.

என்னும் திருமாவளவன் காலத்திற்குப் பின்பு சோழநாடு உலைவுற்றுச் சீரழிந்தது. பூம்புகார் என்ற காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு சோழன் அரியணை ஏறினான். உறையூர் என்னும் உள்நாட்டுத் தலைநகரில் மற்றொரு சோழன் அரசனாயினான். புகார்ச் சோழனுக்கும் உறையூர்ச் சோழனுக்கும் போர் மூண்டது. அப்போரின் தொல்லை ஒருவாறு தீர்ந்த பின்பு, 'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழிப்படி சோழ நாட்டிற்கு ஒரு பெருந்தீங்கு நேர்ந்தது. குணகடல் கரை புரண்டு எழுந்து காவிரிப்பூம் பட்டினத்தை அழித்தது. இக்கொடுமை நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழமன்னன் காலத்தில் நிகழ்ந்ததென்று மணிமேகலை கூறும். அப்போது அந்த நகரில் இருந்த மாடங்கள், கோயில்கள், கோட்டங்கள் எல்லாம் அழிந்தொழிந்தன. அரண்மனையை இழந்த அரசன் அந்நகரினின்றும் வெளியேறிய செய்தியை இரக்கத்தோடு கூறுகின்றார் மணிமேகலையாசிரியர்.

> "விரிதிரை வந்து வியன்நகர் விழுங்க
> ஒருதனி போயினன் உலக மன்னவன்"

என்னும் மணிமேகலை அடிகளில் சோகம் நிறைந்திருக்கிறது. துன்பம் வந்துற்ற போது துணையாவார் யாருமின்றித் தன்னந்தனியனாய் அந்நகரினின்றும் சென்றான் மன்னர் மன்னன் என்பது அவ்வடிகளின் கருத்து.

இவ்வாறு அழிந்ததாக மணிமேகலையிற் சொல்லப்படுகின்ற காவிரிப்பூம்பட்டினம் ஏழாவது நூற்றாண்டில் எழுந்த தேவாரப் பாசுரத்தில் ஒரு சிற்றூராகக் குறிக்கப்படுகின்றது. சிலப்பதிகாரத்திற்கும் தேவாரத்திற்கும் இடைப்பட்ட ஐந்நூறு ஆண்டுகளில் சோழ மன்னர் தம் நிலையில் தாழ்ந்தனர். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாளத் தலைப்பட்ட பல்லவர்கள் சோழ

நாட்டிலும் ஆணை செலுத்தினர். பழம் பெருமையெல்லாம் இழந்து நின்ற காவிரிப்பூம் பட்டினத்தில் அன்புகொண்டு ஒரு பல்லவன் அங்குச் சிவாலயம் கட்டினான்: அதற்குப் பல்லவனீச்சரம் என்று பெயரிட்டான். பல்லவன் கட்டிய ஈசன் கோயில் ஆதலின், அது பல்லவனீச்சரம் என்று பெயர் பெற்றது. தேவாரம் பாடிய திருஞான சம்பந்தர் காலத்தில் பல்லவனீச்சரம் அவ்வூரிற் காட்சி யளித்தது. "பட்டினத்துறை பல்லவனீச்சரம்" என்று அக்கோவிலைப் பாடினார் அப்பெரியார். எனவே காவிரிப்பூம்பட்டினம் சோழர் ஆட்சியில் சிறப்புற்று விளங்கிய காலம் சிலப்பதிகாரக் காலம். அது பதங்குலைந்து பல்லவர் ஆட்சியில் அமைந்த காலம் தேவாரக்காலம் என்பது தெளிவாகின்றது.

தமிழ்நாட்டில் பல்லவர் எப்போது அரசாண்டனர்? மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை என்று சரித்திர ஆசிரியர் கூறுவர். சிவனடியார் பாடிய தேவாரத்திலும், திருமால் அடியார்களாகிய ஆழ்வார்களது திருப்பாசுரத்திலும் பல்லவர் குறிக்கப் படுகின்றனர். ஆனால் சிலப்பதிகாரத்தில் அம்மன்னரைப் பற்றிய குறிப்பு ஒன்றுமில்லை. ஆதலால், சிலப்பதிகாரம் எழுந்த காலம் பல்லவர் ஆட்சிக்கு முற்பட்ட காலம் என்று கொள்ளப்படுகின்றது.

தொன்று தொட்டுத் தமிழகத்தை ஆண்டு வந்த சேர சோழ பாண்டியர், பேரும், புகழும், பெருவாழ்வும் பெற்றிருந்த காலத்திலேதான் சிலப்பதிகாரம் பிறந்தது. விண்ணளாவி நிற்கும் இமயமலையில் சோழநாட்டுப் புலிக் கொடியை ஏற்றினான் கரிகால் சோழன். சேரநாட்டு அரசனாகிய நெடுஞ்சேரலாதன், 'தென்குமரி முதல் வட இமயம் வரை ஒரு மொழிவைத்து உலகாண்ட சேரலாதன்' என்று குறிக்கப்படுகின்றான். அவன் ஆணை இமயமலை

யளவும் சென்றமையால் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்றும் தமிழ் நாட்டில் வழங்கப்பெற்ருன். அவன் மகனே சேரன் செங்குட்டுவன். தந்தையின் புகழைத் தானும் பெற ஆசைப்பட்டு 'வடநாட்டின்மீது படையெடுத்தான்; தமிழரசரைப் பழித்துப் பேசிய வடநாட்டரசரைப் போர்க்களத்திலே வாட்டி வென்ருன்; இருவரைச் சிறை பிடித்தான்; தன் நாட்டிற்குக் கொண்டு வந்தான். கண்ணகி தெய்வத்திற்குச் சேரன் திருவிழா எடுத்தபோது அவ்விருவரும் உடனிருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. எனவே தமிழ் நாட்டாரின் வீரப்புகழ் வடநாட்டிற் பரவியிருந்த காலம்; தமிழ்நாடு வாணிகத்தால் வளம் பெற்று ஓங்கி நின்ற காலம்; தமிழ்ப் புலவர் பல்லாயிரவர் தமிழ்த் தாய்க்குப் பலவகையான கவிதைக் கலன்களை அணிந்து கோலம் செய்துகொண்டிருந்த காலம்; அக்காலமே சிலப்பதிகாரத்தின் காலம்.

# IV. அறிவும் திருவும்

## 10. காயும் கனியும்

மலைவளமுடைய தமிழ்நாட்டில் முற்காலத்தில் அருந்தவம்முயன்ற முனிவர்கள் காய்கனிகளையே அருந்தி வாழ்ந்தார்கள். நாவிற்கினிய நற்கனிகளும் காய்களும் தமிழ் நாட்டுத் தென்மலையில் நிறைந்திருந்தமையால் ஆன்றோர் பலர் அம்மலையில் வாழ்ந்து அருந்தவம் புரிவாராயினர். தமிழ் முனிவன் வாழும் பொதிய மலையில் பன்னீராண்டு முனிவர் ஒருவர் அருந்தவம் புரிந்தார். நெடுந்தவம் முடிந்த நிலையில் பசியின் கொடுமை யறிந்த முனிவர் அம்மலையிலிருந்த ஒரு நாவல் மரத்தின் நற்கனியைக் கொய்து அதைத் தேக்கிலையிற் பொதிந்து, அருகே யிருந்த ஆற்றை நோக்கிச் சென்றார். பன்னீராண்டுக்கு ஒரு முறை பழுக்கும் பெருமை வாய்ந்த அக்கனியை ஆற்றங்கரையில் வைத்துவிட்டு நீராடப் போந்தார் முனிவர். அப்பொழுது அவ்வழியாகத் தன் காதலனுடன் களித்து விளையாடி வந்த ஒரு சிறுமி அக்கனியைக் காலால் மிதித்துச் சிதைத்தாள். அரும்பசி தீர்க்கும் அமுதக்கனி சிதைந்தழியக் கண்ட தவமுனிவர் சீற்றமுற்று 'பன்னீராண்டு நீ கடும் பசியால் நலிந்துழல்க' என்று பிழை செய்த பேதையைச் சபித்தார். அச்சாபத்தின் வலிமையால் அன்றுமுதல் வயிறு காய்ந்து வருந்திய மங்கை பன்னீராண்டு பசியால் வருந்திய பின்பு அமுதசுரபியினின்று மணிமேகலை வழங்கிய அன்னத்தை உண்டு பசி தீர்ந்தாளென்று பழஞ் சரிதை கூறுகின்றது.

அமுதம் சுரக்கும் நெல்லிக் கனி தமிழகத்தில் உண்டு என்று அறிந்தான் அதிகமான் என்ற சிற்றரசன்; அதனை அருந்தி நீடு வாழ ஆசை யுற்றான். மந்திய மறியா

மரங்கள் செறிந்த தென்மலையில், பளிங்கரும் அணுகுதற் கரிய விடரொன்றில் நின்றது அங்நெல்லி. அதை அறிந்த காவலன் பல்லாண்டுகளாகப் பெரிதும் முயன்று, விடரை அடைவதற்கு வழியமைத்து, மருந்து தூவி மலை வண்டுகளை விலக்கி, மஞ்சினில் மறைந்திருந்த செழுங்கனியைக் காவலாளர் மூலமாகப் பெற்ருன். பல்லாண்டுகளுக்கு ஒருமுறை பழுக்கும் பான்மை வாய்ந்த அங்நெல்லிக்கனியின் வண்ணத்தை வள்ளல் அங்கையில் வைத்து நோக்கி அகமகிழ்ந்திருக்கையில், சொல்லின் செல்வியாய ஔவையார் செந்தமிழ்க் கவி பாடி அவன் முன்னே சென்ருர். அப்பாட்டின் சுவையைச் செவி வாயாகப் பருகிய அதிகமான் மதுவுண்டவன்போல் மகிழ்வுற்ருன். அதி மதுரக்கவி பாடிய ஔவையார்க்கு அமுதம் பொழியும் நெல்லிக் கனியே ஏற்ற பரிசென்று எண்ணி அங்கையில் இருந்த கனியை அவரிடம் அகமலர்ந்தளித்தான். அங்நெல்லிக் கனியினை ஔவையார் அருந்திய பொழுது அதன் தீஞ்சுவையினை அறிந்தார்; திகைப்புற்ருர். அங்நிலையில் அதிகமான் அங்நெல்லிக் கனியின் அருமை பெருமைகளை எடுத்துரைத்துச் செழுந் தமிழ்க் கவி பொழியும் செந்நாப் புலவர்க்கு அமுதம் சுரக்கும் அருங்கனியே அமைந்த உணவாகும் என்று மனமகிழ்ந்துரைத்தான். பலநாள் முயன்று வருந்திப்பெற்ற அருங்கனியைத் தானருந்தி இன்புறக்கருதாது பாடிவந்த பாட்டிக்கு அதனைப் பரிசாக அளித்த வள்ளலின் அருங்குணத்தை ஔவையார் வாயாரப் புகழ்ந்து வாழ்த்திஞர்.

"நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக் கீத்தனையே"

'பொன்னொளி மாலை யணிந்த வள்ளலே! அணுகுதற் கரிய மலைவிடரில் அமைந்த இனிய கனியின் அருமையும் கருதாது, பயனையும் குறியாது, அக்கனியை என்னிடம் உவந்தளித்தனையே! உன் பெருமையை ஏழையேன் எவ்வாறு புகழ்வேன்? பாலாழியில் எழுந்த அமுதினைப் பிறர்க்களித்து நஞ்சுண்டு கண்டம் கறுத்த செஞ்சடைக் கடவுள் போல் நீயும் என்றென்றும் இவ்வுலகில் வாழ்வாயாக' என்று நிறைந்த மொழிகளால் ஔவையார் அருளிய வாழ்த்துரையில் கருநெல்லிக்கனியின் வரலாறும், அதனை அன்புடன் அளித்த அதிகமானது வள்ளன்மையும் ஒருங்கே விளங்கக் காணலாம்.

ஒருவன் உண்ணும் பொருளைப் பசித்த உயிர்களுக்குப் பகுத்துக் கொடுத்தலே அறங்களுள் எல்லாம் தலையாய அறமென்று தமிழ்மறை கூறுகின்றது. இவ்வாறு அறநூலோர் விதித்ததற்கும் மேலாகத் தன்னலம் மறுத்துப் பிறர் நலம் பேணும் பெருந்தகைமை சாலச்சிறந்த தென்பது சொல்லாமலே விளங்கும். தான் அருந்திப் பயன் பெறுமாறு வருந்திப் பெற்ற அருங்கனியை ஔவையாருடன் பகுத்துண்ணவும் எண்ணாது, முழுக்கனியையும் அக்கவிஞர்க்கு ஈந்து மகிழ்ந்த வள்ளலின் பெருமை உலகமுள்ளளவும் அழியாததன்றோ? இப்பண்பினைக்கண்டு வியந்த புலவர் ஒருவர்,

> "கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
> அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
> அரவக் கடற்றானை அதிகன்"

என்று புகழ்ந்துரைத்தார்.

இத்தகைய அமிழ்தூறும் அருங்கனிகள் தமிழகத்தில் முன்னாளிருந்தமையாலேயே, 'கனியிருப்பக் காய்கவர்தல் ஆகாது' என்று ஆன்றோர் கட்டுரைப்பார் ஆயினர். கனி என்னும் சொல் பொதுவாகப் பழங்களை எல்லாம்

உணர்த்து மாயினும் சிறப்பு வகையில் அமிழ்தம் பொழியும் அருங்கனியையே குறிக்குமென்பது அறிஞர் கருத்து.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்னும் திருக்குறளில் அமைந்த 'கனி' யென்னும் சொல் ஔவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தான கனிகளைக் குறிக்குமென்று பரிமேலழகர் விளக்கியருளினார். இன்னும் ஆண்டவனைப் போற்றாது ஆற்றநாள் போக்கிய புன்மையை நினைந்து வருந்திய திருநாவுக்கரசர்,

"கொய்யுலாமலர்ச் சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூரரைக்
கையினால் தொழா தொழிந்து
கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே"

என்று அருளிய தேவாரத் திருப்பாட்டிலும் 'கனி' என்னுஞ் சொல் அழியாப் பெரு வாழ் வளிக்கும் அமுதக் கனியையே குறிப்பதாகும். இத்தகைய கனியினைப் பெற்றும் அதனைத் தானருந்தி நெடுங்காலம் வாழ விரும்பாது தக்கார்க் கீந்து இன்பமுற்ற வள்ளலை ஈன்ற தமிழ்நாடு அறநெறியில் தலை சிறந்ததென்பதில் ஐயமுண்டோ?

# 11. சேரனும் கீரனும்

தமிழ்நாடு தன்னரசு பெற்று வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழி தலை சிறந்து விளங்கிற்று. தமிழறிந்த மன்னர் ஆட்சியில் முத்தமிழும் முறையே வளர்ந்தோங் கித் திகழ்ந்தது. அறிவினைக் கொல்லும் வறுமை வாய்ப் பட்டு வருந்திய தமிழ்ப் புலவர்களைத் தமிழ் நயமறிந்த அரசர் ஆதரித்துப் போற்றுவாராயினர்.

சேர நாட்டை ஆண்டுவந்த பெருஞ்சேரல் என்ற அரசன் ஆண்மையிலும், வண்மையிலும் சிறந்து விளங்கி னான். அம்மன்னன் சோழநாட்டை ஆண்ட வளவனை யும், பாண்டிநாட்டை ஆண்ட மாறனையும் வென்று, ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த அதிகமானின் வலி யழித்துத் தமிழுலகம் போற்றத் தனிக்கோலோச்சி வந் தான். சேரமானது படைத்திறங் கண்டு அஞ்சி அவனடி தொழுத முடிவேந்தர் பலராயினர்.

இத்தகைய கீர்த்தி வாய்ந்த சேரமானது கொடைத் திறத்தினைக் கேள்வியுற்ற மோசுகீரனார் என்ற தமிழ்ப் புலவர், அம்மன்னிடம் பரிசு பெற்றுப் பசிப்பணி அகற்ற க்கருதி,நெடுவழி நடந்து அரண்மனைவாயிலை நண்ணினார். அப்பொழுது சேரமான் ஓர் அணி விழாக் காணுமாறு வெளியே சென்றிருந்தான். ஆயினும் அரண்மனை வாயில் அடையாதிருந்தமையால் கீரனார் இடையூறின்றி உள்ளே சென்றார்; மன்னனுக் குரிய மாளிகையின் அழகையும் அமைப்பையும் கண்குளிரக் கண்டு களித்தார். மாடத் தைச் சூழ்ந்திருந்த சோலையின் வழியே தவழ்ந்து வந்த மெல்லிய தென்றல் நறுமணம் கமழ்ந்தது. நெடும் பசியால் நலிந்து, வெயிலால் உலர்ந்து, வழிநடையால் வருந்தித் தளர்வுற்ற தமிழ்ப்புலவர் அவ்வரண்மனையில் இருந்து இளைப்பாற எண்ணினார். அதற்கு ஏற்ற

இடத்தை நாடுகையில், மாளிகையின் ஒரு பால் அழகிய மஞ்சம் ஒன்று தோன்றிற்று. அம் மஞ்சத்தில் மெல்லிய பஞ்சமைந்த மெத்தையிட்டு, அதன்மீது பாலாவி போன்ற பூம்பட்டு விரித்திருந்தது. மஞ்சத்தைக் கண்ட புலவர் நெஞ்சம், பள்ளத்துட் பாயும் வெள்ளம்போல் அதன் மீது படர்ந்தது; வண்ணப் பூஞ்சேக்கையைக் கையினுல் தொட்டு இன்புறக்கருதி அதன் அருகே சென்ருர். மருங்கு செல்லச் செல்ல அம்மஞ்சம் அவர் மனத்தை முற்றும் கவர்ந்து தன் வசமாக்கிக் கொண்டது. கையினுலை அதன் மென்மையை அறிய விரும்பி அணுகிய புலவர் மெய்மறந்து அதன்மீது சாய்ந்தார். அந்நிலையில் என்றும் அறியாத பேரின்ப முற்ருர். அவ்வின்ப சுகத்தில் மற்றெல்லாம் மறந்து சற்றே கண் மூகிழ்த்தார். இயற்கை நல மறிந்த புலவரை இளைப்பாற்றக் கருதிய தமிழ்த் தென்றல் இன்புறத் தவழ்ந்து போந்து அவர் கண்களை இறுக்கியது. அருந் தமிழ்ப் புலவர் இனிய உறக்கத்தில் ஆழ்ந்தார்.

கந்தை உடுத்த செந்தமிழ்ப்புலவர் இவ்வாறு கவலையற்று உறங்குகையில் சேரமான் தானைத்தலைவர் புடை சூழத் தன் மாளிகையை வந்தடைந்தான். விழவாணிகண்டு மகிழ்ந்த அமைச்சர்க்கும் தானைத்தலைவர்க்கும் விடை கொடுத்த பின்பு, சிறிது இளைப்பாற எண்ணினுன். விழா விற்காக அணிந்திருந்த ஆடை அணிகளையும், உடைவாளையும் களைந்தான்; அரண்மனை ஒடுக்கத்திற் போந்து இளைப்பாறக் கருதி வீரமுரசத்திற் குரிய மணி மஞ்ச மாடத்தின் வழியே சென்ருன்; அங்கே பழுத்த மேனியும் நரைத்த முடியும் வாய்ந்த பெரியார் ஒருவர் தளர்ந்து கண் வளரக் கண்டான்; அவரது முகத்தின் விளக்கத்தால் அவர் வாக்கில் ஒளியுண்டெனத் துணிந்தான். அவரணிந்திருந்த பழுதுற்ற உடையினைக்கண்டு பூமகளால் புறக்கணிக்கப் பட்டவர் எனத் தெளிந்தான்.

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்னும் பொருளுரையை நினைந்து பொருமினன். அருந்தமிழறிந்த புலவரது மேனி தோய்ந்ததால் வீர மணி மஞ்சம் புனிதமுற்ற தெனக் கருதி மனமகிழ்ந்தான். அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்த பாவலர்க்குப் பணி செய்யக் கருதி மஞ்சத்தின் அருகே கிடந்த பெருங்கவரியைத் தன் வலக்கையால் எடுத்து வீசி நின்றான். செங்கோலும் வெம்படையும் பற்றிப் பழகிய கையினால் சேரமான் பணியாளர்க் குரிய கவரியைப் பற்றிக் குழைத்துக் கவிஞர்க்குப் பணி செய்வானாயினன்.

உறக்கம் தெளிந்த கீரனார் தளர்வு தீர்ந்து கண் விழித்தார்; மெல்லிய மஞ்சத்திலே தாம் படுத்திருப்பதையும், காவலன் அதனருகே நின்று கவரி வீசுவதையுங் கண்டு உளம் பதைத்தார்; தாம் கண்ட காட்சி கனவோ நனவோ என ஐயுற்று மனங் குழம்பினார். கீரனது மன நிலை அறிந்த சேரன், அவ்வறிஞரைப் பற்றி நின்ற ஐயத்தையும் அச்சத்தையும் ஒருங்கே அகற்றக் கருதி அன்பளாவிய இன்ப மொழி இயம்பினன். அம்மொழி கேட்ட கீரனார் திடுக்கிட்டெழுந்து மன்னனுக்குச் செய்த பிழையை நினைந்து மனம் பதைத்தார். மெய் முழுதும் நடுங்க, கண்கள் அச்சத்தால் இடுங்க, மஞ்சத்தினின்றும் இறங்க முயன்றார். இங்ஙனம் பாவலர் மனமும் மெய்யும் வருந்தக் கண்ட சேரமான், அன்போடு அமர்ந்து நோக்கி மென்மொழி பேசி, அவர் மனத்திலிருந்த அச்சத்தை மாற்றினன். புலவரும் ஒருவாறு மனந்தேறி, நடுக்கம் தீர்ந்து, மன்னவன் பெருமையை மனமாரப் புகழலுற்றார். செந்தமிழ் இன்பமே சிறந்த இன்பமெனக் கருதிய சேரமான் செவி குளிர, "அரசே! மெல்லிய பூம்பட்டு விரித்த வீர மஞ்சத்தில் எளியேன் அறியாது ஏறித் துயின்றேன்.

அப்பிழை செய்த என்னை நீ இலங்கு வாளால் பிளந்து எறிதல் தகும். எனினும், தமிழறிந்தவன் என்று கருதி என்னை வாளா விடுத்தாய்! இது ஒன்றே தமிழன்னையின் பால் நீ வைத்துள்ள அன்பிற்குச் சாலும். அவ்வளவில் அமையாது,படைக்கலம் எடுத்து வீசும் நின் தடக்கையினுல் கடையேற்குக் கவரி வீசவும் இசைந்தனையே! நின் பெருமையை ஏழையேன் என்னென்று உரைப்பேன்" என்று புகழ்ந்து அவனடிகளில் வீழ்ந்து வணங்கினுர். தமிழ்ச் சொல்லின் சுவையறிந்த சேரமான், அடி பணிந்த புலவரை ஆர்வமுற எடுத்தணைத்து, பல்லாண்டு அவர் பசிநோய் அகற்றப் போதிய பரிசளித்து விடை கொடுத்தனுப்பினுன்.

---

# 12. பாரியும் மாரியும்

பழந்தமிழ் நாட்டில் வரையாது பொருள் வழங்கும் வள்ளலார் பலர் வாழ்ந்து வந்தனர். குறுநில மன்னராய அப்பெருந் தகையார் அறிஞரையும் வறிஞரையும் ஆதரித்து, என்றும் வாடாத செஞ்சொற் பாமாலை பெற்றார். அன்னவருள் தலை சிறந்தவன் பறம்புமலைக் கோமானாகிய பாரி. இயற்கை வளஞ் சான்ற பறம்பு மலைநாட்டில் நெல்லும், கனியும், தேனும், கிழங்கும் வளமாகக் கிடைத்தமையால் குடிகள் கவலையற்று வாழ்வாராயினர்.

பசியும் பகையும் இன்றி, வசியும் வளனும் பெருகிய அம் மலையின்மீது அமைந்த அரண்மனையில் கருணையின் வடிவமாக வீற்றிருந்தான் பாரி. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அவன் உற்ற துணைவன்; பசிப்பிணி என்னும் பாவியின் பெரும் பகைவன். கங்கு கரையற்ற அவ் வள்ளலின் கருணை, மன்னுயிர் முதலாகப் புல்லுயிர் ஈறாக உள்ள அனைத்துயிரையும் ஆதரிப்பதாயிற்று. ஒரு நாள் பாரி தன்னழகிய தேர்மீது ஏறி, நாட்டு வளங்காணப் புறப்பட்டான்; செல்லும் வழியில் ஒரு முல்லைக் கொடியைக் கண்டான்; குறுகிக்கிடந்த அதன் நிலை கண்டு மனம் உருகினான்; தழைத்துச் செழித்துப் படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பின்றிக் குழைந்து வாடிய கொடியின் துயர் கண்டு வருந்தினான்; அப் புல்லுயிரின் துன்பத்தைப் போக்கக் கருதித் தன் பெரிய தேரை அதன் அருகே கொண்டு நிறுத்தினான்; கொடியை எடுத்துத் தேர்மீது படரவிட்டு, கவலையற்ற முகத்தோடு தன் கோட்டையை நோக்கி நடந்தான். காட்டில் வாழ்ந்த கொடியும் ஓர் உயிர் என்றுணர்ந்து, அதற்கு உற்ற குறையைக் குறிப்பால் அறிந்து, உள்ளம் நெகிழ்ந்து உதவி புரிந்த வள்ளலின் பெருமையை,

"பூத்தலை யறாப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி"

என்று புலவர் பெருமானாகிய கபிலர் போற்றிப் புகழ்ந்தார். பாடிவந்த பாவலர்க்குப் பரிசளித்தலோடு அமையாது, வாய்விட்டுப் பாட வகை யறியாப் படர் கொடிக்கும் பெருங்கொடை யளித்த பாரியின் பெருமை தமிழ் நாடு முழுவதும் பரவிற்று. கைம்மாறு கருதாது மழை பொழிந்து உலகத்தை வாழ்விக்கும் கார்மேகம்போல், எல்லா உயிர்களையும் ஒல்லும் வகையால் ஆதரித்துப் புகழ் பெற்றான் பாரி என்று புலவர் பலர் பாராட்டினர். அற்றார்க்குப் பொருள் வழங்கி அவர் இன்முகம் கண்டு இன்புற்ற பாரியை,

"பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே"

என்றுபொய்யறியாக் கபிலர்போற்றிப்புகழ்ந்தார். "மண்ணுலகைப் பாதுகாத்தற்கு மாரியும் உண்டென்பதை மறந்து பாரி ஒருவனையே புலவர் அனைவரும் போற்றிப் புகழ்கின்றார்களே" என்று அவ்வள்ளலை இகழ்வார் போற் புகழ்ந்துள்ள நயம் அறிந்து இன்புறத்தக்கதாகும்.

இவ்வாறு பாரி ஒருவனையே பலரும் புகழக் கண்ட மாறனும் மற்றைய இரு பெரு வேந்தரும், அவ் வள்ளலிடம் அழுக்காறு கொண்டு அவனது பறம்பைத் தம் படையால் முற்றுகை யிட்டார்கள். பல நாள் முற்றியும் பாரியின் பறம்பைக் கவர இயலாது காவலர் மூவரும் கலக்க முற்றனர். நால்வகைச் சேனையின் நடுவே நின்ற மன்னரை நோக்கி, "ஐயன்மீர்! பாரியின் மலையிலுள்ள ஒவ்வொரு மரத்திலும் உமது களிறுகளைக் கட்டுவீராயி

னும், பரந்த பறம்பெங்கும் உமது தேரை நிரப்புவீராயினும், படை வலியால் பாரியை வெல்ல இயலாது. அவனை வென்று பறம்பைக் கவரும் வகையை யான் அறிவேன். நல்ல யாழைக் கையிலேந்தி இன்னிசை இசைப்பீராயின், பாரி தன் நாட்டையும் மலையையும் ஒருங்கே தருவன். இதுவே அவனை வெல்லுதற்குரிய வழியாகும்" என்று பாரியின் வண்மையைப் புகழ்ந்தும், மூவேந்தரது வன்மையை இகழ்ந்தும் கபிலர் நயம்பட உரைத்தார்.

இங்ஙனம் இசை வழியாகப் பாரியை வெல்ல இசையாத மூவேந்தரும், வசையாற்றால் அவனை வென்றதாக அப் பெருந்தகையின் வரலாறு கூறுகின்றது. தஞ்சம் அடைந்தோரைத் தாங்கும் தண்ணளி வாய்ந்த வள்ளலை வஞ்சனையாற் கொன்று மூவேந்தரும் அழியாப் பெரும் பழியெய்தினர். பாரியைக் கொன்று பறம்பைக் கைப்பற்றிய பகைவேந்தர் செயல் கண்டு மனம் பதைத்த பாரி மகளிர்,

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையு மிலமே"

என்று இரங்கிக் கூறும் மொழிகள் உள்ளத்தை உருக்குவனவாம். அப் பெண்மணிகள் தந்தையை இழந்து தனியராயினர்; நாட்டையிழந்து நல்குரவெய்தினர். முல்லைக்குத் தேரீந்த வள்ளலின் மக்கள் தொல்லை வினையால் துயருழந்து அரற்றும் மொழிகள் நல்லோருளத்தைக் கரைப்பனவாகும்.

மணப் பருவமுற்ற அம்மங்கையரைப் பாரியின் தோழராகிய கபிலர், இருங்கோவேள் என்னும் குறுநில மன்னனிடம் அழைத்துச் சென்று "ஐயனே! இவர் இருவரும் பறம்பிற் கோமானாகிய பாரியீன்ற மக்கள். யான்

இவர் தந்தையின் தோழன்; அம்முறையில் இவர் என் மக்கள்; இம்மங்கையரை உனக்கு மணம் செய்யக் கருதி இங்கு அழைத்து வந்தேன்'' என்று தன் கருத்தை அறிவித்தபொழுது, அக்குறுநில மன்னன் அவரை மணம் புரிய மறுத்துவிட்டான். அப்பால், அருங்கவிப் புலவர் வருந்திய முகத்தோடு அங்கு நின்றும் அகன்று மற்றொரு குறிஞ்சிநிலக் கோமானிடம் சென்று அவன்பெருமையைப் போற்றிப் புகழ்ந்து பாரியின் மக்களை மணம் புரியுமாறு வேண்டினர். வள்ளலின் மக்களாயினும், வறுமையெய்திய மங்கையரை மணம் புரிய இசையாது அக் குறுநில மன்னனும் மறுத்துவிட்டான். அவ்விருவரது செயல் கண்டு சிந்தை யழிந்தார் செந்தமிழ்ப் புலவர். அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போலாது, பாரியின் மக்கள் வறுமையெய்திய நிலைமையிலும் அவர்க்கு உற்ற துணையாய் நின்று உதவிய புலனழுக்கற்ற புலவர் பெருமை போற்றுதற்குரிய தன்றோ?

பாரியின் பொன்றாப் பெருமை பார் எங்கும் பரவுதற்குரியதாகும். வில்லுக்கு விசயன் என்றும், விறலுக்கு வீமன் என்றும் உலகம் வழங்குதல் போல, பசித்தோர்க்குப் பாரி என்று பாரெல்லாம் போற்றுதற்குரிய பெருமை அவ்வள்ளலிடம் அமைந்திருந்தது.

> "மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக் கிவனென்று
> கொடுக்கி லாதானைப் பாரியேயென்று கூறினும் கொடுப்பாரிலை
> பொடிக்கொள் மேனியெம் புண்ணியன் எந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள்
> அடுக்குமேல் அமர்உலக மாள்வதற்கு யாதுமையுற வில்லையே"

என்னும் தேவாரத் திருவாக்காலும் பாரியின் பெருமை இனிது விளங்கும். இப்பொழுதும் பெருந்தகைமை வாய்ந்த குலத்திற் பிறந்த மக்களைப் "பாரிமான் மக்கள்" என்று தென்னாட்டில் வழங்கும் வாய்மொழி பாரியின் பெருமைக்கு என்றும் அழியாத சான்று பகர்வதாகும்.

# V. கற்பனைக் கட்டுரை

## 13. முருகனும் முழுமதியும்

அந்தி மாலையில் விண்ணிலே எழுந்த முழுமதி எங்கும் வெண்ணிலா விரித்தது. பொய்கையி லமைந்த பூங்குமுதம் முகை நெகிழ்ந்து, தேன் துளிர்த்து மலர்ந்தது. மலையத் தெழுந்த தென்றல் மெல்லெனத் தவழ்ந்து நறுமணம் கமழ்ந்தது. இத்தகைய அழகு வாய்ந்த அந்திப் பொழுதில் தென் மலைச் சாரலில் மகிழ்ந்து விளையாடிய முருகனென்னும் குமரன், குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, விண்ணிலே ஊர்ந்த வெண்மதியின் அழகினைக் கண்டு முகமலர்ந்து அளவிலா இன்பமுற்றான். குறு நடைபயிலும் முருகனைக் கூர்ந்து நோக்கி, வெண்ணிலா நகைமுகம் காட்டுவதாயிற்று. தன்னை நோக்கி முகமலர்ந்த தண்மதியை முருகன், அருகே போந்து விளையாட அழைத்தான். மழலை மொழிகளால் நெடும்பொழுது வருந்தி யழைத்தும் வான்மதி வாராதிருக்கக் கண்டு முருகன் கண் பிசைந்து அழுது கரைந்தான்.

இள நலம் வாய்ந்த முருகன் விம்மித் தேம்பி அழுததைக் கண்டு ஆற்றாத முனிவர் ஒருவர் அவ்விடம் விரைந்து போந்து, வெள்ளை மதியில் ஊன்றிய பிள்ளையின் கருத்தை மாற்றப் பலவாறு முயன்றார். ஆயினும் முருகன் கண்ணும் கருத்தும் பிறபொருளிற் செல்லாப் பெற்றி கண்டு விண்மதிக்கு நன்மதி புகட்டலுற்றார். 'வெண்ணிலா வீசும் விண்மதியே! முருகனைப்போலவே நீயும் அமுதமயமாய் விளங்குகின்றாய்; கண்டோர் கண்ணையும், மனத்தையும் குளிர்விக்கின்றாய்; குமுதவாய் திறந்து குளிரொளி விரிக்கின்றாய்; உயிராகிய பயிர்

தழைக்க உயரிய அருள் சுரக்கின்றாய். இவ்வாறு பல கூறுகளில் முருகனை நிகர்க்கும் நீ அவனோடு விளையாட வா' என்று முனிவர் நயந்து அழைத்தார்.

இங்ஙனம் ஒப்புமை காட்டி 'உவந்தழைத்தும் இறங் காத மதியின் நிலைகண்டு வருந்தினான் குமரன். அது கண்டமுனிவர், மதியின் சிறுமை காட்டி இடித்துரைக்கத் தொடங்கினார். 'மாலை மதியே! சில கூறுகளில் நீ முருகனை ஒப்பாயாயினும், பல கூறுகளில் அவனுக்கு நீ நிகராகாய்; முக்கட் பெருமானாகிய முதல்வனுக்கு நீ ஒரு கண்ணாய் அமைந்தாய்! முருகனோ கண்மணியா யமைந் தான். கலைகள் குறைந்தும், நிறைந்தும் நீ வேறுபடு கின்றாய்; முருகனோ என்ஞான்றும் கலை நிறைந்த இன் னொளியாய் இலங்குகின்றான். நீ புற இருளையே போக்க வல்லாய்; முருகன் அகவிருளையும் அகற்றவல்லான். உல கில் நீ ஒருபால் ஒளிருங்கால் மற்றொரு பால் ஒழிகின்றாய்; முருகனோ அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்து விளங்கு கின்றான். நீரிற் பூக்கும் குமுத மலர்களை நீ மலர்விக் கின்றாய். முருகனோ அன்பரது மனமலர்களைத் திறக்கின் றான். எனவே, உன்னிலும் அவன் உயர்ந்தவனல்லனோ? அன்னான் "வருக" என்றழைத்தால் வாராதிருக்க வழக் குண்டோ?' என்று முனிவர் இடித்துரைத்தார்.

இவ்வாறு வேற்றுமை காட்டிக் கட்டுரை கூறியும் முருகன் பெருமையை உணராது இறுமாந்திருந்த தண் மதியைப் பிறிதோர் உபாயத்தால் முனிவர் தெருட்டக் கருதினார். 'மறுவுற்ற குளிர் மதியே! உன்னை வருந்தி அழைக்கும் குமரன் திறத்தினை அறிந்தாயில்லையே! கரு நோயை வேரறுக்கும் முருகன் அருள் பெற்றால் உன்னைப் பற்றியுள்ள கருநோய் கடுகி ஓடுமே! இருள்சேர் இரு வினையுந் துடைத்து அந்தமில் இன்பத்து அழியா வீடுந்தர வல்ல முருகனுக்கு உன்பால் அமைந்த மறுவினை அகற்று

தல் அரிதாமோ! கரவாது தொழும் அன்பர் கண்ணெதிரே தோன்றித் தண்ணளி சுரந்து, வரங்கொடுக்கும் கண் கண்ட தெய்வம் முருகனல்லால் உலகில் வேறுண்டோ?' என்று செம்பொருளாய குமரன் பெருமையைச் செவ்வனம் உணர்த்தினர். எனினும், முனிவர் பரிந்து உரைத்தமொழிகளை வெண்மதிமனத்திற் கொள்ளவில்லை.

சாமபேத தானங்களால் தண்மதியை வெல்ல இயலாத முனிவர் தண்டத்தைக் கையாளத் தலைப்பட்டார். 'குறையாகிப் பிறையாகி மிளிரும் குளிர் மதியே! இக் குமரன் ஆற்றலை நீ அறியாய் போலும்! இப் பிள்ளைப் பெருமான் குன்றமெறிந்தான்; குரை கடலிற் சூர் தடிந்தான். குலிசனைச் சிறையிட்டான்; இவ்வேலனைப் பாலன் என்றெண்ணி இகழ்ந்த சூரன் பட்டபாட்டை நீ அறியாயோ? இன்னும் தக்கன் வேள்வி கட்டழிந்த நாளில் நீ மானங் குலைந்ததை மறந்தனையோ? வலிமை சான்ற வேலன் பொரும்பி அழுது அரற்றுவானாயின் இளையவனாகிய வீரவாகு பொங்கி எழுவான். அவன் சீற்றத்தை மாற்ற எவராலும் இயலாது. ஆதலால், முருகன் அன்பு கூர்ந்து அழைக்குங்கால் அவனுடன் வந்து விளையாடுதலே உனக்கழகாகும்' என்று முனிவர் அறிவுறுத்தினர்.

முனிவர் மொழிகளைச்சிறிதும் நெஞ்சிற் கொள்ளாது செருக்குற்று விண்ணிலே தவழ்ந்து சென்ற விண்மதியையும், அம்மதியை மறந்து மற்றொன்றைக் கருத மனமற்றிருந்த முருகனையும் கண்ட முனிவர் செய்வ தொன்றறியாது சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அந்நிலையில் முருகனை வீட்டிற்காணாத அவன் தந்தை 'முருகா முருகா' என அழைத்துக் குன்றின் சாரலை வந்தடைந்தார்; ஆங்கோர் கரும்பாறையின்மீது முனிவரும் குமரனும் அமர்ந்திருக்கக் கண்டார். அருமந்த முருகனை

விரைந்தெடுத்து ஆர்வமுற அணைத்துக் கண்ணீர் துடைத்து அழகொழுகும் அவன் திருமுகத்தை அமர்ந்து நோக்கி, 'என் கண்ணே! கண்மணியே! நீ ஏன் அழுதாய்? தேனும் தினையும் வேண்டுமா? பாலும் பழமும் வேண்டுமா?' என்று விருப்புடன் வினவி முத்தமிட்டார். முத்தமிட்டு நிமிர்ந்த அத்தனது சடையிலமைந்த பிறைமதியை முருகன் கண்டு கொண்டான். தன் விருப்பத்திற்கிணங்கி விண்ணிழிந்த தண்மதியைக் கண்டு உள்ளம் தழைத்தான். தந்தையின் தோளில் ஏறி யமர்ந்து கற்றைச்சடையின் மீதிலடங்கிய குழவித் திங்களைத் தன்னிளங்கரத்தால் வளைத்திழுத்தான். தண் மதியைச் சார்ந்த முருகனது இளநலம் முன்னிலும் சிறந்து இலங்கிற்று. விண்மதியின் தண்மையையும் வெண்மையுங் கண்டு முருகன் மனங்களித்தான். மதியின் வட்டவடிவத்தைத் தன் முகத்தோடு ஒட்டிப் பார்த்தான். அதன் மேனியிலமைந்த மறுவைத் தன் மலர்க்கரத்தால் துடைத்தான். மதியுடன் விளையாடிய மைந்தனைக்கண்டு தந்தையார் மனங்குளிர்ந்தார். இறையனார் செயல்கண்டு இன்பக்கண்ணீர் சொரிந்த முனிவர், 'யாவர்க்கும் முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ' என்று பாடிப் பரவினார்.

## 14. பயிர் வண்டும் படர் கொடியும்

திருக்குற்றால மலையின் ஒருசார் ஓங்கி வளர்ந்த வேங்கை மரம் விண்ணளாவி விளங்கிற்று. அதன் கிளைகளில் ஒரு மெல்லிய பூங்கொடி பின்னிப் படர்ந்திருந்தது. மஞ்சுதோய நின்ற வேங்கையின்மீது அவ்விளங்கொடி வரிவரியாய்ச் சுற்றி விளங்கிய கோலம் கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவர்வதாயிற்று. பொன்மலர் பூத்த அவ்வேங்கையின் கொம்புகளில் குயில்கள் மணந்து மகிழ்ந்தன; வண்டினங்கள் இசைபாடி, மலர்களின் தேனை மாந்தித் திளைத்தன.

"தீங்குயில் மணந்துதேன் துஞ்சவண்டு பாண்செய
வேங்கை நின்று பொன் உகுக்கும்"

என்று சிந்தாமணிக் கவிஞர் வியந்துரைத்த இயற்கையழகு அங்கே காட்சியளித்தது.

அவ்வேங்கை மரத்தின் அடிப்புறத்தில் ஆழ்ந்து அகன்ற ஓர் ஆறு அணிபெறச் சென்றது. இளங் காற்றில் வேங்கையின் பூங்கொம்புகள் அசைந்து ஆற்றிலே பொன்மலர் சொரிந்தன. சிறு திரைகள் ஆற்றில் அலைந்து இனிய காட்சியளித்தன.

அப்போது சேய்மையில் ஒல்லென ஓர் ஒலி கிளம்பியது. அதன் தன்மையை மனத்தாற் கருது முன்னமே, கடுங்காற்று வேகமாய்ச் சுழன்று வீசத்தலைப்பட்டது. விண்ணுக் கடங்காமல், வெற்புக் கடங்காமல் வீசிய காற்றின் வேகத்தால் மரங்கள் எல்லாம் மயங்கிச் சுழன்றன. அக்காற்றின் கொடுமைக்கு ஆற்றாது மலையே நிலைகுலைந்தது. வெறிகொண்ட சூறையில் அகப்பட்ட வேங்கைமரம் வேரோடு சாய்ந்து அருகே சென்ற ஆற்றில் விழுந்தது. வானுற ஓங்கி, வளம்பெற வளர்ந்து, பூத்துச் செழித்து விளங்கிய வேங்கை நிலைகுலைந்து வீழக்

கண்ட எமதுள்ளம் வெதும்பியது; உலகப் பொருள்களின் நிலையாமையை நினைந்து நெஞ்சம் குழைந்தது.

இவ்வாறு வேங்கை சாய்ந்து ஆற்றில் விழுந்தபோது, அதனைச் சுற்றிப் படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வேரோடு பெயர்ந்து அம்மரத்துடன் மயங்கி விழுந்தது. அவ்வேங்கையில் இனிய தேனுண்டு திளைத்த வண்டுகள் மரத்தொடு பூவும் மாளக்கண்டு ஆர்த்தெழுந்து அயல் நின்ற மற்றொரு மரத்தில் சென்று சேர்ந்தன. இதனை நோக்கியபோது மதுவுண்டு மயங்கும் வண்டின் இழி குணம் எம் மனத்தை வாட்டி வருத்தியது.

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் - ஏலா
இடர்ஒருவர் உற்றக்கால், ஈர்ங்குன்றநாட
தொடர்புடையேம் என்பார் சிலர்"

என்ற பாட்டின் பொருள் தெளிவாக விளங்கிற்று. கெடுமிடத்துக் கைவிடும் கருவண்டு போலாது, பெருந் துயர் நேர்ந்தபோதும் பிரியாத இயலமைந்த பூங்கொடி, நல்ல குடிப்பிறப்புடைய நங்கைபோல் இலங்கிற்று. வேரூன்றி முளைத்த இடத்தினின்றும் படர்ந்து போந்து, வேங்கையைப்பற்றித் தளிர்த்து வளர்ந்த கொடியின் தன்மை, மணப் பருவம் வாய்ந்த ஒரு மங்கை பிறந்த மனையினின்றும் போந்து தலைமகனைச் சேர்ந்து வாழும் தன்மையில் அமைந்திருந்தது. அக் கொடி படர்வதற்கு ஏற்ற கொழு கொம்பாய் அமைந்த வேங்கையின் தோற்றம், ஆண்மையும் பெருமையும் பொருந்தித் திகழும் தலைமகனது விழுமிய நிலைபோல் விளங்கிற்று. அவ் வேங்கையிலே பின்னிப்படர்ந்து அதன் கிளைகளுக்குப் புதியதோர் அழகளித்த கொடியின் கோலம், தலைமகனுடன் ஒன்றி வாழ்ந்து இல்வாழ்க்கைக்கு அழகளிக்கும் குலமங்கையின் தன்மையை நிகர்த்தது. இன்னும், வேங்கை துயர்உற்று ஆற்றில் வீழும் நிலையில் அதனோடு தானும் வீழ்ந்து துயர்

உற்ற கொடியின் நீர்மை, தலைவன் துயருறும் போது தானும் துயருறும் நிறை யமைந்த மங்கையின் மனப் பான்மையை விளக்கி நின்றது. அந்நிலையில் இளங் கோவடிகள் எழுதிக் காட்டிய கண்ணகியின் வடிவம் எம் மனக் கண்ணெதிரே காட்சி யளித்தது.

பெற்றோர் சேர்த்து வைத்த பெருஞ் செல்வம் எல் லாம் பொது மாதிடம் இழந்து வறியனாய், மாட மதுரையில் மனையாளது மணிச் சிலம்பை விற்று வாணி கம் செய்யுமாறு புகார் நகரினின்றும் புறப்பட்டான் கோவலன். அப்போது மெல்லியல் வாய்ந்த கண்ணகியும் அவனுடன் சென்றாள். கதிரவன் வெம்மையால் உடல் கருக, கரடு முரடான பாதையில் வண்ணச் சீறடிகள் வருந்தக் கானகத்தில் நடந்து போந்த கண்ணகியின் பெருமையைக் கண்டு கோவலனே மனங் குழைந்தான்;

"குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னொடு போந்து ஈங்கு என் துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்"

என்று கற்பின் செல்வியைப் புகழ்ந்து போற்றினான்.

இவ்வாறு கணவனைப் பிரியாது வாழ்தலே நிறை யமைந்த மாதர் நெறியாகும். கற்புடைய மாதர் கணவ ரோடு இன்பமும் துன்பமும் ஒருங்கே நுகர்வர்; அவர் ஆவி துறப்பின் அந்நிலையே உயிர் நீப்பர். நீரில் அமைந்து வாழும் நீலமலர் அந்நீர் வற்றும்போது அவ்விடத்தே ஒட்டி நின்று உலரும் தன்மைபோல் கற்பமைந்த மங்கை யர் கணவன் வாழுங் காலத்து அவனுடன் இனிது வாழ்ந்து, அவன் அழியும் காலத்துத் தாமும் அகமகிழ்ந்து அழிவர். இத்தன்மை வாய்ந்த குலமாதர் நெறியைக்

கொடியின் தன்மையோடு ஒப்பு நோக்கிக் கம்பர் அமைத்துள்ள கற்பனை அழகு வாய்ந்ததாகும்.

"நில மரங்கிய வேரொடு நேர்பறித்து
அலமலரும் துயர்எய்திய ஆயினும்
வலமரங்களை விட்டில மாசிலாக்
குலமடந்தையர் என்னக் கொடிகளே"

என்னும் கவியில் அமைந்துள்ள சொல் நயமும் பொருள் நயமும் ஆயுந்தொறும் அளவிறந்த இன்பம் பயப்பதாகும். குலமாதர் போன்ற கொடிகளின் தன்மை இவ்வாறாக, விலைமாதர்போன்ற வண்டுகளின் தன்மையையும் கவிதையிலே காணலாம். பொருளையே விரும்பும் பொதுமாதர் உள்ளத்தில், அன்பெனும் பசை அணுவளவும் இராது என்று அறிஞர் கண்டுணர்த்தி யுள்ளார்கள். அத்தன்மை வாய்ந்த பெண்டிரை,

"நறுந்தாதுண்டு நயனில்காலை
வறும்பூத்துறக்கும் வண்டுபோல்வார்"

என்று மணிமேகலை ஆசிரியர் குறித்துப் போந்தார். ஆகவே, இடருற்றபோது நீங்கும் இயல்புடையாரோடு உறவு கொள்ளாது, கொடுந்துயர் உற்றபோதும் விட்டு நீங்காத கொடியன்னாரைத் துணைக் கோடலே இருமையும் இன்பம் தருவதாகும்.

# 15. நல்ல மரமும் நச்சு மரமும்

ஒரு நாள் ஓர் அரசிளங் குமரன் தன் தோழனைத் துணைக்கொண்டு கானகத்தில் வேட்டையாடச்சென்றான். அங்கு அவன் விரும்பியவாறு வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்படாமையால், எங்கும் அலைந்து திரிந்து அலக்கணுற்றான். பசியால்மெலிந்து, வெயிலால் உலர்ந்து, இருவரும் தளர்ந்து சோர்ந்தார்கள்; அப்போது நெடுந் தூரத்தில் ஒரு சிற்றூர் தோன்றக் கண்டு அவ்வூரை நோக்கி மெல்ல நடந்து செல்வாராயினர். கதிரவன் வெம்மையால் அரசிளங் குமரன் தலைநோயுற்றுத் தன் தோழனது தோளைப் பற்றிக்கொண்டு வழி நடந்தான். அவ்வூரின் அருகே வந்தபோது இருவரும் மெய் சோர்ந்து நாவறண்டு, அடிவைத்து நடப்பதற்கும் வலியற்றவராயினர். அந் நிலையில் இருவரையும் இன்முகங்கொண்டு எதிர் சென்று அழைப்பதுபோல் இளந்தென்றல் எழுந்து வந்தது. அம்மெல்லிய பூங்காற்றின் இனிமையால் புத்துயிர் பெற்ற நண்பர்கள் அகமும் முகமும் மலர்ந்து தென்றல் எழுந்து வந்த திசை நோக்கிச் சென்றார்கள். அவ்வழியில் இளந் திரைகளோடு இலங்கிய நன்னீர்ப் பொய்கை அமைந்திருந்தது. அப் பொய்கையில் விளங்கிய செந்தாமரையில் அன்னங்கள் அமர்ந்து துயின்ற அழகு கண்ணைக் கவர்ந்தது. நற்றாமரைக் கயத்தில் துயின்ற நல்லன்னத்தைக் கண்ட இளவரசன் துணைவனை நோக்கி,

> "தோயும் திரைகள் அலைப்பத்
> தோடார் கமலப்பள்ளி
> மேய வகையில் துஞ்சும்
> வெள்ளை யன்னம் காணாய்"

என்று தான் பெற்ற இன்பத்தை இனிது எடுத்துரைத்தான். அப்பொய்கையில் இலங்கிய அழகிய மலர்

முகமலர்ந்து இருவரையும் அருகே அழைப்பனபோல் அசைந்தன. அவ்வாவியின் தண்மையும் செம்மையும் கண்ட இருவரும் தாய்முகம் கண்ட சேய் போல் மனம் களித்து அந்நன்னீரைப் பருகி மகிழ்ந்தார்கள். அருந் தாகத்தால் வருந்திய இருவருக்கும் தண்ணீரை இனிது வழங்கும் தன்மைபோல் அடுக்கடுக்காக அலைகள் கரை யருகே வந்து சேர்ந்தன. தாகம் தணிந்து, மனமும், மெய் யும் குளிர்ந்த பின்னர், இருவரும் அக் குளத்தின் ஈரக் கரையில் இனிதமர்ந்து அங்கு வீசிய இளங் காற்றை நுகர்ந்து இன்புற்றார்கள். அப்போது, அவ்வாவியின் அருகே கொத்துக் கொத்தாகப் பொன் நிறக் கனி களைத் தாங்கி, குளிர் நிழல் விரித்து நின்ற மரமொன் றைக் கண்டார்கள். அதன் நிழலிலே தங்கி இளைப்பாற எண்ணி இருவரும் அங்குச் சென்றனர். கதிரவன் வெம் மையைத் தடுப்பதற்கு ஓங்கிய பாசிலைப்பந்தர் வேய்ந்தாற் போன்று விளங்கிய மரத்தின் நிழலில் இருவரும் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தார்கள். சில நாழிகை சென்ற பின் னர், தோழன் துயிலொழிந்து எழுந்தான். எங்கும் பசுமை நிறமும், பறவையின் ஒலியும், பழத்தின் மணமும் நிறைந் திருப்பினும், பசியின் கொடுமையைப் பொறுக்கலாற் றாது வருந்தினான். கற்பகதரு வெனக் கவின்பெற விளங் கிய மரக் கொம்புகளை நயந்து நோக்கினான். அவற்றில் பொன்னிறமான பழங்கள் கொத்துக் கொத்தாய் எம் மருங்கும் இலங்கக் கண்டான். அப்பொழுதே அம் மரக் கிளைகளின் வழியாக மேலே சென்று, இருவரது அரும் பசியையும் தீர்ப்பதற்குப் போதிய கனிகளைக் கொய்து வந்து துணைவனைத் துயிலினின்றும் எழுப்பினான். கனி களின் நிறத்தைக் கண்டும், நல் மணத்தை நுகர்ந்தும், தீஞ் சுவையைத் துய்த்தும், இருவரும் இன்புற்றார்கள். பின்னும் சிறிது பொழுது அம்மரத்தின் நிழலில் அமர்ந் திருக்கையில் அரசகுமாரனது தலைநோய் மிகுந்தது.

அதனைத் தீர்க்கும் வகையறியாது தோழன் திகைத்து 'எவரேனும் இவ்வழி வாராரோ' என்று எதிர் நோக்கி இருந்தான்.

இவ்வாறு இருக்கையில் அவ்விடத்தை நோக்கி ஒரு முதியவன் வந்து சேர்ந்தான். "தலைக்குத்துத் தீர்க்கும் மருந்து தங்களிடம் உண்டோ?" என்று தோழன் அவனை வினவினான். அப்பொழுது முதியோன் புன்னகை பூத்துக் "கையில் வெண்ணெயிருக்க நெய் தேடி அலையும் வெள்ளியரும் உண்டென்பதை இன்று நேராக அறிந்தேன். இம் மரத்தின் பட்டையில் சிறிது செதுக்கி, அதன் சாற்றைத் தலையிற் பிழிந்தால் எவ்வகைத் தலைக் குத்தும் தீர்ந்து விடுமே" என்று சொல்லி அப்பாற் சென்றான். அதை அறிந்த துணைவன் அளவிலா மகிழ்வடைந்து அம்மரப் பட்டையின் சாற்றை மன்னன் மைந்தனது தலையிற்பிழிந் தான். சிறிது நேரத்தில் அரசிளங்குமரனது தலைக்குத்து அறவே ஒழிந்தது. அந்நிலையில் தோழன் தலைநோய் தீர்ந்த இளவரசனை 'ஐயனே! நாம் இருவரும் கானகம் சென்றது முதல் இது வரையிலும் நிகழ்ந்த செயல்களைப் பார்த்தாயா? நாம் பசியாலும் வெயிலாலும் நலிந்து, மெய் தளர்ந்து, வருந்தும் நிலையில் இப்பொய்கை நம்மை அன்புடன் அழைத்து இன்முகம் காட்டித் தாகம் தணித் துத் தளர்வை மாற்றியது. அப்பால் இம்மரம் நாம் தங்கி யிருக்கக் குளிர் நிழல் தந்து, பசியாறப் பழங்கள் அளித் துத் தலைநோய் தீர்க்கவும் தனி மருந்தாய் அமைந்தது. இத் தன்மையை நோக்குங்கால் நல்லார் கைப்பட்ட செல்வத் தின் தன்மை நன்கு விளங்குமன்றோ? வறுமையால்வருந்தி வந்தவரை இனிய முகத்தோடு ஏற்று, அவரது குறையை நிறைசெய்வதே அறிவுடைய செல்வர் செயலாகும். ஆற்றுவழியாகவும், ஊற்றுவழியாகவும் நன்னீரைத்தன் அகத்தே நிரப்பிக் கொள்ளும் இப் பொய்கைபோல் அறி வுடையார் நல் வழிகளால் ஈட்டிய பெரும் பொருள்

நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள். நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை வாய்ந்து விளங்குதல் போல, அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த நெஞ்சின ராய் இலங்குவார்கள். தாகத்தால் வருந்துவோர்க்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம்போல், கல்வியும் செல்வமும் பூத்த மேலோர் வறிஞர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவார்கள். இன்னும், தமக்கென வாழாது பிறர்க்குரியாளராய் வாழும் பெரியார்பால் அமைந்த செல்வம் ஊருணியின் நீர்போல ஊரார்க்கே முழுவதும் பயன் படுவதாகும். இதனாலேயே,

> "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு"

என்று திருவள்ளுவர் அருளிப் போந்தார். இவ்வண்ணமே பழுதறு பழங்களைத் தாங்கி நிற்கும் இப்பயன்மரம் தன் இனிய பழங்களால் பசிநோய் அகற்றி, குளிர் நிழலால் களைப்பை மாற்றி, பட்டையால் பிணியைப் போக்கி, பல வகையாகப் பயன் படுதல்போல, அறிஞரிடம் அமைந்த செல்வம் வறியார்க்குப் பலவகையிற் பயன் படுதலா லேயே,

> "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
> நயனுடை யான்கட் படின்"

> "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கட் படின்"

என்னும் நாயனார் பொருளுரை எழுந்தது. ஆகவே, தண்மை வாய்ந்த தடாகம் போலவும், பழங்கள் நிறைந்த பயன் மரம் போலவும், வாழ்வதே பண்புடைமையாகும்" என்று இனிதாக எடுத்துரைத்தான். அரசிளங் குமர னும் அதன் உண்மையை அறிந்து அப்பொருளுரையைப் பொன்போற் போற்றினான்.

அப்பால், இருவரும் தமது ஊரை நோக்கிச்சென்றனர். செல்லும் வழியில் ஓர் சிற்றூர் குறுக்கிட்டது அதன் நடுவே போகும் போது இருவரும் முன் கண்டறியாத ஓர் மரத்தினைக் கண்டு வியந்து நின்றார்கள். அம்மரம் கவையாகிக் கொம்பாகிக் காட்டு மரம்போல் ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் கொம்புகளிலும், கிளைகளிலும் கூரியமுள் நிறைந்திருந்தது. இலைகளும் தழைகளும் இல்லாமல் பட்ட மரம்போல் நின்ற அதன் கிளைகளில் செவ்வையாய்ப் பழுத்த பழங்கள் கொத்துக் கொத்தாய் அமைந்து கண்களைக் கவர்ந்தன. அம் மரத்தைக் கண்டு இருவரும் வியந்து நிற்கையில் அவ்வழியாக ஓர் இளைஞன் வந்து சேர்ந்தான். அவன் மரத்தருகே நின்ற இருவரையும் இனிது நோக்கி ''ஐயா! நீங்கள் இருவரும் அயலூரார் என்பதை அறிந்தேன். ஏனெனில், இவ்வூரார் எவரும் இப்பாழான பழு மரத்தைக் கண்ணெடுத்தும் பாரார்கள். இம் மரத்தில் எந்நாளும் இலைகளும் தழைகளும் இல்லாமையால் விலங்குகளும் இதனடியில் நில்லாமல் விலகிப் போகும்; கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்த இக் கனிகளும் நச்சுக் கனிகளாய் இருத்தலின், உண்டாரைக் கொன்றுவிடும். இம் மரத்தின் கொம்புகளை விறகாய் வெட்டி எரிப்பதற்கும் இதனிடம் அமைந்த முள் இடையூறாயிருக்கின்றது; இப் பாழ் மரம் கடுங்காற்றில் அகப்பட்டு முறிந்து வேரற்று விழவேண்டுமென்று இவ்வூரார் இறைவனை நாளும் வழிபடுகின்றார்கள். இம்மரம் என்று விழுமோ அன்றே இவ்வூருக்கு நன்றாகும்.'' என்று அதன் தன்மையை விரிவாகக் கூறி முடித்தான். அதைக் கேட்ட அரசிளங்குமரன், முன் தங்கி இளைப்பாறிய மரத்தின் இனிமையையும், பின்னே கண்ட மரத்தின்கொடுமையையும் ஒப்புநோக்கி, நச்சு மரத்தில் அமைந்த நன்னிறக் கனிகள் பேதையர் கைப்பட்ட செல்வம்போல் பிறர்க்கு இடர் விளைப்பனவாகும் என்று எண்ணி வருந்தினான்.

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத் தற்று"

என்னும் பொய்யா மொழியின் பொருளைத் தெளிந்தான். இத்தகைய செல்வம் நிறைந்த பேதையர், நிலத்துக்குச் சுமையாகவும், உலகத்திற்கு உற்ற தீமையாகவும் அமைந் திருத்தலால், அன்னார் அழிந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை பயப்பதாகும். அறிவுடைய செல்வரை உலகம் போற்றும்; அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும்; அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டு உலகம் களிக்கும்; அறிவிலாச்செல்வனது அழிவைக் கண்டு உலகம் மகிழும். அறிவுடைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு பயன் படுத்தி இம்மையிற் புகழும்,மறுமையில் இன்பமும் எய்து வான்; அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பண்பறி யாப் பேதையனாய் இம்மையிற் பழியும், மறுமையில் துன் பமும் எய்துவான்.

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

என்பது என்றும் பொய்யா மொழியே யாகும்.

# VI. மொழியும் நெறியும்

## 16. தமிழும் சைவமும் *

பாரத நாடு என்றும் தெய்வ மணம் கமழும் திரு நாடு. தெய்வம் உண்டு என்ற கொள்கை நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக இந்நாட்டில் நிலவி வருகின்றது. இவ்வுலகத்தைப் படைப்பது தெய்வம்; காப்பது தெய்வம்; அழிப்பதும் தெய்வம் என்னும் கருத்து பாரத நாட்டுப் பெருஞ் சமயங்களில் எல்லாம் காணப்படும். சுருங்கச் சொல்லின், "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்னும் உண்மையை அறிந்து போற்றும் நாடு இந்நாடு.

இத்தகைய தெய்வத்தைத் தமிழ் நாட்டார் பலவாறு போற்றினார்கள்; பல திருநாமங்களால் அழைத்தார்கள். நாளடைவில் அப்பெயர்கள் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும் பெருகிவிட்டன. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இதனைக் குறிக்கின்றார்:

> "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
> திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்பது அவர் திருவாக்கு. இவ்வண்ணம் பாடிய திரு நாமங்களில் சிவம் என்பது ஒன்று. அது ஒரு சிறந்த பெயர். சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம் என்னும் பொருள் கண்டார் பண்டைப் புலவர். எனவே, எல்லா மங்கலமும் தரும் பொருள் எதுவோ, அதுவே சிவம். பேரின்ப நிலையாகிய முத்தி சிவகதியாகும்; சிவகதியிற் கொண்டு சேர்க்கும் நெறியைச் சைவம் என்றார்கள்.

---

* சென்னை வானொலி நிலையத்திலே பேசியது. அந் நிலையத்தார் இசைவுடன் சேர்த்தது.

எனவே, சிவம் என்னும் மங்கலப் பொருளை வழிபட்டு, சிவகதியை அடைவதற்கு வழிகாட்டும் சமயமே சைவ சமயமாகும்.

இத்தன்மை வாய்ந்த சைவசமயத்தின் அடிப்படையான கொள்கைகளிற் சிலவற்றைக் காண்போம். "அன்பே சிவம்" என்ற அருமையான வாசகம் சைவசமய நூல்களில் சிறப்பாக விளங்குகின்றது. எண்ணிறந்த குணம் வாய்ந்த இறைவனை அன்பு வடிவாக எழுதிக் காட்டினார் திருமூலர் என்னும் பெரியார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

என்பது அவர் அருளிய திருமந்திரம். இதனால் அன்பு நெறியே சிவநெறி என்பது நன்கு விளங்கும்.

அன்பு வடிவாகிய சிவபெருமானை அடைவதற்கு அன்பையே சாதனமாகக் கொள்ளுதல் வேண்டும் என்று சைவசமயம் கூறும். 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்றார் ஔவையார். இவ்வுலகத்தில் அறத்தைக் காப்பது அன்பு; மறத்தை அழிப்பது அன்பு; இன்பத்தைப் பெருக்குவது அன்பு; துன்பத்தைப் போக்குவது அன்பு. அன்பினால் ஆகாததொன்றில்லை. இத்தகைய அன்புநெறியிலே நின்று பணி செய்தால், இன்ப நிலையாகிய சிவகதி தானே வந்தடையும் என்பது சைவ சமயத்தின் கொள்கை.

தெய்வத் தன்மையாகிய அன்பு இயற்கையாகவே ஒவ்வொருவரிடமும் உள்ளது. அது வளர்ந்து, விரிந்து, பரவுதல் வேண்டும். நாம் முதலில் பெற்றோரிடம் அன்பு செலுத்துகின்றோம். பின்பு உற்றார் உறவினரிடம் அன்பு செல்கின்றது. அப்பால் ஊராரிடம், நாட்டாரிடம், உலகத்தாரிடம் படிப்படியாகப் பரந்து நிலவுகின்றது.

இங்ஙனம் மன்பதையிடம் மட்டும் அன்பு செலுத்திஞற் போதாது; எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் கருதவேண்டும். மண்ணிலே முளைத்து வளரும் செடி கொடிகளும், ஊர்ந்து செல்லும் எறும்பு முதலியனவும், பறந்து செல்லும் பறவை யினங்களும், நான்கு காலால் நடந்து திரியும் விலங்குகளும் உயிருள்ள பொருள்களாகும். நம்முயிர் நமக்கு எவ்வளவு இனியதோ அப்படியே ஒவ்வொரு பிராணியும் தன்னுயிரை இனிதாகப் போற்றுகின்றது. மேலும் எல்லா வுயிர்களிலும் கடவுள் கலந்து நிற்கின்ருர்.

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகும்
இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்"

ஆதலால், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்தல் ஆகாது; எவ்வுயிர்க்கும் கேடு விளைத்தல் ஆகாது; எவ்வுயிரையும் கொல்லலாகாது. கொல்லாமையைச் சிறந்த கொள்கையாகக் கொண்டது சைவ சமயம்.

"கொல்லா விரதம் குவலய மெலாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்வது என் இச்சை பராபரமே"

என்று பாடினுர் தாயுமானவர். கொல்லா விரதத்தை மிக உறுதியாகக் கொண்டமையால் சைவம் என்ற சொல்லுக்கே புலால் உண்ணுமை என்னும் பொருள் வந்துவிட்டது.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

என்று அறிவுறுத்திஞர் திருவள்ளுவர். இதனுலேயே நாளடைவில் புலால் உண்ணுதவன் சைவன் என்றும், புலால் உண்பவன் அசைவன் என்றும் பிரித்துப் பேசும் வழக்கம் இந்நாட்டில் எழுந்தது. இது கொல்லாமையாகிய விரதத்தால் சைவ சமயம் பெற்ற சிறப்பாகும்.

சைவம் பரந்த நோக்க முடையது. இவ்வுலகில் சைவ சமயமே மெய்ச்சமயம்; மற்றைய சமயங்கள் பொய்ச் சமயம் என்று அது சொல்லவில்லை. சிவன் என்னும் பெயரால் கடவுளை வழிபட்டோர்க்குத்தான் நற்கதி உண்டு; மற்றையோர்க்கு இல்லை என்று அது சொல்லவில்லை. ஒவ்வொரு சமயத்திலும் அருள்புரியும் பரம்பொருள் ஒன்றே என்பது சைவத்தின் கொள்கை.

"அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க்கு ஆங்கே ஆரருள் புரிந்து"

என்னும் தேவாரம் இவ்வுண்மையை நன்குணர்த்துகின்றது. அறிவிற் குறைந்தவர்கள் புதிய சமயங்களை வகுத்து எங்கும் பரப்பினாலும் குற்றம் இல்லை.

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்."

என்று பாடினார் திருநாவுக்கரசர். ஆகவே சமயத்தின் பேரால் நிகழும் பிணக்கங்களும் போர்களும் சைவ நெறிக்கு மாறுபட்டன என்பது தெள்ளிதின் விளங்கும்.

சைவநெறியில் சமயப் பொறுமை சிறந்த கொள்கையாக விளங்கிற்றென்பதற்குச் சிலப்பதிகாரம் சான்று தருகின்றது. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் சேர நாட்டு இளவரசர். அவர் இவ்வுலக வாழ்க்கையை விரும்பாது சமணசமயத் துறவி யாயினர். ஆனால் அவருடன் பிறந்த சேரன் செங்குட்டுவன் சிறந்த சைவனாய் விளங்கினான். இங்ஙனம் ஒரு குடும்பத்தில் தமையன் சைவ சமயத்தையும், தம்பி சமண சமயத்தையும் மேற்கொண்டு இணக்கமாக வாழ்ந்த நாட்டில் சமயப் பொறுமை நிலைத்திருந்த தென்பதை விரித்துரைக்கவும் வேண்டுமோ?

சைவசமயத்தின் முடிவுகளைச் சைவசித்தாந்தம் என்பர். அச்சித்தாந்தத்தின்படி அநாதியாகவுள்ள பொருள்

மூன்று. அவற்றைத் திரிபதார்த்தம் என்பர். பதி, பசு, பாசம் என்ற மூன்றும் திரி பதார்த்தம் எனப்படும். பதி என்பது கடவுள்; பசு என்பது உயிர்; பாசம் என்பது கட்டு. உயிர், பாசத்திலிருந்து விடுபட்ட நிலையிலே பதியைச் சென்றடையும். அதுவே வீடு என்றும், மோட்சம் என்றும் சொல்லப்படும். பசுவாகிய உயிர், பாசமென்னும் கட்டறுத்துப் பதியுடன் இரண்டறக் கலந்துவிடுதலே வீடு பேருகும்.

இங்ஙனம் உயிர் வர்க்கங்களை ஈடேற்றும் பொருட்டுக் கடவுள் ஐந்து தொழில் செய்கின்ருர் என்று சைவ சித்தாந்தம் கூறும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தும் ஈசன் செயல்கள். இவ்வைந்து தொழில்களுக்குரிய சின்னங்களையும் நடராஜ வடிவத்தில் நன்கு காணலாகும். அவ்வடிவத்தில் உள்ள ஒரு கரம் உடுக்கை யடிக்கும். மற்ெருன்று அபயமளிக்கும். பிறிதொரு கையில் நெருப்பு எரியும். இனி, திருவடிகளில் ஒன்று முயலகன்மீது ஊன்றிநிற்கும்; மற்ெருன்று தூக்கியதிருவடி. இவ்வைந்தும் ஆண்டவன் புரியும் ஐந்து தொழில்களையும் காட்டுவனவாம். இறுதியாக உள்ள அருள் புரிதல் என்னும் தொழில் எடுத்த திருவடியால் விளங்கும். எடுத்த திருவடியே பிறவியைக் கெடுத்துப் பேரின்பமளிப்பது. ஆதலால், தில்லைச் சிற்றம்பலத்தில் காலைத்தூக்கி நின்ருடும் கடவுளைக்கண்டு காதலால் கசிந்துருகிப் பாடினுர் நாவரசர்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."

என்பது அவர் திருப்பாட்டு. ஐந்து தொழிலும் விளங்க ஆண்டவன் ஆனந்தக்கூத்தாடும் தில்லைச் சிற்றம்பலமே சைவ உலகத்தில் கோயில் என்று சிறப்பாகக்

கொண்டாடப்படுகின்றது. ஆகவே, அழகிய திருக்கூத் தாடி ஆன்மாக்களை ஈடேற்றும் குறிப்புடைய நடராஜ வடிவத்தை நமக்குத் தந்தது சைவ சித்தாந்தம்.

சைவ சமயத்தில் ஆலய வழிபாடு இன்றியமையாத தாகக் கொள்ளப்படுகின்றது. 'ஆலயந்தானும் அரன்எனத் தொழுமே' என்று சிவஞானபோதம் என்னும் சித்தாந்த நூல் கூறும். கோயில் இல்லா ஊரில் குடியிருத்தல் ஆகாது என்பது சைவர் கொள்கை. இதனால் எண்ணிறந்த சிவாலயங்கள் தமிழ்நாடெங்கும் தலையெடுத்து நிற் கின்றன. பொருள்வளம் பெற்ற அரசரும், அருள் நலம் பெற்ற முனிவரும் ஆலயப்பணியில் ஈடுபட்டார்கள்; தேவாரம் முதலிய தெய்வப்பாடல்களை ஆலயங்களில் இன்னிசையோடு பாடுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். பாடலோடு ஆடலும் நிகழ்வதாயிற்று. இவ்வண்ணம் பெரிய கோயில்களில் எல்லாம் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் செழித்தோங்கி வளர்ந்தன. கட வுளுக்குரிய கோயில் கலைக் கோயிலாகவும் காட்சி யளித் தது.

இப்பொழுது தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங் களில் சாதி வேற்றுமை காணப்படுகின்றது. ஆண்டவன் கோயிலுக்குள்ளே சில சாதியார் செல்லலாகாது என்று சொல்லப்படுகிறது. கோயிலுக்குள்ளே சென்றாலும், இன்னார் இன்ன இடத்தில் நிற்க வேண்டும் என்ற வரை யறை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், சைவ சித்தாந்த முறையில் சமயத்துக்கும் சாதிக்கும் சம்பந்தமில்லை.

"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரம் குலமும் கொண்டு என்செய்வீர்"

என்று வினவினார் ஒரு சைவப் பெரியார்.

"சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத்து ஆட்கொண்டு"

என்று மாணிக்க வாசகர் திருவாசகத்திலே பாடி னார். எனவே, கோத்திரமும் குலமும் கொண்டு நாம் ஆண் டவன் அருளை அடைய முடியாது. எக்குலத்தவராயினும் பக்குவப்பட்ட ஆன்மாக்களே பரகதி அடைவர் என்று சைவ சித்தாந்தம் பறையறைகின்றது. இக்காலத்தில் இழிந்த சாதிகள் என்று எண்ணப்படுகின்ற குலங்களில் பிறந்தவர்கள் பரிபக்குவத்தால் முத்தியடைந்த செய்தி யைச் சிவகதைகளால் அறியலாம். புலையர் குலத்தில் பிறந்த நந்தனார் புனிதமான தில்லையம்பதியில் சிவகதி யடைந்தார். பெத்தான் சாம்பான் பத்தி செய்து முத்தி பெற்றான். ஆதலால், சாதியினும் சீலமே சிறந்தது; குலத்திலும் குணமே உயர்ந்தது என்னும் உண்மை சைவத்தில் அடிப்படையாக உண்டென்பது நன்கு விளங் குவதாகும். இதனாலன்றோ தேவாரத் திருப்பாசுரத்தில்,

"அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராயின்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என்று பாடினார் திருநாவுக்கரசர்?

# 17. தமிழும் சாக்கியமும் *

பாரத நாட்டுப் பழைய மதங்களுள் ஒன்று பௌத்த மதம். ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே இந்திய நாட்டின் வடபாகத்திலுள்ள ஒரு சிறு தேசத்தில் புத்தர் பெருமான் பிறந்தார். இளமையிலேயே இவ்வுலக வாழ்க்கை நிலையற்றதென்று உணர்ந்தார்; தம் பெருஞ் செல்வத்தையும், பெற்றோரையும், அழகிய மனைவியையும், அருமைக் குழந்தையையும் விட்டுத் துறவியாயினார்; ஓர் ஆற்றங்கரையில் நின்ற அரசமரத்தின்கீழ் அமர்ந்து நெடுங்காலம் தவம் புரிந்து மெய்ஞ்ஞானம் பெற்றார். அவர் காட்டிய நெறி புத்த மதம் என்று பெயர் பெற்றது. புத்தர் சாக்கிய குலத்திற் பிறந்தவராதலால் அம்மதத்தைச் சாக்கியம் என்றும் சொல்வதுண்டு.

புத்தர் எண்பது வயதளவும் இவ்வுலகில் வாழ்ந்தார்; பல நாடுகளிற் சென்று தமது மதக் கொள்கைகளைப் பரப்பினார். வடநாட்டு மன்னர் பலர் அச்சமயத்தை மேற்கொண்டார்கள். அவர்களில் மிகச் சிறந்தவன் அசோக மன்னன். ஆசிய கண்டத்திலுள்ள பல நாடுகளில் பௌத்த மதம் பரவிற்று. தமிழ் நாட்டிலே திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் காலத்தில் பௌத்த மதம் பரவியிருந்த பான்மை அவர் வரலாற்றால் விளங்குகின்றது. மணிமேகலை என்னும் தமிழ்க் காவியம் எழுந்த காலத்தும் பௌத்தமதம் தலையெடுத்து நின்றதாகவே தெரிகின்றது. அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த புத்த சங்கத்தில் அறவணவடிகள் என்னும் பௌத்த முனிவர் விளங்கினார். அவர் சிறந்த சீலர். கோவலன் கொலையுண்டு இறந்த பின்னர் அவன் காதலியாகிய மாத

---

* சென்னை வானொலி நிலையத்திலே பேசியது. அந்நிலையத்தார் இசைவு பெற்றுச் சேர்த்தது.

வியையும், அவன் மகள் மணிமேகலையையும் பௌத்த சமயத்தில் சேர்த்தவர் அவரே. இன்றும் அவர் பெயர் காஞ்சிபுரத்தில் வழங்குகின்றது. அவர் தங்கியிருந்து தவம் புரிந்தமையால் அறவணன் சேரி என்று பெயர் பெற்ற தெரு இப்பொழுது அறப்பணஞ்சேரி என்று அந்நகரில் வழங்குகின்றது.

சாக்கியமதம் சிறந்திருந்த காலத்தில் சிதம்பரத்தில் வாழும் தில்லை மூவாயிரவரோடு சமய வாதம் செய்வதற்காகப் பௌத்த முனிவர்கள் திரண்டு போந்தார்கள் என்றும், அப்பொழுது அங்கிருந்த மாணிக்க வாசகர் அம்முனிவர்களுடன் வாது செய்து அன்னாரைச் சைவ சமயத்திற் சேர்த்து விட்டார் என்றும் சரித்திரம் கூறுகின்றது. ஆகவே, மாணிக்க வாசகர் காலத்திற்குப் பின்பு பௌத்தமதம் தமிழ் நாட்டில் ஆதிக்கமிழந்து விட்டதென்று சொல்லலாம். சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே சீன தேசத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த யூன்சியாங் என்பவர் பௌத்தமதம் தளர்ச்சியுற்றுத் தாழ்வடைந்திருந்த நிலையைக் குறித்து வருந்தி எழுதியுள்ளார். எனவே, மணிமேகலைக் காலத்தில் ஓங்கி நின்ற பௌத்த மதம், ஏழாவது நூற்றாண்டில் தளர்ந்து தாழ்ந்து விட்டதென்று தோன்றுகின்றது.

ஆயினும், அம்மதத்தைச் சார்ந்தவர் ஆங்காங்கு இல்லாமற் போகவில்லை. திருஞான சம்பந்தர் காலத்தில், இப்பொழுது பாண்டிச்சேரி என்று வழங்கும் புதுச்சேரிக் கருகே போதிமங்கை என்ற ஊர் இருந்தது. அங்குப் பௌத்தர் பலர் பெருந்தொகையினராக வாழ்ந்தனர். சாக்கிய நூல்களையும் தருக்க நூல்களையும் நன்கு கற்று வாது புரிய வல்லார் பலர் அவ்வூரில் இருந்தனர். திருஞான சம்பந்தர் சிவனடியார்களோடு அவ்வூரைக் கடந்து செல்லும் போது சாரிபுத்தர் என்னும் சாக்கிய முனிவர் அவரை வாதுக்கு அழைத்தார். அவ்வூர்ச் சத்திரத்தில்

சாரிபுத்தனுக்கும் திருஞான சம்பந்தருக்கும் வாக்கு வாதம் நிகழ்ந்தது. அவ்வாதத்தில் தோல்வியுற்ற சாரி புத்தரும், அவரைச் சார்ந்த பௌத்தரும் சைவ சமயமே மெய்ச்சமயம் எனத் தெளிந்து திருஞானசம்பந்தர் அடி களில் விழுந்தெழுந்து சைவராயினர் என்று பெரிய புரா ணம் கூறுகின்றது.

தமிழ் நாட்டுப் பெருவேந்தருள் ஒருவனாகிய இராஜ ராஜ சோழன் நாகபட்டினத்தில் ஒரு புத்தாலயம் கட்டு வதற்கு அனுமதியளித்ததோடு, அதற்கு நன்கொடை யும் வழங்கினான் என்பது சரித்திரத்தால் அறியப்படுகின் றது. இன்னும் வீரசோழன் என்ற பட்டப் பெயர் பூண்ட வீர ராஜேந்திரன் அரசாண்ட காலத்தில் பௌத்த சம யத்தினராகிய 'புத்தமித்திரன்' என்னும் புலவர் தமிழில் ஓர் இலக்கணம் செய்தார். அந்நூல் வீரசோழியம் என்று பெயர் பெற்றது,

பௌத்த சமயக் கொள்கைகள் மணிமேகலை, குண் டலகேசி முதலிய நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. பிறப்பென்பது துன்பம்; பிறவாமையே இன்பம் என்பது அச்சமயத்தின் அடிப்படையான கொள்கை. அப்படியா யின் பிறப்பை எப்படி ஒழிப்பது? அகப்பற்று புறப்பற்று என்னும் இருவகைப்பாசமும் பிறப்பிற்கு வித்து; பற்று அற்றால் பிறப்பு ஒழியும் என்பது பௌத்த சமயத்தின் கருத்து. இவ்வுண்மையை மணிமேகலையிற் காணலாம்.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது அறிக"

என்று அறுதியிட்டுக் கூறப்படுகின்றது. எனவே, எல் லாவற்றையும் துறந்தவரே சிறந்தவர்; அவரே பேரின்ப மடையும் பெற்றி வாய்ந்தவர் என்னும் கருத்து பௌத்த சமய வாதிகளால் இந்நாட்டில் நன்கு பரப்பப்பட்டது.

இல்லறம்,துறவறம் என்னும் இருவகை அறங்களுள் துற வறமே சாலச் சிறந்ததென்னும் கொள்கை பௌத்தமத போதனையால் தமிழ் நாட்டில் ஊற்றம் பெற்றது. அப் போதனையாலேயே இளநங்கையாகிய மணிமேகலையும் அவள் தாயும், பிறரும் துறவுநிலை யடைந்தார்கள்.

துறவறத்தை மேற்கொண்ட புத்தர், கொல்லாமை என்னும் அறத்தின் பெருமையை எல்லார்க்கும் எடுத் துரைத்தார். அக்காலத்தில் வடநாட்டில் பலவகையான யாகங்கள் நடந்து வந்தன. அரசர்கள் அசுவமேதயாகம் கோமேத யாகம் முதலிய வேள்விகள் செய்து, குதிரை களையும், பசுக்களையும் பலி கொடுத்தார்கள். பிம்பசா ரன் என்ற அரசன் பல பசுக்களைக் குறியிட்டுக் கோமேத யாகம் செய்ய முயன்றதைக் கேள்வியுற்று, புத் தர் அவன் அரசுபுரிந்த நகரத்திற்கு விரைந்து சென்றார். கொல்லாமையாகிய அறத்தின் பெருமையை அவன் உள் ளங் கொள்ள எடுத்துரைத்தார். புத்தர் உருக்கமாகப் பேசிய வாய்மொழியைக் கேட்ட பிம்பசாரன் மனம் மாறினான்; யாகத்தை நிறுத்தினான். அன்று முதல் கொல்லாமை என்னும் நல்லறத்தை மேற்கொண்டு வாழ்ந் தான் என்று புத்தசரிதம் கூறுகின்றது.

இங்ஙனம் வடநாட்டில் புத்தர் செய்த நற்போத னையைத் தென்னாட்டில் திருவள்ளுவர் செய்தார்.

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை"

என்று திருக்குறள் திருத்தமாகக் கூறுகின்றது. தமிழ் நாட்டில் நடந்த கோமேதயாகம் ஒன்று மணிமேகலையிற் குறிக்கப்படுகின்றது. அழகான ஒரு பசு; அதன் கொம்பு களில் மாலை சுற்றி அலங்கரிக்கப் பட்டிருந்தது. மறுநாள் நிகழ நின்ற தீமையை யறிந்து அப்பசு அங்க மெலாம் பதறிற்று; வாய்விட்டுக் கதறிற்று; கண்ணீர் வடித்தது. அதனைக் கண்டான் ஆபுத்திரன் என்ற சிறு

வன்; எவ்வாற்றானும் அந்நல்லுயிரைக் காப்பாற்றக் கருதினான். அன்றிரவு காரிருளில் எல்லோரும் கண்ணுறங்கும் வேளை பார்த்து அப்பசுவைக் கட்டவிழ்த்துக்காட்டுக்குள்ளே ஓட்டிச் சென்றான். யாகப் பசுவைக் காணாத வேதியர்கள் நாற்றிசையும் விரைந்து ஓடினார்கள்; தேடினார்கள்; காட்டிலே அதைக் கடத்திச் சென்ற ஆபுத்திரன் மீது சாடினார்கள். அந்நிலையில் பசுவுக்காகப் பரிந்து பேசலுற்றான் ஆபுத்திரன். தன்னை பிடித்து அடித்தவரை நோக்கி "ஐயரே! இப்பசு உமக்கு என்ன தீங்கு செய்தது? என்ன பாவம் பண்ணிற்று? அரசன் விட்ட நிலத்தில் மழையால் முளைத்துத் தழைத்த புல்லை மேய்கின்றது; இனிய நல்ல பாலை எல்லோர்க்கும் தருகின்றது. இத்தகைய பசுவை ஏன் கொல்ல வேண்டும்?

"விடுநில மருங்கில் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்த நாள்தொட்டுச் சிறந்த தன் தீம்பால்
அறந்தரு நெஞ்சொடு அருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை"

என்று வினவினன். இவ்வாறு பசுக்கொலையை மறுத்த பாலனே மதுரையம்பதியில் சிந்தா தேவியால் அமுதசுரபி என்னும் அக்ஷய பாத்திரம் அளிக்கப் பெற்றான் என்றும், அப்பாத்திரத்தின் உதவியால் ஊர் ஊராகச் சென்று பசித்தோர்க் கெல்லாம் வயிறாரச் சோறிட்டு அறம் வளர்த்தான் என்றும் மணிமேகலை கூறுகின்றது.

பௌத்தமதம் அக்காலத்தில் பல நாடுகளிற் பரவியதற்கும், இக்காலத்தில் பெருஞ்சமயமாக நிலைத்திருப்பதற்கும் சிறந்த காரணம் அதன் சங்கமே யாகும். பௌத்த துறவிகளுடைய கூட்டத்திற்குச் சங்கம் என்பதுபெயர். முதன் முதல் காசி நகரத்தில் புத்தர் ஐந்து முனிவருக்கு உபதேசம் செய்து சங்கத்தைத் தொடங்கினார். பின்னர்,

அது வளர்ந்து பல்லாயிரக் கணக்கான துறவிகளையுடைய தாயிற்று. பௌத்தர்கள் புத்தரையும், தருமத்தையும் சங்கத்தையும் மும்மணிகளாகப் போற்றுகின்றார்கள். தமிழ் நாட்டில் சங்கம் என்ற சொல்லுக்கு ஏற்றமளித்த வர் பௌத்தரே என்பது மிகையாகாது. சங்கம் நிறுவிப் புத்தர் பௌத்த சமயத்தை வளர்த்தார். அம்முறை யில் பாண்டிய மன்னர்கள் தென்னாட்டில் மூன்று சங்கங் கள் நிறுவி முத்தமிழையும் வளர்த்தார்கள். பௌத்த சமயத்தில் சங்கத்திற்கு எவ்வளவு பெருமையுண்டோ அவ்வளவு பெருமை தமிழ் நாட்டில் தமிழ்ச் சங்கத்திற்கு உண்டு.

சங்கமே பௌத்த சமயத்தின் ஆணிவேர் என்பதை யறிந்த சைவ சமயத்தார் அம்முறையைத் தாமும் மேற் கொண்டார்கள். சைவம் நன்றாக நிலைபெறுதற் பொருட் டும், எங்கும் பரவுதற் பொருட்டும் திருக்கூட்டம் தமிழ் நாட்டில் ஏற்படுவதாயிற்று. திருக்கூட்டம் என்பது சிவ னடியார் சங்கம். சோழ நாட்டின் பழைய தலைநகராகிய திருவாரூரில் அமைந்திருந்த திருக்கூட்டத்தின் செம்மை யைப் பெரிய புராணம் எடுத்துரைக்கின்றது. இருவகைப் பாசமும் அற்றவர்கள்; ஈசன் திருவடியைப் போற்றும் செல்வமே மெய்ச் செல்வமாகக் கொண்டவர்கள்;

"மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசும்நீறு போல்உள்ளும் புனிதர்கள்
தேசினால்எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்."

என்று அத்தொண்டர் கூட்டத்தைப் போற்றினார் சேக் கிழார். அத்திருக் கூட்டத்தைக் கண்டார் சுந்தரமூர்த்தி; ஆர்வம் கொண்டார். அன்னார்க்கு அடியவனாக ஆசைப் பட்டார். அவ்வாசையால் எழுந்ததே 'திருத்தொண்டத் தொகை' என்னும் அருமைத் திருப்பதிகம். அதன் அடியா கவே பிற்காலத்தில் திருத்தொண்டர் புராணம் என்னும்

பெரிய புராணம் தமிழ் நாட்டிலே பிறந்தது. ஆகவே, பௌத்த சங்கத்திற்கு நிகராகிய திருக்கூட்டத்தால் சைவ சமயம் அளவிறந்த நன்மை யடைந்தது என்பதில் ஐயமில்லை.

தமிழ் நாட்டில் அரசமரத்திற்கு ஒரு தனிச் சிறப் புண்டு. அரசமரமும் பிள்ளையாரும் இல்லாத ஊர் இந் நாட்டில் இல்லை என்றே சொல்லலாம். அம்மரத்தைச் சுற்றி வந்து வணங்கும் வழக்கமும் இந்நாட்டில் உண்டு. முந்நாளில் பரவியிருந்த பௌத்த சமயத்தால் அம்மரத் திற்கு இத்துணை சிறப்பு ஏற்பட்டதாகத்தோற்றுகின்றது. போதிமரம் என்று சொல்லப்படும் அரசமரத்தின் அடியி லேயே புத்தர் மெய்ஞ்ஞானம் பெற்றார். அதனால் போதி நாதர் என்ற பெயரும் அவருக்கு அமைந்தது. இத்த கைய புத்தரை அரசமரத்தடியில் வைத்துப் பண்டைத் தமிழர் வணங்கினர். புத்தரொடு சேர்ந்த மரமும் புனிதமுடையதாகப் போற்றப்பட்டது. புத்த மதம் இந்நாட்டை விட்டகன்றபோது புத்தரது திருவுருவங்க ளும் பெயர்ந்து மறைந்தன. ஆனால், அரசமரத்தின் பெருமை குன்றவில்லை. புத்தர் இருந்த இடத்தில் பிள் ளையார் இனிதமர்ந்தார்.

ஆகவே, புத்தமதம் ஆதிக்கமிழந்து போய்விட் டாலும் அதன் சின்னங்கள் அடியோடு இந்நாட்டில் அழிந்து போகவில்லை. பஞ்ச காவியங்களில் ஒன்றாகிய மணிமேகலை அதன் பெருமைக்குச் சான்றாக நிற்கின்றது. வீரசோழியம் என்னும் இலக்கண நூல் அம்மதத்தைச் சார்ந்தவரது புலமைத் திறத்தை விளக்கி நிற்கின்றது. போதியின்கீழ் மாதவம் புரிந்த புத்தரின் ஞாபகச் சின்ன மாக அரசமரம் சிறப்புற்று விளங்குகின்றது.

---

# 18. இறையவரும் இன்னுயிரும்

மன்னுயிரனைத்தையும் ஆதரித்துக் காக்கும் அருள் நெறியே நன்னெறியெனத் தமிழ்நாடு பழங்காலத்தே அறிந்து கொண்டது. பிற உயிர்க்கு நலம்புரிந்தோர் இன்புறுவரென்றும், தீங்கிழைத்தோர் துன்புறுவரென்றும் அறநூல் அறிவுறுத்துகின்றது. இவ்வுலகில் வாழும் உயிர்ப்பொருள்கள் பலதிறப்பட்ட அறிவு வாய்ந்தன வாயினும், அவற்றுள் ஊடுருவிச் செல்லும் உயிர்த் தன்மை ஒன்றே என்னும் உண்மையைத் தமிழ்ப் பனுவல் களிற் பரக்கக் காணலாம். அறிவாற் குறைந்த உயிர்கள் பல பிறவிகளெடுத்து மேம்பட்டு, முற்றிய அறிவுடைய உயிர்களாகுமென்று பழந்தமிழ் மக்கள் கருதினார்கள். புல்லாகவும் பூடாகவும் நிற்கும் சிற்றுயிர் அறிவு முதிர்ந்து, மக்களாகவும் தேவராகவும் வளர்ந்து செல்லும் தன்மையைத் திருவாசகம் தெள்ளிதின் உணர்த்துகின்றது. இதனாலேயே புல்லுயிரையும் துன்புறுத்தலாகா தென்று நல்லோர் அருளிப் போந்தார்.

மக்கள் தம் அறிவின் வன்மையால் ஏனைய உயிர்களை நலியா வண்ணம் ஆன்றோர் வகுத்துள்ள செவ்விய நெறி அறியத் தக்கதாகும். எல்லாம் வல்ல இறைவனிடம் அச்சமும் அன்பும் எஞ்ஞான்றும் மக்கட்கு உண்டு என்னும் உண்மையை உணர்ந்த அறவோர், வனவிலங்குகள் முதல் புற்பூண்டுகள் ஈறாக உள்ள எல்லா உயிர்களையும் இறையவரோடிணைத்து அருள்நெறியை இவ்வுலகில் நிலை நிறுத்த முயன்றுள்ளனர். காட்டில் வாழும் விலங்குகளையும், விண்ணிலே பறந்து திரியும் பறவைகளையும், மண்ணிலே ஊர்ந்து செல்லும் உயிர்களையும், நீரிலே வாழும் மீன்களையும், நிலத்திலே மருவி நிற்கும் மரஞ்செடிகளையும் இறைவரோடிணைத்து அவற்றின் உயிரைக் காக்க விரும்பியுள்ளார்கள். காட்டில் வாழும் வேழமும் வேந்

கையும், அரியும் பரியும், மானும் மற்றைய உயிர்களும் இறையவர்க்கு உகந்த பொருள்களாகும். வேழத்தின் உரியும், வேங்கையின் தோலும், ஈசன் உவந்து அணியும் உடைகள். வேங்கையின் தோலை அரையிலுடுத்து, வேழத்தின் உரியால் ஆகத்தைப் போர்த்துக் கடும்பனியுறையும் கயிலைமா மலையில் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். இன்னும், விழுமிய வேழம் விண்ணவர் தலைவற்குரிய வாகனமாகும். அன்றியும், சிவபெருமான் தலைமகனாய பிள்ளையார் திருமுகம் வேழத்தின் முகமாக விளங்குகின்றது. ஆகவே, உருவத்தால் உயர்ந்த வேழம் ஈசனார்க்கும், இந்திரற்கும், பிள்ளையார்க்கும் இனிய உயிராக இலங்குகின்றது. இத்தகைய யானைக்குத் தீங்கிழைத்தோர் அம்மூவரது சீற்றத்திற்கும் ஆளாவரன்றோ? இன்னும் ஈசன் தோள்களில் ஆரமாக இலங்கும் நாகம் திருமாலின் பாயலாகவும் அமைந்துள்ளது. ஆகவே, நஞ்சமைந்த நாகமும் இறையவர் இருவரைச் சார்ந்து இனிது வாழ்கின்றது. விலங்கரசு எனப்படும் அரிமான் காளியின் ஊர்தியாய்க் களித்திருக்கின்றது. பரிமான் பைரவர்க்கு உகந்ததாயிற்று. கலைமான் ஈசனார்கையில் இனிதமர்ந்தது.

காட்டு விலங்குகளை விடுத்து நாட்டுவிலங்குகளைக் கருதுவோமாயின் அவைகளும் இறைவர்க்கு உகந்த உயிர்களாய் இலங்கக் காணலாம். எருது ஈசனது வாகனமாம்; எருமை எமனது ஏற்றமாம். பசுவின் வயிற்றிற் பிறந்த பாலன் சித்திரபுத்திரனாய்ச் சிறந்தான். திருமாலும் பன்றியாய்த் தோன்றினான். நன்றி மறவாத நாய் சாத்தனது நல்வாகனமாம். ஆடு அங்கியங் கடவுளுக்கு அமைந்த ஊர்தியாம். ஆகவே, எருதுக்குத் தீங்கிழைத்தால் ஈசன் முனிவான். எருமைக்குத் தவறிழைத்தால் எமன் விடமாட்டான். பன்றியைக் கொன்றால் மாயோன் சீறுவான். நாயை எறிந்தால் சாத்தன் தொடர்வான். ஆட்டை அடித்தால் அங்கி அடுவான்.

இனி, பறவை இனங்களைச் சிறிது பார்ப்போம். அன்னமும் கிளியும், சேவலும் மயிலும், குயிலும், கொக்கும், காக்கையும், கலுழனும் ஒவ்வோர் இறைவனை ஒன்றி வாழக் காணலாம். அயன் அன்னத்தின் மீதமர்ந்தான். மாரவேள் கிளியின்மீது ஊர்கின்றான். குமரவேள் சேவலைக் கொடியாகவும், மயிலைப் பொறியாகவும் உடையான். குயிலை மாரன் தூதனாக்கினான். கொக்கிறகை ஈசன் தன் வேணியில் அணிந்தான். காக்கையைச் சனியன் பிடித்துக்கொண்டான். கலுழனைத் திருமால் கவர்ந்து கொண்டான். ஆகவே, அன்னத்தை அடிக்கச் சென்றால் அயன் சபிப்பான். மழலை பேசும் கிளியைப் பிடித்தால மாரன் அம்பு தொடுப்பான். சேவலுக்குத் தீங்கிழைத்தால் முருகன் சீறுவான்; மயிலைப் பிடித்தால் அயில் வேலெடுப்பான். குயிலைக் கொன்றால் மாரன் கோபிப்பான். காக்கையைக் கொன்றால் சனியன் தொடர்வான். பருந்துக்குத் தீங்கிழைப்போர் மாயோன் நேமிக்கு விருந்தாவர். எனவே, பறவை இனங்களும் பெரியாரைச் சார்ந்து பயமின்றி வாழ்கின்றன.

இன்னும் சிறிய உயிர்களாய அணிலும், ஆகுவும், குரங்கும், கழுதையும், பெரியாரருளால் பெருமையுற்று விளங்கக் காணலாம். அணிற் பிள்ளை, காலத்தில் உதவி செய்து இராமனது அருளைப் பெற்றது. ஆகுவோ பிள்ளையார் வாகனமாய்ப் பெருமையுற்றது. வானரம் இராமனுக்குத் துணைபுரிந்து உயர்ந்தது. கத்தும் கழுதையோ மூத்தாள் வாகனமாய் அமைந்தது. திருமால் மச்சாவதாரம் கொண்டமையால் மீனினங்களையும் ஈனமென்றெண்ணி ஊறுசெய்தல் ஆகாது.

இனி, மரங்களின் உயிரை ஆன்றோர் பாதுகாத்த மாண்பும் அறிந்து மகிழத்தக்கதாகும். இனிய நிழல் தரும் மரங்களின் அடியில் இறையவரை அமைத்துப் பழந்தமிழ்நாடு வழிபட்டது. குற்றாலநாதர் குறும்பலா

வின்கீழ் அமர்ந்தார். நெல்வேலியப்பர் வேணுவின் அடியில் வீற்றிருந்தார். ஆலவாய் அண்ணல் கடம்பவனத்தில் களித்தமர்ந்தார். தில்லைமரத்தடியில் அழகிய கூத்தர் திளைத்தார். மரமடர்ந்த வனங்கள் பிற்காலத்தில் நகரங்களாகச் சிறந்த பொழுது குறும்பலாவனம் திருக்குற்றாலமாகவும், வேணுவனம் திருநெல்வேலியாகவும், கடம்பவனம் மதுரையாகவும், தில்லைவனம் சிதம்பரமாகவும் திகழ்வனவாயின. முன்னாளில் கல்லாலின் கீழ் அமர்ந்து இறையனார் அறமுரைத்தார். அரசமரத்தடியில் அமர்ந்து கௌதமபுத்தர் அரிய உண்மைகளை அறிந்தார். அசோக மரத்தடியி லமர்ந்து அருகனார் அறமுணர்ந்தார். கூவிள மரம் எப்பொழுதும் ஈசனுக்கு உகந்ததாகும். இன்னும் வன்னியும் தென்னையும், மருதும் நாவலும், மற்றைய மரங்களும் இறையவர் விரும்பி உறையும் இடங்களாகும். வினை தீர்க்கும் விநாயகரை வேம்பும் அரசும் கலந்து வாழுமிடத்தில் அமைத்து வணங்கும் வழக்கம் இன்றும் தமிழ்நாட்டில் நிலவுகின்றது.

மரங்களைப்போலவே செடி கொடிகளும், புற்பூண்டுகளும், இறையவரோடிணைந்து வாழும் தன்மை அறியத்தக்கதாகும். எப்பயனும் தாராத எருக்கும், குருக்கும் ஈசனுக்கினிய வென்றால், ஏனைய செடிகளைச் சொல்லவும் வேண்டுமோ? தும்பையும் துளசியும், அறுகும் புல்லும், இறையவர்க் கேற்றனவாம். மாயோன் துளசியில் மகிழ்ந்துறைகின்றான். ஆனைமுகத்திறைவனுக்கு அறுகினும் இனிய பொருளில்லை. ஆகவே, அறநெறியை அகிலமெலாம் பரப்பக் கருதிய தமிழ்மக்கள் உயிர்ப்பொருள் அனைத்தையும் இறையவரோ டிணைத்துக் காக்கக் கருதிய திறம் நினைக்குந்தோறும் உள்ளத்தை நெகிழ்விப்பதாகும்.

# VII. உருப்படிவ ஒற்றுமை

## 19. ஆண்மையும் அருளும்

நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக இம்பாநிலத்தில், மண்ணாலும் பெண்ணாலும் மாயப்போர் நிகழ்ந்து வருகின்றது. உலகிலுள்ள மக்கள் ஒரு வயிற்றுப் பிறந்தார்போல் ஒற்றுமையாக வாழத் தலைப்பட்டால் போர் ஒடுங்குமென்று மும்மையும் உணர்ந்த மூதறிஞர் கருதுகின்றார்கள். ஆறறிவுடைய மாந்தர் அமர்க்களம்புகுந்து, அடுபோர் புரிந்து குருதி சொரிவதை நினையும்போது அறிஞர் நெஞ்சம் அழிவது இயல்பே யன்றோ? இதனாலேயே இந்நாட்டில் முறை திறம்பாது அரசாண்ட மன்னர் மற்றைய அரசரொடு மலைய நேர்ந்தக் கால்அறநெறி விலகாது அமர் விளைத்தார்கள்.

அருளும் ஆண்மையும் இனிதமைந்த பண்டை அரசர் மாற்றாரொடு பொருவதன் முன்னம் மதிநலம் வாய்ந்த தூதுவரை அவர்பால் அனுப்பி நீதிபெற முயன்றார்கள். இவ்வாறு வெம்போர் விலக்கும் விழுமிய கருத்துடன் வேற்றரசரிடம் செல்லும் தூதரை அவமதிப்பதும் கொல்வதும் ஆகாதென்று அரசநீதி முறையிடுகின்றது. அயோத்தி மன்னனது தூதனாக இலங்கைமா நகருக்குச் சென்ற அனுமன்மீது, சீற்றமுற்று அவனைச் சிதைக்கக் கருதிய அரக்க மன்னனை நோக்கி, அறிவு வாய்ந்த வீடணன்,

"மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்தன்றாம் என
ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டினான்"

என்று கவியரசர் கூறுமாற்றால், தூதரைக் கொல்லும் பாவம் மாதரைக் கொல்லும் மாபெரும் பாவத்தை ஒப்ப தாகும் என்பது நன்கு விளங்குகின்றது. இவ்வாறு தூது போக்கியும் நேர்மை எய்தாத நிலையிலேயே அருள் நிறைந்த அரசர், வேறு வகையின்றி வெம்போர் புரியத் துணிந்தார்கள்.

மாற்றரசர், செம்மைசான்ற நெறி விலகிப் புன்மையே புரியினும் அவரது சிறுமையைப் பொறுத்து, ஒல்லும் வகையால் போரை விலக்க முயல்வதே அறம் திறம்பாத அரசர் செயலாகும். இத்தகைய பெருமை, அயோத்தி அண்ணலாய இராமனிடமும், குருகுல முதல்வனாய தருமனிடமும் தலைசிறந்து விளங்கிற்று. தாயின் மொழியைத் தலைக்கொண்டு நாடு துறந்து காடு புகுந்த இராமனது காதலியை, இலங்கை வேந்தன் வஞ்சனையால் கவர்ந்து அசோகவனத்தில் வைத்தான். மங்கையை இழந்த மன்னன், மலையும் காடும் அலைந்து திரிந்து, மதங்க வனத்தில் வானரத்தலைவனைத் துணைக்கொண்டு, கடல்சூழ்ந்த இலங்கையில் தன் காதலி சிறையிருந்ததை அறிந்து, கருங்கடலைக் கடத்தற்குக் கல்லால் அணை அமைத்து, வானர சேனையோடு இலங்கையின் நகர்ப்புறம் எய்தினான். ஆயினும், தனக்குத் தவறிழைத்த இலங்கைவேந்தன் மீது அமர் தொடங்கு முன்னே, அம்மன்னன் திருமகளை விடுவானோ என்று அறியுமாறு அங்கதனை இலங்கைக்குத் தூதனுப்பத் துணிந்தான். இவ்வாறே சூதினால் அரசிழந்து, பன்னீராண்டு படர்கானகத்தில் துயர் உழந்து அப்பால் ஓராண்டு ஒருவருமறியாது ஊர் நடுவே கரந்துறைந்து முடிந்த பின்னும், வழிக்கு வாராத வணங்கா முடி மன்னன்மீது, படையெடுக்கு முன்னமே குருகுல மன்னன் கண்ணனைத் தூதனுப்பிக் கடும்போர் விலக்கக் கருதினான்.

விதிக்கும் விதியாகும் வில்லைத்தாங்கிய இலக்குவனைத் துணைக்கொண்ட இணையற்ற இராமவீரன், இலங்கை நாதனது புயவலியும் படைவலியும் கண்டு பயந்து அவன் பால் தூதனுப்பினான் அல்லன். அவ்வாறே தண்டேந்திய வீமனையும், தனுவேந்திய விசயனையும் துணையாகக் கொண்ட தருமன், நூற்றுவராய் விளங்கிய மாற்றார் படைவலி கண்டு மயங்கிக் கண்ணனைத் தூதனுப்பினான் அல்லன். கடும்போரால் விளையும் கொடுமையையும் கொலையையும் விலக்கக் கருதிய விழுமிய அருளாலேயே, இருவரும் மானமும் கருதாது தூது போக்கினார் என்பது இனிது விளங்கும்.

இத்தகைய கரையிறந்த கருணையையும், வரையிறந்த பொறுமையையும் கண்ட வலிமை சான்ற தம்பியர் வருத்தமுற்றுக் கோபத்தாற் கொதித்தார்கள். மாற்றார் படையைக் கண்டு கலங்காத தம்பியர், மூத்தோர் கருணையைக் கண்டு கலங்கினார்கள். மானத்தால் மனமிடிந்த தம்பியர், மாற்றரசரிடம் வில்லாட இசைந்தனரேயன்றிச் சொல்லாட இசைந்தாரல்லர். 'தேவியை விடுகின்றானா, அன்றி ஆவியை விடுகின்றானா' என்றறிந்து வருமாறு இராமன் தூதனுப்பத் துணிந்தபோது, எவர்க்கும் இளையாத இலக்குவன், தலைவனை நோக்கி, "ஐயனே! இலங்கைஅரக்கன் உன் தேவியைச் சிறையில் வைத்தான்; தேவரை இடுக்கண் செய்தான்; அந்தணரை அலற வைத்தான்; இந்திரனுக்கு இடர் விளைவித்தான்; மாயத்தால் சீதையைக் கவர்ந்து மயங்க வைத்தான்; சஞ்சலத்தால் நைந்த மங்கைக்கு அஞ்சேல் என்று அபயமளித்த கழுகின் வேந்தனைக் கருணையின்றிக் கொன்றான். இத்தகைய பாவியின் ஆவியைப் போக்காது அருள் காட்டலாகுமோ" என்று வெகுண்டுரைத்தான். இவ்வுரையை அமையக் கேட்ட அயோத்தி அண்ணல், புன்னகை பூத்து, "புயவலி அமைந்திருப்பினும் பொறையொடும் பொருந்தி வாழ்

வதே ஏற்றதாகும்; அதுவே அறமுமாகும்'' என்று மாற்றம் உரைத்தான்.

இப்படியே வம்பு செறிந்த வணங்காமுடி மன்னன் பால் கண்ணனைத் தூதனுப்பத் துணிந்தபோது, தண்டேந்திய வீமன் தருமனை நோக்கி, ''ஐயனே! பன்னலம் திகழும் பாஞ்சாலி பாவியர் கைப்பட்டு,

''ஆறாகி இருதடங்கண் அஞ்சன
வெம்புனல் சோர அளகம்சோர
வேறான துகில் தகைந்த கைசோர
மெய்சோர வேறோர் சொல்லும்
கூறாமல் கோவிந்தா கோவிந்தா என்று
அரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ்தூற உடல் புளகித்து
உள்ள மெலாம் உருகினாளே.''

அப்பொழுது தலைகவிழ்ந்து பொறுத்திருந்து நமக்கும் நம் மரபினுக்கும் என்றும் தீராத வசை தந்தீர்; அப்பால், பதின்மூவாண்டு காட்டிலும் நாட்டிலும் கழித்த பின்னரும் அமர் புரிந்து, மாற்றரசர் உடலம் துணித்து உலகாளத் துணியாது, இன்னும் தூதனுப்பிப் பணிந்து இரந்து புவிபெற்று உண்டு இருப்பதற்குத் துணிகின்றீரே! அந்தோ! அரவுயர்த்தோன் கொடுமையினும், முரசுயர்த்தோய்! உமது அருளுக்கு அஞ்சினேன். ஐயோ, என் தமையன் வாடுகின்ற மடப்பாவை வரம் முடித்தான்; இளையவர் கூறிய வஞ்சினம் முடித்தான்;

'' மலைகண்டதென என்கை மறத்தண்டின்
வலிகண்டும் மகவான் மைந்தன்
சிலைகண்டும் இருவர்பொருந் திறல் கண்டும்
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும் இவள்விரித்த குழல் கண்டும்
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்

> கொலைகண்டு மகிழாமல் அவன் குடைக்கீழ்
> உயிர்வாழக் குறிக்கின் ருயே''

என்று கொதித்துக் கூறினான். அப்போது "அறநெறி யுணர்ந்த தருமனது உரைவழி நிற்றலே தக்கதாகும்' என்று கண்ணன் எடுத்துரைக்க வீமனும் அடங்கி நின்றான்.

அப்பால், போர் நிகழ்ந்த காலத்தில் மானத்தால் மனங் கொதித்த தம்பியைத் துணைக்கொண்டு அயோத்தி மன்னன் இலங்கை வேந்தனை வென்றான். செம்மை தவறிய சுயோதனன் செயல்கண்டு சிந்தையழிந்த தம்பிய ரைத் துணைக்கொண்டு, குருகுல வேந்தனும் மாற்றானை வென்றான்.

அறம் திறம்பாத இவ்வரசர் இருவரும் பொறுமை யென்னும் பெருமைக்கோர் இருப்பிடமாய் இலங்கினர்; மாற்றார் சிறுமை செய்யினும் அச்சிறுமையைத் தம் பெருமையாற் பொறுத்து அறநெறியில் தலைநின்றனர். பகைவரது மிகையால் போர் செய்ய நேர்ந்தபோ தும், அறம் திறம்பாத முறையில் அமர் நிகழ்த்தினார்கள். படைக்கல மிழந்து எளியனாய் எதிர்ப்படும் பகைவனை அருள் வாய்ந்த அரசர், எஞ்ஞான்றும் தமது படைக் கலத்தால் நலிவதில்லை. வெள்ளிமாமலை யெடுத்த இரா வணன் படைக்கல மிழந்து எளியனாய் எதிரே போர்க் களத்தில் நிற்கக்கண்ட கோசல நாட்டு வள்ளல், அருள் அளாவிய ஆண்மையோடு,

> "ஆளையா உனக் கமைந்தன
> மாருத மறைந்த
> பூளையாயின கண்டனை
> இன்றுபோய்ப் போர்க்கு
> நாளைவாவென நல்கினன்.''

என்று கவியரசர் கூறுமாறு பகையரசனுக்கு விடை கொடுத்தனுப்பினான்.

அவ்வாறே வில்லாண்மையில் தலைசிறந்து விளங்கிய விசயன், படைக்கலம் இழந்து எளியனாய் நின்ற கர்ண னது நிலைகண்டு தளர்ந்து அந்நிலையில் அவன்மீது அம் பெய்தலைத் தவிர்த்த ஆண்மை இராமனது உயரிய அருளை நிகர்ப்பதாகும்.

"அன்றுபோர்புரி சேனையின்பதி
யானவீரனை நீ
இன்றுபோய் இனி நாளைவா என
இனி தியம்பினனால்
வென்றி கூர்வரி வின்மையால் அடல்
வெவ்வரக்கனை முன்
கொன்றகாளையை ஒத்த பேரிசை
கொண்ட ஆண்மையினான்."

என்று வில்லி, விசையனது பெருமையைப் போற்றி புகழ்ந் தார். இவ்வாறு அருளும் ஆண்மையும் வாய்ந்த அற நெறி மறநெறியோடு மாறுபடும் பொழுது இறுதியில் அறமே வெல்லும் என்பது ஒருதலை. "பொறுத்தார் பூமி யாள்வார்" என்னும் பொய்யாமொழிக்குக் குரு குலக் குரிசிலும், கோசல நாட்டு வீரனும் இணையற்ற சான்றாக அமைவது இதனால் இனிது அறியப்படும்.

'ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்" —திருவள்ளுவர்.

---

# 20. கர்ணனும் கும்பகர்ணனும்

தொன்று தொட்டுச் செய்ந் நன்றியறிதலைக் கடைப்பிடித்த நாடுகளில் தமிழ்நாடு தலைசிறந்தது. நன்றி மறப்பது நன்றன்று என்றும், நன்றல்லதை அன்றே மறப்பது நன்று என்றும் தமிழ்மறையாகிய திருக்குறள் கூறுகின்றது. இன்னும் காலத்தினாற் செய்த நன்மை சிறிதாயினும் அது ஞாலத்தின் மாணப் பெரிது என்றும், தினைத் துணை நன்மை செயினும் அதைப் பனைத் துணையாய்க் கொள்ளுதலே பண்புடைமையாகும் என்றும், அறநூல்கள் நன்றியின் பெருமையை நயம்படக் கூறுகின்றன.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று நாயனார் கூறிய அறவுரையைப் பொன்போல் போற்றினர் தமிழ்மக்கள். இக்குறளில் அடங்கிய கருத்தை விரித்துரைக்கப் போந்த கல்வியிற் பெரியராய கம்பர்,

"சிதைவகல் காதல் தாயைத்,
தந்தையை, குருவை, தெய்வப்,
பதவி அந்தணரை, ஆவை
பாலரைப், பாவைமாரை
வதைபுரிகுநர்க்கும் உண்டாம்
மாற்றலா மாற்றல், மாயா
உதவி கொன்றார்க்கு என்றேனும்
ஒழிக்கலாம் உபாயமுண்டோ"

என்று நன்றியின் பெருமையை நன்கெடுத்துரைத்தார். முன்னறி தெய்வமாய தாயையும் தந்தையையும், அறியாமையை அகற்றும் ஆசானையும், அறம் திறம்பாத அந்தணரையும், பயன் உவந்தளிக்கும் பசுவையும், பாவம் ஒன்றறியாப் பாலரையும், மெல்லியல்வாய்ந்த மாதரையும், கொலை புரியும் கொடியருக்கும் அறநூல்கள் கழுவாயமைத்துள்ளன; ஆனால் செய்ந்நன்றி சிதைத்தோர்க்கு

எஞ்ஞான்றும் உய்யும் வழியில்லை என்று கம்பர் போற்றி உரைத்த பொருள்நயம் அறிதற்குரியதாகும். முந்தித் தவம் கிடந்து, முன்னூறு நாட்சுமந்து, அந்திப்பகலாய் இறைவனை வந்தித்துப் பெற்றெடுத்த அன்னையைக் கொன்ற அரும்பாவமும் அகன்றுவிடலாம். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று தக்கோர் போற்றும் பெருமை வாய்ந்த பிதாவைக் கொன்ற பிழையும் தீர்ந்து விடலாம். இருமுது குரவர்க்கும் அடுத்த நிலையில் அமைந்து, அஞ்ஞான இருளகற்றும் ஆசிரியரைக் கொன்ற பாவமும் அற்று விடலாம். மண்ணுலகில் வாழும் எல்லா உயிர்களிடத்தும் செந்தண்மை பூண்டு அறநெறியில் நிற்கும் அந்தணரைக்கொன்ற அரும் பாவமும் நீங்கி விடலாம். மண்ணுலகில் வாழும் மக்கட்கெல்லாம் அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந்து அமுதளிக்கும் ஆவைக் கொன்ற பாவமும் அகன்று விடலாம். இறைநலம் மாருத இளம்பாலரையும் மெல்லியல் வாய்ந்த மாதரையும் கொன்ற கொடும் பாவமும் குறைந்து ஒழிந்துவிடலாம். ஆனல், செய்ந்நன்றியை மறந்தோர் எக்காலத்தும் எவ்வாற்ருனும் அப்பாவத்தினின்றும் தப்பிப் பிழைத்தல் இயலாததாகும் என்று வள்ளுவர் கருத்தைக் கம்பர் விரித்துரைத்து விளங்க வைத்தார். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்றும், 'உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்தல் ஆகா' தென்றும், தமிழ்நாட்டில் வழங்கிவருகின்ற பழமொழிகளே, இந்நல்லறம் இங்கு நெடுங்காலமாகப் போற்றப் பட்டு வருவதற்குப் போதிய சான்ருகும்.

செய்ந்நன்றி அறிதலென்னும் செம்மைசான்ற தொல்லறம் அங்கநாட்டு அரசனுய கர்ணன் இடமும், இலங்கை நாட்டு வீரனுன கும்பகர்ணன் இடமும், தலைசிறந்து விளங்கிற்று. கர்ணன், கன்னியாயிருந்த குந்திதேவியின் மைந்தனுய்த் தோன்றினன். கன்னிப் பருவத்திற் பிறந்த மைந்தனையும், அவனை உயிர்த்த அன்னையாய தன்னையும்

உலகோர் பழிப்பர் என்றுன்னி அழகிய மைந்தனை ஒரு பேழையில் அடைத்து ஆற்றிலிட்டாள் அன்னை. ஆதரவற்று ஆற்றில் மிதந்து வந்த மைந்தன் ஒரு தேர்ப்பாகன் கையிற் சேர்ந்து அவன் மனையில் வளர்பிறை போன்று வளர்ந்து வந்தான். இளமையிலேயே வீரமும் அழகும் வாய்ந்து விளங்கிய கர்ணனைக்கண்ட துரியோதனன்

"கற்றவர்க்கும் நலனிறைந்த
கன்னியர்க்கும் வண்மைகை
உற்றவர்க்கும் வீரரென்று
உயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
கொற்றவர்க்கும் உண்மையான
கோதில் ஞான சரிதராம்
நற்றவர்க்கும் ஒன்று சாதி
நன்மை தீமை இல்லையால்"

என்றவாறு அவ்வீரனை ஆதரித்து, அங்கநாட்டுக்கு அரசனாக்கி, அவனுடன் தோழமை கொண்டான்; தன் தம்பியரும் சுற்றமும் அவன் அடிவணங்குதற்குரிய தோற்றமும் ஏற்றமும் அளித்தான். அனாதையாய் ஆற்றில்மிதந்து வந்த தன்னை அன்போடு வளர்த்து, அரசுரிமையும் அளித்து, அயலார் நகையாதவாறு அரும் பதவியும் நல்கிய துரியோதனனைக் கர்ணன் அருமையாய்ப் போற்றினான்.

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் கடும்போர் நிகழும் என்றறிந்த கண்ணன் அறநெறி துறந்த மாற்றாரது படையில் ஒப்புயர்வற்ற வீரனாகக் கர்ணன் விளங்கக் கண்டான். பாண்டவர் அவனது படைவலிக்கு ஆற்றார் என்றறிந்து, குந்திதேவியைக் கர்ணன்பாலனுப்பி, அவ்வீரனது வரலாற்றை அறிவித்து, அங்கர்பிரானை ஐவரோடும் சேர்க்க விரும்பினான்; அவ்வாறே குந்திதேவியைக் கர்ணனது மாளிகைக்கு அனுப்பினான். கர்ணனும் குந்திதேவியை அன்பினால் இன்புற வணங்கி ஆசனத்தமர்த்தினான். அப்போது குந்தி தன் மைந்தனைக் குழைந்து

நோக்கி 'ஐயனே, யானே உன்னை ஈன்ற தாய்; கதிரவன் அருளால் என்பால் நீ பிறந்தாய்; பழியஞ்சி உன்னைப்பேழையில் விடுத்தேன்' என்றுரைத்துப் பால்சோரநின்ருள். கர்ணனும் குந்தியைத் தன் அன்னை என்று ஐயமற அறிந்தான். அந்நிலையில், குந்தி மைந்தனை அன்போடு அணைத்து, பொன்முடி மோந்து, "ஐயனே! உன்னை அருமையாக வளர்த்தெடுக்க அருந்தவம் செய்திலேன்; ஆயினும்,

"வருக என்மதலாய், இளைஞர் ஐவரும்நின்
மலரடி அன்பினுல் வணங்கும்
உரிமையால் மனம் ஒத்து ஏவலேபுரிய
ஒருதனிச் செய்யகோ லோச்சி
அரசெலாம் வந்துன் கடைத்தலை வணங்க
ஆண்மையும் செல்வமும் விளங்கக்
குருகுலா திபர்க்கும் குரிசிலாய் வாழ்வு
கூர்வதே கடனெனக் குறித்தாள்."

'என் பிள்ளாய் வருக; உன் தம்பியர் ஐவரும் அன்பினுல் வணங்கி ஆட்செய்ய நீயே அரசனுய் அமர்ந்து ஆண்மையும் செல்வமும் விளங்கச் செங்கோல் செலுத்துதல் முறையாகும்,' என்று மொழிந்தாள் குந்திதேவி.

"தாயிற்சிறந்தொரு கோயிலும் இல்லை" என்னும் அமுத வாக்கைக் கர்ணன் நன்கு அறிந்தவனே யாயினும் சுயோதனன் தனக்குச்செய்த பெரு நன்றியை மறந்து அன்னையின் உரைவழி நடக்க இசையானுயினுன்.

"திடம்படுத்திடுவேல் இராச ராசனுக்குச்
செருமுனைச்சென்று செஞ்சோற்றுக்
கடன்கழிப்பதுவே எனக்கு இனிப்புகழும்
கருமமும் தருமமும் என்றுன்"

"எனக்கு நன்றிசெய்த மன்னனுக்காக அமர்க்களத்திற் சென்று போர்புரிவதே அறமும் புகழும் ஆகும். அவன் உணவையுண்டு வளர்ந்த யான் செஞ்சோற்றுக் கடன்

கழியாது என் தம்பியருடன் சேரேன்'' என்று கர்ணன் எடுத்துரைத்த வீரமொழிகளில் அவனது நன்றி மறவாத நலத்தினை நன்கு காணலாம். பாண்டவர் தன் தம்பியர் என்று தயங்காது, தாய்மொழியைத் தலைமேற் கொள்ளுதலே தக்கதென்றும் எண்ணாது, செய்ந் நன்றி யறிதலே செம்மைச்சான்ற அறம் எனத் துணிந்து, அவ் வற நெறியில் நின்று அமர்க்களத்தில் ஆவிதுறந்த கர்ணனது அருங்குணம் போற்றுதற்குரியதன்றோ?

இவ்வாறே இலங்கைவேந்தனது தம்பியாய்த்தோன்றிய கும்பகர்ணன், வரத்திலும் வலிமையிலும் சிறந்து விளங்கினான். கூற்றையும் ஆடல்கொண்ட அவ்வீரன் அறநெறியில் நிற்கும் இயல் அமைந்தவன்; அயோத்தி மன்னனது மனையாளாய சீதையை இலங்கை நாதன் கவர்ந்து சிறைசெய்தது அடாத செயல் என்று அவனிடம் எடுத்துரைத்தான்; பிறன்மனை நயந்த தமையனது காதல் தவறு என்று இடித்துரைத்து அவனைத் திருத்த முயன்றான். ஆயினும், தீராக்காதல் கொண்ட தமையனைத் திருத்துதல் இயலாதென்றறிந்தபோது, அவனுக்குத் துணையாக அமர்புரிந்து ஆவிதுறப்பதே ஏற்றதாகும் என்றெண்ணிப் போர்க்களம் புகுந்தான். கும்பகர்ணனது நீர்மையையும் ஆற்றலையும் அறிந்த இராமன் அவ்வீரனைத் தன்பால் இழுத்துக்கொள்ளுமாறு விபீஷணனை அனுப்பினான். அவனும் கும்பகர்ணனை அடைந்து, அடிபணிந்து ''ஐயனே! எனக்கு இன்னருள் சுரந்த இராம வீரன் உனக்கும் அபயமளிப்பான்; மாயப்பிறவி நோய்க்கும் மருந்தாய் அமைவான்; எனக்கு அவன் தந்த இலங்கையரசும் செல்வமும் உனக்கு யான் தருவேன்; ஆதலால், தீவினை புரியும் தமையனைத் துறந்து, அறநெறியாய இராமனைச் சேர்தலே அறிவுடைய உனக்கு அழகாகும்' என்று நீதியின் நீர்மையை எடுத்துரைத்தான்.

அது கேட்ட கும்பகர்ணன் மனம் வருந்தித் தம்பியை நோக்கி "ஐய, நீரில் குமிழிபோல் நிலையற்றதாகிய இவ்வுலக வாழ்வை விரும்பி இராவணன் எனக்குச் செய்த பெருநன்றியை மறப்பேனோ? நெடுநாளாக என்னை வளர்த்துப் போர்க்கோலம் செய்து, இங்கனுப்பிய இலங்கை நாதனுக்கு உயிர்கொடாது பகைவர் பக்கம் போவேனோ? இலங்கையின் இருநிதியை விரும்பி என் தமையனது உயிரை வாங்கும் பகைவனைப் பணிந்து இரந்து பதவி பெற்று இருத்தல் எனக்கு ஏற்றதன்று. நீ சொல்லிய நீதி முறை யனைத்தும் உனக்குத் தக்கதேயாம்'' என்று வீரமொழி புகன்று, தம்பிக்கு விடைகொடுத்து அனுப்பினான். தன் தலைவன் தகாதசெயல் செய்து நெடும் பகை தேடினான் என்று நன்றாய் அறிந்திருந்தும், இராம வீரனது இணையற்ற கணையால் தான் ஆவி துறப்பது திண்ணம் என்று தெரிந்திருந்தும், ஆவியையும் அளவிறந்த செல்வத்தையும் வெறுத்து, தமையன் பொருட்டு உயிர் துறந்த வீரனது மனநலம் வியந்து போற்றுதற்குரிய தன்றோ? ஆகவே கர்ணனும் கும்பகர்ணனும் செய்ந்நன்றியறிதலாகிய அறத்தை ஆவியினும் அருமையாக ஆதரித்த வீரர் என்பது இனிதுணரப்படும்.

---

# 21. காளத்தி வேடனும் கங்கை வேடனும் ★

தமிழ் நாட்டுக் காளத்தி மலையிலே தோன்றினான் ஒரு வேடன். வட நாட்டுக் கங்கைக் கரையிலே பிறந்தான் மற்றொரு வேடன். அவ் இருவராலும் வேடர் குலம் பெருமையுற்றது. காளத்தி வேடனைக் கண்ணப்பன் என்றும், கங்கை வேடனைக் குகன் என்றும் காவிய உலகம் போற்றும். இருவரும் உயரிய அன்பு நெறியைக் கடைப்பிடித்து அழியாப் புகழ் பெற்றனர்.

காளத்தி நாதன்பால் வைத்த அன்பினால் தன் கண்ணையும் பெயர்த் தெடுத்த கண்ணப்பன் பெருமை தமிழ் நாடெங்கும் பரவி நின்றது. எல்லையற்ற அன்பிற்கு அவ்வேடர் பெருமானே எடுத்துக்காட்டாயினான்.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப்பணித் தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று வண்டை நோக்கிப் பாடும் பான்மையில் கண்ணப்பனது எல்லையற்ற அன்பின் திறத்தினை மாணிக்க வாசகர் நன்கு விளக்கி யுள்ளார். திருவாசகத்திலும் தேவாரத் திருப்பாசுரங்களிலும் கண்ணப்பன் பெருமை பேசப்படுதலால் சைவ சமயத்தை நிலை நிறுத்திய நால்வருக்கும் அவர் முந்தியவர் என்பது நன்கு விளங்குகின்றது. காளத்திநாதனை வணங்கிய திருஞான சம்பந்தர் கும்பிட்ட பயன் காண்பார்போல் வேடர் பெருமானாகிய கண்ணப்பனைக் கைதொழுதாரென்று சேக்கிழார் அழகாக எழுதிப் போந்தார்.

---

★ நேமத்தான் பட்டி, திருநாவுக்கரசு வித்தியாசாலையின் பதின் மூன்றாவது ஆண்டுவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்

கல்வியில் பெரியராய கம்பர் இராமகதையை வடமொழிக் காவியத்தினின்றும் எடுத்துக் கொண்டாரேனும் அதனைத் தமிழ் நாட்டாருக்கு ஏற்ற முறையில் புதுக்கி இனியதோர் விருந்தாக அளித்துள்ளார். இராமரிடம் அன்பு பூண்ட கங்கை வேடனை உருவாக்கும் பொழுது, கம்பர் உள்ளத்தில் காளத்திவேடன் வடிவம் கனிந்து இலங்கிற்று. காளத்தி வேடனைக் கருவாகக் கொண்டு கங்கை வேடனாய குகனை வார்த்து வடித்துள்ளாரென்று தோற்றுகின்றது. இதற்கு இரண்டொரு சான்றுகள் காட்டுவேன்.

கோசல நாட்டு இளவரசனாகிய இராமன் தாயின் சொல்லைத் தலைக்கொண்டு தனக்குரிய நாடு துறந்து கங்கைக் கரையை வந்தடைந்தான் என்று அறிந்த குகன் அக்குரிசிலைக் காணப் புறப்பட்டான். வான்மிக முனிவர் எழுதிய வடமொழிக் காவியத்தில் குகன் இராமனைக் காணப் புறப்படும் காட்சி, ஓர் அரசன் மற்றொரு அரசனைக் காண எழுகின்ற கோலம்போல் அமைந்திருக்கிறது. ஆனால் கம்பர், ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவன் கோலம் போல் குகன் உருவத்தைத் திருத்தி யமைத்துள்ளார்.

"தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாயடியேன்"

என்று குகனே கூறுதலால் இவ்வுண்மை விளங்கும்.

காளத்தி வேடன் தனக் கினிய இறைச்சியே தன் தலைவனாகிய இறைவனுக்கும் இனிதாகும் என்று எண்ணி அதனை எடுத்து ஊட்டியவாறே குகன் தனக்கினிய கங்கையாற்று மீனையும், கொம்புத் தேனையும் எடுத்துக் கொண்டு சென்றான். அவ்விரண்டையும் இராமன் திருமுன்பு வைத்து "ஐயனே! தேனும் மீனும் திருத்திக் கொணர்ந்தேன். தேவரீர் திருவமுது செய்தருளல்வேண்

டும்'' என்று இறைஞ்சி நின்றான். அச்செயல் நிகழும்போது இராமனைச் சூழ்ந்து விருத்த மாதவர் சிலர் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் குகனது மனப்பான்மையை அறியாராய், தகாத பொருள்களை வேடன் எடுத்துவந்து அபசாரம் செய்துவிட்டான் என்றெண்ணி வெறித்து நோக்கினார்கள். அவர்கள் மனத்தில் நிகழ்ந்த கருத்தினை அறிந்த இராமன்,

"அரியதாம் உவப்ப உள்ளத்து
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்
அமுதினும் சீர்த்த வன்றே"

என்று விருத்த மாதவரைத் தெருட்டி யருளினான். இதற்கு நேரான செயல் கண்ணப்பன் சரித்திரத்தில் உண்டு. கண்ணப்பன் வழிபட்ட காளத்திநாதனை சிவகோசரியார் என்னும் வேதியர் முறைப்படி பூசனை செய்து வந்தார். கண்ணப்பன் இறைச்சியைக் கொண்டு அசுத்தப் படுத்தியதைக்கண்டு இன்ன செய்வதென்றறியாது கவலைகொண்டிருந்தார். அதை உணர்ந்த இறைவன் அவர் கனவிலே தோன்றி,

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள் செய்வார்"

இது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

இனி, காளத்தி நாதனைக் கண்ட கண்ணப்பனைப் போலவே இராமனைக் கண்ட குகனும் பிரிந்திருக்கலாற்றாத மனப்பான்மை பெற்றான். அந்தி மாலை வந்தடைந்த பொழுது இராமன் குகனை நோக்கி "அப்பா! இன்றிரவு உன் ஊருக்குச் சென்று, நாளை காலையில் கங்கையாற்றைக் கடப்பதற்குப் படகுகள் கொண்டு வருக'' என்று

சொல்லிய பொழுது குகன் மனம் அனலிடைப் பட்ட மெழுகுபோல் உருகுவதாயிற்று. "என் ஐயன், என் ஆண்டவன், என்னைப் போ என்றானே. அவனை விட்டு நான் எவ்வாறு போவேன்? எங்கே போவேன்? அவனுட னிருத்தலே எனக்குப் பேரின்பம். அவனைப் பிரிந்திருத் தல் பெருந்துன்பம்" என்று கருதி இராமனை நோக்கி, "ஐயனே! நான் போகலாற்றேன்; ஈண்டிருந்து என்னால் இயன்ற தொண்டு செய்வேன்" என்றான்.

"கார்குலாம் நிறத்தான் கூறக்
காதலன் உணர்த்துவானிப்
பார்குலாம் செல்வ நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வனேன் யான்
இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆனதைய
செய்குவன் அடிமை என்றான்"

என்று குகன் பெருமையை அறிவிக்கும் கம்பர் பாட்டு மிக அழகு வாய்ந்ததாகும்.

"என் பெருமானே! அயோத்திமா நகரில் அரியாசனத் தில் வெண்கொற்றக் குடையின் கீழ் அமர்ந்து, செங்கோ லேந்தி அரசாளும் கோலத்தில் காணவேண்டிய உன்னை சடைமுடியும் மரவுரியும் தரித்துக் கானகப் புல்லில் அமர்ந்திருக்கக் கண்டேனே! என் கண் செய்த பாவம் கடலினும் பெரிது! இந்தக் கோலத்தில் உன்னைக் கண்ட என்கண்களைப் பறித்தெறியாத பாவியானேன். ஆயினும், ஐயனே! உன்னை விட்டுப் போக என்னால் இயலாது; என்னாலியன்ற சிறு தொண்டு செய்துகொண்டு ஈண்டு த்தான் இருப்பேன்" என்று மனங்கசிந்து பேசினான். கங்கைவேடன் பேசிய வாசகத்தின் சுவையை அறிந்த இராமன்,

" சீதையை நோக்கித் தம்பி
திருமுகம் நோக்கித் தீராக்
காதலன் ஆகும் என்று
கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப
இருத்தி ஈண்டு எம்மொ டென்றான். "

"யாதினும் இனிய நண்ப" என்று அழைத்தமையால், குகன் இராமனுக்குப் பொன்னினும் இனியன் ஆனான்; புகழினும் இனியன் ஆனான்; மற்றெதனினும் இனியன் ஆனான் என்பது வெளிப்படையாக விளங்குகின்றது. இங்ஙனம் ஆட்கொள்ளப்பட்ட குகன் அகமும் முகமும் மலர்ந்தான். அன்றிரவு நாணற்பாயலில் இராமனும் சீதையும் படுத்துறங்க, இலக்குவன் வில்லை யூன்றிய கையோடு அவ்விருவரையும் காத்து நிற்க, அன்பு வடிவாய குகன் முறையாக மூவரையும் காத்து நின்றான். இரவு முழுவதும் கண்ணிமையாது காவல் செய்த குகன், இன்பப் பணியிலே ஈடுபட்டான். காளத்தி நாதனை இராப்பொழுதில் கண்ணிமையாது காத்துநின்ற கண்ணப்பனைப் போலவே இராமனைக் காத்து நின்ற குகன் தன்மை காணப்படுகின்றது.

இன்னும் காளத்தி வேடனது அன்பிற்கும் கங்கை வேடனது அன்பிற்கும் ஒரு சிறந்த ஒற்றுமை யுண்டு. இருவரும் இறைவனிடம் பயன் கருதாப் பக்தி பூண்டவர்கள்; "கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன்" என்று கொண்டவர்கள். இத்தகைய பக்தியே சாலச் சிறந்தது என்று சான்றோர் கூறுவர். இராமன் நாடு துறந்து காடு புகுந்த பின்னர், அவன்பால் அன்பு கொண்டவர் மூவராவர். கங்கைக் கரையிலே குகன் இராமனைச் சேர்ந்தான்; கிஷ்கிந்தையில் சுக்ரீவன் வந்து சேர்ந்தான்; இலங்கையில் விபீஷணன் வந்து அடைந்தான். தன்னை வந்தடைந்த மூவரையும் தன் குடும்பத்திலே சேர்த்துக்கொண்

டான் இராமன். எனினும் சுக்ரீவன் இராமனிடம் அன்பு பூண்டதற்குக் கைம்மாருகக் கிஷ்கிந்தை அரசைப் பெற்ருன். வீபீஷணன் இராமனைச் சரணடைந்து இலங்கைச் செல்வம் பெற்ருன். குகன் ஒருவனே பக்திக்காகப் பக்தி செய்து, கைம்மாறு கருதாத அன்பின் நீர்மையை நன்கு விளக்கிக் காட்டினுன்.

இவ்வாறு கனிந்த அன்பு வாய்ந்த காளத்தி வேடனையும், கங்கை வேடனையும் குறிக் கோளாகக் கொண்டு இறைவனை நினைந்துருகிய அன்பர் நிலையும் அறியத் தக்கதாகும். அன்பைப் பெருக்கி இன்பப் பேறடையக் கருதிய ஆன்ருேர் இவ்விரு அடியாரது எல்லையற்ற அன்பின் பெருக்கை நினைந்து உள்ளம் உருகினர்.

முற்றத் துறந்த பட்டினத்தடிகள் என்று தமிழகம் போற்றிப் புகழும் பெரியார், கண்ணப்பனது அருஞ் செயலை நினைந்து கரைந்து உருகுவாராயினர். காளத்தி மலையிலமர்ந்த ஈசனுக்கு ஆளாகக் கருதிய அடிகள்,

> "வாளால் மகவரிந்து ஊட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
> சூளால் இளமை துறக்கவல்லேன் அல்லன் தொண்டுசெய்து
> நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேனல்லன் நான்இனிச் சென்று
> ஆளாவதெப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே"

என்று மனம் குழைந்தார். "ஐயோ! பெற்ற பிள்ளையை வாளாலரிந்து இறைவனுக்கு இன்னமுதூட்ட வல்லேனு? திருநீலகண்டன்மேல் மனையாள் வைத்த ஆணை கடவாது இளமையிலேயே ஐம்பொறிகளையும் வென்று, இன்பம் துறக்க வல்லேனே? ஆறுநாள் பழகிய பான்மையில் ஆராத அன்பு வாய்ந்து கண்ணைப் பறித்து, இறைவனது கண்களில் அப்ப வல்லேனு? இத்தகைய ஏழையாகிய யானும், மெய்யடியார் போல் நடித்து, வீடகத்தே புகுந்திட விழைகின்றேன்" என்று உள்ளத் துறவமைந்த உயரிய அடிகள் உருகுவாராயினர். கடந்தோர்க்

கும் கடத்தலரிதாய மக்கட் பாசம் நீத்த ஒரு தொண்டர் பெரிய சிறுத் தொண்டராய்ப் பேறுபெற்ருர். மனையாள் மீது வைத்த பாசம் துறந்த மற்ருெரு தொண்டர் இறைவனது அன்பிற் குரியராயினர். கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்றறிந்தும் ஈசன்பால் வைத்த நேசத்தால், இரு கண்களையும் ஈர்த்தளிக்க இசைந்த ஒரு தொண்டர் மாறிலா இன்பத்தில் மகிழ்ந்தார். இவ்வாறு அகம் புறமென்னும் இருவகைப் பற்றையும் அறவே களைந்து, இறைவன்பால் அன்பை வளர்த்த அடியாரது நிலையை நினைந்து பட்டினத்தடிகள் உருகும் பான்மை அறிந்து போற்றத் தக்கதாகும்.

காளத்தி வேடனைக் குறிக்கோளாகக் கொண்டு அடிகள் கரைந்துருகிய தன்மைபோல், கங்கை வேடனை இலக்காகக் கொண்டு, வானர வேந்தனை சுக்ரீவன் வாடி வருந்தினன். இருமையும் தரும் பெருமானுய இராமனிடம் எப்பயனையும் கருதாது விழுமிய அன்பு பூண்ட வேடனது பெருமையையும் தனது சிறுமையையும் நினைத்துச் சுக்ரீவன் சிந்தை தளர்ந்தான். வானர சேனை இலங்கை மாநகர்ப் புறம் எய்தியபோது, அப்படையின் வலிமை அறியுமாறு தன்நகரில் நின்று நோக்கிய இலங்கை வேந்தனைக் கண்டான் வானர மன்னன். அவன் உள்ளத்தில் சீற்றம் பொங்கி எழுந்தது. பஞ்சின் மெல்லடிப் பாவையை வஞ்சனையாற் கவர்ந்து, சிறை வைத்த அரக்கர் கோனைக் கொன்று பழிதீர்க்கக் கருதி அவன் மீது பாய்ந்தான். வீரராகிய இருவரும் நெடும்பொழுது கடும் போர் விளைத்தார்கள். இலங்கை நாதனது அளவிறந்த வலிமையை அறிந்த வானரத் தலைவன், அவனை வெல்ல இயலாது அவன் தலைமீதிருந்த மணிமுடியைக் கவர்ந்து மீண்டும் இராமனது பாசறையில் வந்தடைந்தான். காலனுக்கும் காலனுயமைந்த அரக்கன் கையினின்றும் தப்பி வந்த வானர வீரனைக் கண்டு இரா

மன் களிகூர்ந்தான். அந்நிலையில் அன்பினால் அகங் குழைந்த வானர மன்னன், ஐயனை நோக்கி,

"காட்டிலே கழுகின் வேந்தன்
செய்தன காட்ட மாட்டேன்
நாட்டிலேகுகனார் செய்த
நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலேன் இன்று கண்டும்
கிளிமொழி மாதராளை
மீட்டிலேன் தலைகள் பத்தும்
கொணர்ந்திலேன் வெறுங்கை வந்தேன்"

என்று மனம் வருந்தி மொழிந்தான்.

"அந்தோ! காட்டில் வாழும் கழுகின் வேந்தனும், நாட்டில் வாழும் நல் வேடனும், செலுத்திய அன்பை நான் செலுத்த இயலாதவனாயினேன். இலங்கை மாநகரில் சிறையிருந்த சோகத்தாளாய நங்கையை இங்கே கொண்டுவர வலியற்று வெறுமையாகக் கண்டு வந்தேனே! நல்லோர்க்கு இடர் விளைக்கும் அரக்கனை எதிர்த்தும், அவன் சிரங்களைக் கொய்து கொணராது வெறுங் கையனாய் வந்தேனே" என்றுவானர மன்னன் வருந்தினான்.

காட்டிலே கழுகின் வேந்தன் ஆற்றிய கடமையையும் நாட்டிலே கங்கை வேடன் ஆற்றிய நன்மையையும் அறிவோமாயின் வானர வீரனது சொல்லின் பொருள் இனிது விளங்கும். கானகத்தில் தனியளாய் இருந்த தையலை, இலங்கை வேந்தன் வஞ்சனையாற் கவர்ந்து மனோ வேகமாகச் செல்லும் பொழுது, ஆதரவற்று அரற்றிய மங்கையின் அழுகுரல் கேட்டு, கழுகின் காவலன் காற்றினுங் கடுகிப் போந்தான்; அறநெறி தவறிய அரக்கனுடன் நெடும்பொழுது கடும்போர் புரிந்து ஆவி துறந்தான். இவ்வாறு ஆதரவற்ற சீதைக்காக அறப் போர் புரிந்து ஆவி நீத்த கழுகின் வேந்தன், "தெய்வ மரணம் எய்தினான்" என்று இராமன்போற்றிப் புகழ்ந்தான். "தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு" என்று சொல்லின்

செல்வனாய அனுமன் புகழ்ந்துரைத்தான். அரன் அளித்த வாளுடையானை வெறும் அலகுடையான் வெல்லுதல் இயலாதென்றறிந்தும், அறநெறி திறம்பிய அரக்கனோடு பொருது ஆவிதுறத்தலே தன் கடமை என்றறிந்து கழுகின் வேந்தன் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டான். இவ்வாறு இராமனது சேவையில், அமர்புரிந்து, இறக்கவும் ஒருப்படாத தனது குறையை நினைந்து வானரவீரன் வருந்தினான்.

இனிக் கங்கைக் கரையின் காவலனாகிய குகன் பரதனது பரந்த சேனையைக் கண்டபோது, அவன் தலைமையனை வெல்லக் கருதி வந்தான் என்று எண்ணித் தன்னுயிரையும் ஒருபொருளாகக் கருதாது போர்க்கோலம் புனைந்து,

> "ஆழநெடுந்திரை யாறு கடந்திவர் போவரோ
> வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
> தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
> ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ"

என்று வீரமொழி பகர்ந்து தோழனுக்காக உயிரையும் கொடுக்க இசைந்து நின்றான். "என் காவலில் அமைந்த கங்கையாற்றைக் கடந்து இவர் போவாரோ? தோழமை என்று நாயகன் உரைத்த சொல் ஒரு சொல்லன்றோ? நன்றிமறவாத நாய்போல், தலைவனது ஆணைக்கடங்கிக் காவல் புரியும் ஏழையேன், அமர்க்களத்தில் இறந்த பின்னல்லவோ, பரதன் இராமனைப் பார்க்கவேண்டும்," என்று குகன் கூறிய மொழிகளில் தலையாய அன்பு தழைத்திலங்கக் காணலாம். இவ்வாறு உயிர் கொடுக்கத் துணியவும் இயலாத தனது சிறுமையை நினைத்துச் சுக்ரீவன் வருந்தினான்.

ஆகவே, காளத்தி வேடனும் கங்கை வேடனும் அன்பு நெறியில் ஒப்பாரின்றி உயர்வுற்று, ஏனைய அன்பர்க்கு ஓர் கலங்கரை விளக்கமாக அமைந்திலங்கும் தன்மை இனிது விளங்கும்.

# VII. ஆட்டும் பாட்டும்

## 22. சிவனடியார் முழக்கம்

காலைப் பொழுது. தேர் ஓடும் திருவீதியில் பெரு முழக்கம். "திருத்தொண்டர் சங்கம் - வாழ்க! வாழ்க! சிவனடியார் திருக் கூட்டம் - வெல்க, வெல்க"; "பசியின் கொடுமை-வீழ்க, வீழ்க" என்று இறைந்து கொண்டு சென்றது ஒரு திருக் கூட்டம். இடையிடையே பம், பம் என்று ஆயிரம் சங்குகள் சேர்ந்து ஒலித்தன.

அத் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் பல்லாயிரவர். அவர்கள் கையிலே திருவோடு; மெய்யிலே திருநீறு; கழுத்திலே தாழ்வடம்; இடுப்பிலே கந்தைத் துணி. அப் பண்டாரப் படையைப் பார்ப்பதற்கு ஊரெல்லாம் திரண்டு எழுந்தது.

ஊருக்கு மேற்கே ஒரு பூந்தோட்டம். அங்கே போய்ச் சேர்ந்தது திருக்கூட்டம். தலைவர், சுந்தரமூர்த்தி எழுந்து நின்றார். தொண்டர்கள் கைதட்டி ஆரவாரித்தனர். தலைவர் தலைவணங்கிப் பேசலுற்றார்.

"தோழர்களே! திருத்தொண்டர்களே! நெடுங்காலமாக நமது சங்கம் உறங்கிக் கிடந்தது. ஆயினும் இன்று விழித்துக் கொண்டோம்; ஒற்றுமைப் பட்டோம்; திருத் தொண்டர் படை திரண்டு எழுந்து விட்டது. இதைத் தடுக்க வல்லவர் இவ்வுலகில் உண்டோ? (ஒரு குரல்; இல்லை; இல்லை. பலத்த ஆரவாரம்) 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே' என்று பாடிய காலம் பழங் காலம். இன்று திருத்தொண்டர்களாகிய நாம், சோற்றுக்குத் தாளம் போடுகின்றோம். நம் திரு

---

* ஆனந்த விகடன் 1946 தீபாவளி மலரில் எழுதியது.

வோடுகள் எல்லாம் வெறுமோடுகளாய் விட்டன. அன்னத்துக்கு அலந்து போய் விட்டோம். கட்டிக்கொள்ளக் கந்தைத் துணியும் கிடைக்கவில்லை. நம் தலைவன்—பரமசிவன்—நாம் படும் துயரத்தை யெல்லாம் அறிவார். அறிந்தும் ஏனோ பராமுகமாக இருக்கின்றார்! அவர் இருக்கும் இடம் தேடி நாம் இப்பொழுதே செல்வோம். அவரிடம் என்ன கேட்க வேண்டும் என்பது நமக்குத் தெரியும். நம் திருவோடுகள் ஒவ்வொன்றும் அமுதசுரபியாக வேண்டும். பருத்திச் செடிகள் நாம் தொடும் போதெல்லாம் நாலு முழத்தில் நல்ல ஆடை தரவேண்டும். இவ்விரண்டும் — அன்னமும் ஆடையும் — இப்பொழுதே கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் தீபாவளிக்குத் தலைநாள் வேலை நிறுத்தம் செய்வோம்; இது உங்கள் அனைவருக்கும் சம்மதமா யிருக்கும் என்று நம்புகிறேன்'' என்று பேசி நின்றார். அப்போது அடியார் எல்லாம் கை கொட்டி எழுப்பிய பேரோசை கைலாசத்தை எட்டியது.

திருவோடு எழுதிய கொடியைக் கையில் எடுத்து முன்னே சென்றார் சுந்தரமூர்த்தி. பரமசிவனுடைய இருப்பிடத்தை நோக்கிப் பண்டாரப் படை நடந்தது. ஒரு பழங் காட்டினுள்ளே இருந்தார் பரமசிவன். அக் காட்டைக் காத்து நின்றான் நந்தி என்ற சேவகன்.

அவனைக் கண்டு வணங்கினார் சுந்தரம். திருத்தொண்டர் சங்கத்தின் தீர்மானங்களை அவனிடம் தெரிவித்தார். அது கேட்ட நந்தி, "அப்பா சுந்தரம்! திட்டமெல்லாம் சரியாய்ப் போட்டு விட்டாய்! ஆனால், இப்போது பரமசிவன் படும் பாடு உனக்குத் தெரியுமா? பட்டாடை என்ற பேச்சே அவர் குடும்பத்தில் இல்லை. பார்வதியும், கங்கையும் பருத்தி நூலாடைதான் கட்டிக் கொள்கிறார்கள். பரமசிவனோ அதுவுமின்றிப் புலித் தோலை எடுத்து உடுத்திருக்கிறார். குளிர் தாங்க மாட்டா

மல் கரித்தோலைப் போர்த்துக் கொண்டிருக்கிறார். உலகத்துக்கெல்லாம் அவர் படியளக்கிறார் என்று பெயர். இப்போதுஅவர்குடும்பத்திற்கே அரிசி பங்கிட்டுக்கொடுக்கப் படுகின்றது. அவரிடம் வேலை பார்க்கும் நான் வயிறாரச்சோறுண்டு அறுபது நாளாயிற்று. மூத்த பிள்ளைக்குச் சாதம் போதாது; தம்பியாகிய முருகனை ஏய்த்து அவன் பங்கையும் சேர்த்துச் சாப்பிடுகிறான். முருகன் ஒரு விளையாட்டுப் பிள்ளை. சாப்பாட்டு வேளையில் ஒரு மயில் ஆடினால் அதையே பார்த்துக் கொண்டிருப்பான்: ஒரு கோழி கூவினால் அதைக் கொண்டு வர ஓடுவான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டு பேசாமல் இருப்பாள் பார்வதி தேவி. பிள்ளைகளைத் தட்டி வளர்க்கத் தெரியாத தாய் அவள். அவளுக்கும் கங்கைக்கும் எப்பொழுதும் சண்டை இருவரும் பிரிந்து தனித் தனியே குடியிருக்க வேண்டுமென்று பரமசிவனிடம் விண்ணப்பம் செய்தார்கள். இப்போது வீட்டுக்கும் பஞ்சமல்லவா? தனித்தனி வீடு தருவதற்கு வழியில்லை என்று உணர்ந்த தியாக மூர்த்தியாகிய தலைவன், தன் உடம்பில் ஒரு பாகத்தைப் பார்வதிக்குக் கொடுத்தார்; காடுபோன்ற தம் சடையில் கங்கையை வைத்துக்கொண்டார். இப்படி இருக்கிறது பரமசிவன் நிலைமை. உள்ளதைச் சொல்லி விட்டேன்; இனி உன் சித்தம்'' என்று கூறினான்.

நந்தியின் பேச்சால் சுந்தரத்தின் மன உறுதி உலையவில்லை; பரமசிவனைப் பார்த்தே தீரவேண்டும் என்று வற்புறுத்தினார். "அப்படியானால் அதோ தெரிகிறதே, அந்த மயானத்தில் இருக்கிறார் தலைவர். போய்ப் பார்'' என்று விடை கொடுத்தான் நந்தி.

சுந்தரம் சென்றார்; பரமசிவனைக் கண்டார்; கை தொழுதார்; திருத்தொண்டர் படும் பாட்டை உருக்கமாக எடுத்துரைத்தார். பரமசிவன் ஒன்றும் பேசவில்லை. அவர் முகத்தில் எவ்வித அசைவும் இல்லை.

அந்நிலை கண்டு வருத்தமுற்ற சுந்தரம், "ஆண்டவனே! பெரிய இடத்திற்குப் பிச்சைக்குப் போனால் உண்டு என்பதுமில்லை; இல்லை யென்பதுமில்லை என்ற பழமொழி உண்மையாயிற்றே! வல்ல தெல்லாம் சொல்லி உம்மை வாழ்த்தினேன். குறைகளை யெல்லாம் சொல்லி முறை யிட்டேன். வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்ல லாகாதா?

"வல்லதெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினாலும் வாய்திறந்து
இல்லை என்னீர்! உண்டு மென்னீர்!
எம்மை ஆள்வான் இருப்ப தென்னே"*

என்று கேட்டார்; அப்பொழுதும் பேச்சில்லை.

சுற்று முற்றும் பார்த்தார் சுந்தரம். சடையின்மேல் இருந்த கங்கையை நோக்கினார். அவள் வாய்திறக்க வில்லை. கணபதியை நோக்கினார். அவன் இருந்த இடம் விட்டு அசையவில்லை. குழந்தை முருகன் ஒரு கோழி யைப் பார்த்துக் கொட்டாவி யிட்டுக்கொண்டிருந்தான். பார்வதி ஒரு அப்பாவியாகத் தோன்றினாள்.

அதைக் கண்ட சுந்தர மூர்த்திக்கு ஆத்திரம் பொங் கிற்று. மீண்டும் தலைவனைப் பார்த்து, "ஐயனே! அடி யார் படும் துயரத்தை அறிந்தும் அறியாதவர்போல் இருக்கின்றீர்! உமது திருவுள்ளத்தில் இரக்கம் பிறக்கும் என்றெண்ணி இதுவரையும் பொறுத்திருந்தோம். ஈசனே! இனிப் பொறுக்க முடியாது! தீபாவளிக்குத் தலை நாளில் உமது அடியார் அனைவரும் வேலை நிறுத்தம் செய்வதாக உறுதி செய்துள்ளார்கள். இது திருத் தொண்டர் சங்கத்தின் தீர்மானம்.

"திங்கள் தங்கு சடையின்மேலோர்
திரைகள்வந்து புரளவீசும்

---

* சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

கங்கையாளேல் வாய்திறவாள்
கணபதியேல் வயிறுதாரி
அங்கை வேலோன் குமரன், பிள்ளை
தேவியார்கோல் தட்டியாளார்
உங்களுக்காட் செய்யமாட்டோம்
ஓணகாந்தன் தளியுளீரே*

என்று பாடி நின்றார் சுந்தரமூர்த்தி.

அப்போது பரமசிவன் குடும்பத்தில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. கணபதி எழுந்து வந்து தந்தையின் முகத்தைத் தளர்ந்து நோக்கினான். கங்கை சடையினின்றும் இழிந்து 'தீபாவளியன்று கங்கா ஸ்நானம் நடைபெற வேண்டுமே! அதற்கு வழி என்ன' என்று கேட்பவள்போலத் தலைவனை வணங்கி நின்றாள்.

இவற்றை யெல்லாம் கண்டார் பரமசிவன். இன்னும் பேசாதிருந்தால் பெருமோசம் வந்துவிடும் என்றுணர்ந்தார். சுந்தர மூர்த்தியையும், அவருக்குப்பின்னே ஐந்தைந்து பேராக அணிவகுத்து நின்ற அடியாரையும் நோக்கி, "தோழர்களே" என்றார். அச் சொல்லைக்கேட்ட தொண்டர் குழாம் ஆனந்தவாரியில் மூழ்கிற்று. 'தொண்டர் நாதனே போற்றி!' 'அடியார்க்கு எளியனே போற்றி' என்ற வாழ்த்துரை எழுந்தது. ஆரவாரம் அமர்ந்தவுடன் பரமசிவன் பேசலுற்றார்.

"உங்கள் தலைவனாகிய சுந்தரன் என் தலைசிறந்த தோழன். அவன் அடியார்க்கு அடியவன். தொண்டர் படும் துயரம் கண்டு ஆற்றாது வேகமாகப் பேசினான். நாடெல்லாம் பஞ்சத்தால் நலியும் பொழுது நாம் மட்டும் வாட்டமின்றி வாழ முடியுமா? எடுத்ததற் கெல்லாம் வேலை நிறுத்தம் செய்வது ஏளனமாகும். கோடிக் கணக்கான மக்கள் குடிக்கக் கஞ்சியின்றி வருந்துகின்றனரே! ஒரு சிலர் பிறரை வஞ்சித்து, இருட்டுக் கடையில் திருட்டு வேலை செய்வதை நாம் அறிவோம். அக் கீழ்

மக்களை உரிய காலத்தில் ஒறுப்போம். இன்னும் சில நாளில் நல்ல மழை பெய்து, நாடு செழிக்கும்; அறம் வளரும், மறம் தளரும். அப்போது உமது மனக் கவலை ஒழியும்'' என்று திருவாய் மலர்ந்தார்.

அடியார் முகம் மலர்ந்தது. "ஆண்டவன் திருவருள் —வாழ்க, வாழ்க!'' என்று வாழ்த்தினர்.

> "ஆழ்க தீயதெல்லாம்; அரன் நாமமே
> சூழ்க வையகமும் துயர் தீர்கவே"

என்று பாடிக் கொண்டு திரும்பினர் அடியாரெல்லாம். பரமசிவன் வீட்டில் பஞ்சத் தீபாவளி அமைதியாக நடந்தது.

## 23. சரம கவிராயர்

காவேரி யாற்றின் கரையிலுள்ள தோணி புரியிலே பிறந்தான் பொன்னப்பன். அவன் தந்தை தமிழறிந்தவர்; தாய் பழங்கதை சொல்வதில் பேர்பெற்றவள். பொன்னப் பனை ஒரு பெரிய கவிராயனாக்கி விட வேண்டும் என்பது தந்தையின் ஆவல். காலையில் நாலரை மணிக்கே பையனை எழுப்பிவிடுவார்; சாலைவழியாக ஆற்றங்கரைக்கு அழைத் துச் செல்வார்; வழியெல்லாம் நிகண்டும் நன்னூலும் வாய்ப்பாடமாகச் சொல்லிக் கொடுப்பார். தலைகால் புரி யாமல் பொன்னப்பன் கிளிப்பிள்ளைபோல் தூக்க மயக் கத்திலே பாடஞ் சொல்லிக்கொண்டுபோவான். தினந்தோ றும் பாடம் ஏறிக்கொண்டே போயிற்று. பையனுக்கு வெறுப்பும் வளர்ந்து கொண்டே சென்றது.

நாள்தோறும் மாலைப்பொழுதில் பொன்னப்பனுக்கு அவன் தாயார் கதை சொல்வாள். அக்கதை பேய்க்கதை யாகவே இருக்கும். ஒருநாள் முண்டாசு கட்டி வரும் சண்டிக் கறுப்பன் கதையைச் சொன்னாள். அந்தக்கறுப்பன் நாற்பது முழக் கறுப்புத்துணியை வால்விட்டுத் தலையிலே கட்டிக்கொண்டு, கிறுதா மீசையை முறுக்கிக்கொண்டு பையனுக்குக் கனவிலே காட்சி கொடுத்தான். மற்றொரு நாள் மாலையில் அவள் சங்கிலிப்பூதத்தான் சரித்திரத்தைச் சொன்னாள். அன்றிரவு சலசல என்ற ஓசையும், கல கல என்ற சிரிப்பும் பையன் செவியில் விழுந்து கொண்டே இருந்தன. பேய்க்கதைகளைக் கேட்டதன் பயனாகப் பொன்னப்பன் இருட்டிவிட்டால் வீட்டைவிட்டு வெளியே போகமாட்டான். அந்திசந்தியில் ஆற்றுக்குத் தனியே போக நேர்ந்தால் ஒரு வேப்பங்கொம்பைக் கையில் எடுத் துக்கொண்டு போவான். வேப்பந்தடியிருந்தால் பேய் அணுகாது என்று அவன் தாய் சொல்லி வைத்திருந்தாள்.

பள்ளிக்கூடப் படிப்பில் பொன்னப்பன் தந்தைக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. 'பள்ளிக் கல்வி புள்ளிக்குதவாது' என்று அடிக்கடி அவர் சொல்வார். அந்த வசனம் தினந்தோறும் செவியில் விழுந்தும் பையனுக்கு அதன் பொருள் தெரியவில்லை. ஒருநாள் அமாவாசைச் சாப்பாடு முடித்துத் தந்தை திண்ணையில் சாய்ந்திருக்கையில் அவரைப் பார்த்து,

பையன்:-அப்பா! "பள்ளிக் கல்வி புள்ளிக்குதவாது" என்று தினந்தோறும் சொல்லுகிறாயே! புள்ளி என்றால் என்ன?

தந்தை:—அப்படிக் கேளப்பா! பிழைக்கிற பிள்ளை அப்படித்தான் கேட்பான். இந்த வசனத்தை எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால், ஒருவர்க்கும் உண்மைப் பொருள் தெரியாது.

பையன்:—அப்படியானால் உனக்கு மட்டும் எப்படித் தெரிந்தது அப்பா! யார் சொல்லிக் கொடுத்தார்?

தந்தை:—பிள்ளாய்! கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த பொருளும் கவைக்குதவுமா? நானே முயன்று கண்டுபிடித்தேன். 'வருந்தினால் வாராததொன்றில்லை' என்பது உண்மையல்லவா?

பையன்:—நீ வருந்திக் கண்டுபிடித்த அர்த்தத்தை எனக்குச் சொல்லித்தரமாட்டாயா?

தந்தை:—உனக்கில்லாமலா! இதோ சொல்கிறேன். ஆனால், நான் சொல்லும் அர்த்தத்தை எவனிடமும் சொல்லாதே! இப்பிரபஞ்சம் படுமோசம்! பாடுபடுபவன் ஒருவன்: பலனடைபவன் மற்றொருவன். இந்தப் பழமொழியின் பொருளைச் சொல்லிவிட்டாயோ, மறுநாள் "வெடிகுண்டு விகட"னில் அதைக் கேட்டவன் வெளியிட்டுப் பணமும் புகழும் பெற்றுக் கொள்வான்.

பையன்:—நான் சொல்வேனு அப்பா! நீ உன் மூளை யைக் கசக்கிப் பிழிந்து கண்டுபிடித்த கருத்தை நானு வெளியே சொல்வேன்?

தந்தை:—நீ சமர்த்தன் என்பது எனக்குத் தெரியும். ஆனல், இவ்வஞ்சக உலகத்தை நினைக்கும்பொழுது என் நெஞ்சம் நடுங்குகிறது. நன்ருகக்கேள்! நன்னூல்தான் உனக்குத் தளபாடமாய்த் தெரியுமே! புள்ளி என்பது ஆயுத எழுத்து. அது மூன்று புள்ளியாய் அடுப்புக்கட்டி போலிருக்கும். பள்ளிக்கூடப் படிப்பு அடுப்புக்கட்டிக்குக் கூட உதவாது என்பது அப்பழமொழியின் கருத்து. அடுப் புக்கட்டிக்கு உதவாது என்ருல் அடுப்புக்கு உதவாது; ஒருபிடி அன்னத்துக்கு உதவாது என்பதைப் படிப்படி யாக உய்த்துணர வேண்டும்.

பையன் திறந்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந் தான்; ஒன்றும் புரியவில்லை. மூளை கிறுகிறுத்தது.

பையன்:—போதும் அப்பா! எல்லாம் விளங்கிப் போச்சு. நான் இனிப் பள்ளிக்கூடம் போகவே மாட்டேன். வீட்டிலிருந்து தமிழ்ப்பாட்டுக் கட்டுவேன். ஒழிந்த நேரத் தில் அம்மாவுடன் இருந்து அடுப்பு மூட்டுவேன்.

தந்தை:—அதுதான் சரி. 'சோறு பொங்கித் திண்ணு; சொந்தக்கவி பண்ணு' என்று அந்தகக்கவிராயர் கொச்சை யாய்ச் சொல்லுவார். ஆயினும் அது நல்ல வசனம்.

பையன் எழுந்து போனுன். பாட்டுப் பாடவேண்டும் என்னும் ஆசை அவனைப் பற்றிக்கொண்டது. ஓசையே பாட்டுக்கு உயிர் என்பது அவன் கருத்து. "சீரும் தளை யும் சிறியோர் பார்ப்பர்; மோனையும் எதுகையும் மூடர் விரும்புவர்" என்று யாப்பிலக்கணம் படித்துப் பாட்டெ ழுதும் பள்ளிப் பிள்ளைகளை அவன் பரிகாசம் செய்வான்.

முதலில் எல்லார்க்கும் படியளக்கும் கடவுள்மீது பாட்டுக்கட்டுவதே முறையென்று பொன்னப்பனுக்குத்

தோன்றிற்று. வளமாகச் சோறும் கறியும் தரும்படி சிவபெருமானைப் பாடினான்.

> "கற்பனை கடந்தவன், கறி சோறுதருபவன்
> வெற்பினில்உறைபவன், வெஞ்சனம் அளிப்பவன்
> சற்பத்தை அணிபவன், சாம்பாரும் தருபவன்
> நற்பதம் பணிவேன், நான் பசி தணிவேன்"

என்று தொடங்கி அறுசுவை உண்டிக்குப் பத்துப் பாட்டுப்பாடி முடித்தான். அப்பாட்டுக்கு 'அகட்டுத்திருப் பதிகம்' என்று தலைப்பிட்டுத் தந்தையிடம் கொண்டு போனான். பொன்னப்பன் பாடிய முதற்பாட்டு அன்னப் பாட்டா யிருக்கக்கண்டு தந்தை ஆனந்த மடைந்தார். "அவரை போட்டால் துவரை முளைக்குமா? துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்திருக்கின்றது" என்று மெச்சினார். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பயல்கள் அசட்டுப் பிசட் டென்று பாடுகிறார்களே! என் மகன் பாடிய அகட்டுப் பாட்டின் அடித்தூசி விலை பெறுமா அவை? அகட்டுப் பாட்டு என்ற தலைப்பின் அர்த்தந்தான் அப்பயல்களுக்குத் தெரியுமா? என் பிள்ளை பொன்னப்பனுக்கு நிகண்டு தலைகீழாய்ப் பாடம். "அகடும் மோடும் உதரமும்வயிறே" என்ற பண்டை நிகண்டு மனப்பாடமா யிருப்பதால் அன்றோ வயிற்றுப் பாட்டை அகட்டுப்பாட்டு என்று அழைத்தான் என் அப்பன்? இவன் காலத்தில் பெரிய கவிச்சக்ரவர்த்தி யாவான் என்று எண்ணி மனங்களித்தார். அகட்டுத் திருப்பதிகத்தை ஆறு தரம் படித்தார்; பல ராகங்களில் பாடினார். அத்திருப்பதிகத்துக்கு ஒரு சிறப்புப் பாயிரமும் கொடுத்தார்.

> "அன்னக் கவிபாடி அகங்குளிரச் செய்திட்ட
> பொன்னப்பா உன்தன் புலமைத் திறத்தாலே
> மன்னவரும் போற்ற மணியாசனத்திருப்பாய்
> என்னப்பா என்குலத்திற் கேற்ற எழிலொளியே"

என்று தந்தைபாடித் தந்த பாயிரத்தைப் பையன் பதிகத் தோடு சேர்த்துக் கட்டி வைத்துக்கொண்டான்.

அன்னப்பாட்டுப்பாடிப் புகழ் பெற்ற பொன்னப்பக் கவிராயர் அன்றுமுதல் ஆயிரம்ஆயிரமாகப் பாடித் தள்ளினர். அவரது கவியின் பெருக்கத்தைக் கண்டவர்கள் கம்பருக்கும் காளிதாசருக்கும் அருள் செய்த காளியே அவருடைய நாவிலும் சூலத்தால்எழுதிவிட்டாள் என்று வெளிப்படையாகப் பேசினர்கள். அவர் வாக்குப் பலிக் கும் என்று நம்பித் தோணிபுரி வாசிகள் அவருக்கு வேண் டிய பொருள் கொடுத்தார்கள். பணக்காரர் வீட்டில் கல்யாணம் நடந்தால் பொன்னப்பக் கவிராயர் பட்டைத் தார்ப்போட்டு, நெற்றியிலே திருநீற்றைப் பட்டையாக இட்டு வெள்ளிப் பூண் பிடித்த தடிக்கொம்பைக் கையிலே பிடித்து, கம்பீரமாக நடந்து செல்வார். கல்யா ணப் பந்தலிலுள்ள மிராசுதார்கள்மரியாதையாக விலகிச் சபையின் நடுவே கவிராயருக்கு இடங்கொடுப்பார்கள். மணச் சடங்கு முடிந்தவுடனே கவிராயர் நளினமாக வெள்ளி டப்பியிலிருந்து பொடி யெடுத்து நாசியால்இழுத் துக்கொண்டு உச்சத் தொனியில் தம் வாழ்த்துப்பாட்டை எடுத்து விடுவார்.

ஒரு நாள் நந்திபுரிச் சுந்தர முதலியார் வீட்டில் விமரிசையாக நடந்த கல்யாணத்திற்குக் கவிராயர் போய் இருந்தார். மணமக்கள் மணவறையைச் சுற்றி வந்து உட்கார்ந்ததும் கவிராயர் 'மந்திகள்லாகைபோடும்'என்று ஒரு எடுப்பு எடுத்தார்.

"மந்திகள் லாகை போடும்
நந்தியம் புரியில் வாழும்"

என்று ஆரம்பித்தவுடன் பந்தலில் பேச்சு அடங்கிற்று. எல்லோரும் ஒரு முகமாய்ப் பாட்டைக் கேட்டார்கள். அவ்வூரில் உள்ள மாஞ்சோலையில் மந்திகள் கிளைக்குக் கிளை தாவித் தலை கீழாக ஆடும் அழகைக் கண்டு கவி

ராயர் ஒரு பாட்டுக் கட்டிவிட்டாரே என்று பாட்டிகள் பாராட்டினார்கள். பந்தலுக்கு வெளியே கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் பாட்டைக் கேட்டவுடனே ஒரு லாகை போட்டுக் கவிராயர் வாக்கை மெய்ப்பித்தார்கள்.

மற்றொரு நாள் சமரபுரி முதலியார் வீட்டில் ஒரு அமரகிரியை நடந்தது. அதைக் கேள்விப்பட்ட கவி ராயர் கருமாந்தரக் கூட்டத்திற் புகுந்து,

"அமரர்கள் கண்ணீர் சிந்த
அந்தரர் பொருமி யேங்கத்
தமரெலாம் தவித்து வாடத்
தங்கையர் தளர்ந்து சோர"

என்று உருக்கமாய் எடுத்த பாட்டு முடியு முன்னே, அங்கிருந்த மங்கையர் ஓவென்று அலறி அழத் தொடங்கினார்கள். அழுகையால் பாட்டு அரைகுறையாய் முடிந்தது. பாட்டைக் கேட்டு உருகிய சமரபுரி முதலியார் கவிராயருக்கு வெள்ளிப் பாக்குவெட்டி யொன்று பரிசளித்தார்.

இவ்வாறு நன்மை தீமைகள் நேராத காலங்களில் கவிராயர் சீமான்கள் மீது சித்திரக் கவி செய்வார்; சில பேர்வழிகளை நாக பந்தத்தில் அடைப்பார்; மற்றும் சிலபேரைக் கமல பந்தத்தில் கட்டுவார்; பந்தங்கள் தயாரானதும் வெள்ளித் தடிபிடித்து அவர்கள் வீட்டை நோக்கிச் செல்வார். ஒரு நாள் கவிராயர் நாக பந்தத்தை எடுத்துக்கொண்டு அரசூர் ஆனையப்ப பிள்ளையைக் காணச் சென்றார். அவர் தம் பங்காளிகளின் மீது தொடுத்திருந்த வழக்கு அவருக்குப் பாதகமாகத் தீர்ப்பான செய்தி அப்பொழுதுதான் தந்தியின் மூலமாக வந்திருந்தது. சாய்வு நாற்காலியில் சோர்ந்து சாய்ந்திருந்த பிள்ளை யவர்களின் முன்னே நின்று கொண்டு,

"தந்தி யொன்று வந்த தென்று
நொந்திருக்கும் வேளையில்
பந்த மொன்று தந்து நான்
வந்தனை புரிகுவேன்"

என்று கவிராயர் போட்ட போடு அவரைத் தூக்கி வாரிப்போட்டு விட்டது. தந்திக்காரனைத் தலைவாசலில் கண்டு செய்தி யறிந்துகொண்டு கவிராயர் உள்ளே வந்தார் என்பதை அறியாத பிள்ளையவர்கள் ஆச்சரியப் பட்டு வணங்கி அவரை வரவேற்றார்; உபசரித்தார். காரியம் பலித்த தென்றெண்ணி, கவிராயர் பந்தத்தைக் கம்பீரமாகப் படித்துக் கொடுத்தார். பந்தப் பாட்டின் பொருளறியாத பிள்ளைய்வர்கள் காளியின் அருள்பெற்ற கவிராயரொடு பேசவும் அஞ்சி, ஐம்பது ரூபா சன்மானம் கொடுத்து, கோர்ட்டுச் செலவோடு செலவாய், 'பந்தச் செலவு' ரூபா ஐம்பது என்று எழுதி விட்டார்.

காலஞ் செல்லச் செல்லக் கவிராயர் புகழ் ஏறிக் கொண்டே போயிற்று. அவருக்கு வயதும் நாற்பது நிறைந்தது அவரது இருபத்தெட்டாவது வயதில் தாயார் பிள்ளையிடம் சரமகவி பெற்றுக்கொண்டு பரம பதம் அடைந்தாள். பின்னும் ஐந்து ஆண்டுகளில் தந்தையும் கவிராயரிடம் விடைபெற்றுக் கொண்டார். பெற்றோர் இருவரும் போய்ச் சேர்ந்த பின்பு, கவிராயர் கல்யாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தவேண்டு மென்று அவர் உற்றார் உறவினர் சொல்லத் தொடங்கினார்கள். அவர்கள் கல்யாணப் பேச்சை எடுக்கும்பொழுது 'அந்த இழவு யாருக்கு வேணும்?' என்று கவிராயர் நறுக்கென்று பேசி விடுவார். ஆகவே கல்யாண 'இழவை'ப் பற்றி யாரும் அவருடன் பேசுவதில்லை.

நாளடைவில் கவிராயருக்கு, 'நாக பந்த நாயகம்' 'சரமகவிச் சிங்கம்' முதலிய பட்டங்கள் வலிய வந்து

சேர்ந்தன. ஆயினும் ஒரு பெரிய ஆசை அவர் மனத்திலே குடிகொண்டிருந்தது. பதினாயிரம் பாட்டுப் பாடிய கம்பர் கவிச்சக்ரவர்த்திப் பட்டம் பெற்றால் அறுபதினாயிரம் கவி பாடிய பொன்னப்பர் ஏன் அப் பட்டம் பெறக்கூடாது என்பது அவர் கேள்வி. மேலும் அவர் கவிச்சக்ரவர்த்திதான் என்று மனசாட்சி உள்ளிருந்து சொல்லிக்கொண்டே யிருந்தது.

கவியரசுப்பட்டம் பெறுவதற்கு மதுரையும் காஞ்சியுமே சரியான இடங்கள் என்று கவிராயர் எண்ணினார்; முதலில் மதுரைக்குத் தன் பரிவாரங்களோடு புறப்பட்டார். அங்கே கோனேரியப்பக் கவிராயர் என்பவர் முத்தமிழ்ப் புலவராக மதிக்கப்பட்டிருந்தார். அவருடைய முழக்கத்தைக் கேட்டு அஞ்சிய மதுரைச் சங்கத்தார் 'கோடையிடிக் கோனேரியப்பர்' என்று அவரை அழைத்தார்கள். அக் கோடையிடியைப் பொன்னப்பக் கவிராயர் காணச் சென்றார். தாம் இயற்றி அச்சிட்டிருந்த நாகபந்தம், கமலபந்தம் முதலிய பந்தங்களையும் சரமகவி சீட்டுக்கவி முதலிய பாட்டுக்களையும் கோடையிடி யிடம் காட்டினார். சரமகவிச்சிங்கத்தின் கர்ச்சனை கோடையிடியின் முழக்கத்தினும் அதிகமாகவே இருந்தது.

கோடையிடி:—'தோணிபுரித்தோன்றலே! நாகபந்த நாயகமே' அடியேன்குடிசை தங்கள் வருகையால் புனிதமடைந்தது. எளியேன் தங்களுக்கு என்ன செய்யக் கூடும்? தங்கள் சித்தம் என் பாக்கியம்.

கவிராயர் :—

"கோடை யிடிமுழக்கும் கோனேரி யப்பா கேள்
மாட மதிதவழும் மதுரைமாப் புலவரிடம்
நாட றியப் பட்டம் நயந்துபெற வேணுமென்றே
காடும் கரையும் கடந்திங்கு வந்தேன் காண்"

கோடையிடி:—கல்விக் களஞ்சியமே! கவிச்சிங்கமே! மூச்சுவிடு முன்னே முப்பது கவி பாடும் உங்களுக்கு நாங்

கள் பட்டமளிக்கும் தரமுடையோமா? நீங்கள் இருப்பது மலையின்முடி; நாங்கள் கிடப்பது மடுவின் அடி. மதுரையின் பெருமை யெல்லாம் பழங்கதையாய்ப் போயிற்று. கவிப்பெருஞ் சிங்கமாய், திருப்பதி முதல் கன்னியா குமரிவரை திக்கு விஜயம் செய்துள்ள தங்கள் பெருமையை அறிய வல்லார் இங்கு எவரும் இல்லை. கவிச் சக்ரவர்த்திப் பட்டம் பெற்ற ஒட்டக்கூத்தர் குலத்திற் பிறந்தவர் ஒருவர் காஞ்சிமா நகரில் இருக்கிறார். 'அடுக்கு மொழி ஆனந்தக் கூத்தர்' என்று அவரை அறிந்தோர் அழைக்கிறார்கள். அவர் கொடுக்கும் பட்டம் இப்பொழுது எல்லோராலும் மதிக்கப்படுகிறது. தாங்களும் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே!

கவிராயர்:—'இது நல்ல கருத்து. காஞ்சிமா நகரம் கல்விக்குப் பேர்போன இடம். ஆனந்தக் கூத்தன் ஒட்டக்கூத்தருடைய மகள் வழியிலே வந்தவன். ஆயினும், ஒட்டக்கூத்தர் உடம்பில் ஓடிய இரத்தத்திலே ஒரு துளியேனும் அவருடம்பில் ஓடாதிருக்குமா? இன்றே போய் அவரைப் பார்க்கிறேன்' என்று எழுந்து கோடையிடியிடம் விடைபெற்றுக் காஞ்சிமா நகர்க்குச் சென்றார். அப்பொழுது அடுக்குமொழிக் கூத்தர் காலிற்புண்பட்டுப் படுக்கையில் இருந்தார். சரமகவிராயர் அங்கிலையிற் காண வந்தது ஒரு துர்ச்சகுனம் போல் அவருக்குத் தோன்றியது. ஆயினும் கவிராயரை உள்ளே வரவழைத்து "பங்கமில்லாப் பாட்டிசைக்கும் சிங்கமே! வருக; சங்கமா முடியில் வைகும் தங்கமே! வருக" என்று அடுக்குமொழி கூறி வரவேற்றார்.

கவிராயர்:—

"அடுத்த மொழிவிடுக்கும் ஆனந்தக் கூத்தாகேள்
படுத்தபடி யறிந்தும் பாடுரைக்க வந்தோம்யாம்
எடுத்தபெருங் கவிபாடி எற்றமுற்ற கூத்தருடன்
தொடுத் திலங்கும் பேறெமக்குத் தோன்றல்! அருளாயே"

என்று தம் கருத்தைத் தெரிவித்தார்.

உடனே அடுக்குமொழி, 'சகல பந்த சரபமே! இந்நிலவுலகில் நின்னெப்பார் பிறர் இன்றி நீயே யானாய்! கவிச்சக்ரவர்த்தி யென்று புவிச் சக்ரவர்த்திகள் பாராட்டிய ஒட்டக் கூத்தருக்குப்பின் அப்பட்டம் எவரையும் சென்றடைந்த தில்லை. இன்று கவியுலகத்தில் சக்ரவர்த்திப் பட்டம் பெறுவதற்குத் தங்களைத் தவிர, தகுதியுடையவர் வேறு யார் உள்ளார்? தில்லைவாழ் அந்தணர் சந்நிதியில், தமிழ்ப்பெரும் புலவர்கள் முன்னிலையில் தங்களுக்கு அப்பட்டம் அளிக்கப்படல் வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகளைச் சிதம்பரத்தில் செய்வீர்களானால் அடியேன் கால்நோய் தீர்ந்து வந்து அக்காட்சியைக் கண்குளிரக் காண்பேன்' என்றார்.

அடுக்குமொழிக் கூத்தர் சொல்லியது கவிராயருக்கு மிகப் பொருத்தமாகவே தோன்றிற்று. "எல்லையற்ற பெருமையுடையது தில்லையம்பதி; சபைகளிற் சிறந்தது அங்குள்ள கனகசபை; அச் சபாநாதர் நிகரற்ற தலைவர். அப்படிப்பட்ட பொன்னம்பலத்திலே, தில்லைவாழ் அந்தணர் சபையிலே நான் பெறும் பட்டம் உலகம் உள்ளவரையும் அழியாததாகும்" என்று எண்ணினார்; உடனே சிதம்பரத்தை நோக்கி எழுந்தருளினார்.

அங்கு வேதாந்த வியாகரண தர்க்க நியாய சிரோமணியாய் விளங்கிய சபா ரஞ்சிததீட்சிதரிடம் கவிராயர் சென்று தம் ஆசையை வினயமாய்த் தெரிவித்தார். அவரும் கவிச்சக்ரவர்த்திப் பட்டம் கொடுக்கும் பெருமை தமக்குக் கிடைத்ததைக் குறித்து அடங்காத மகிழ்ச்சி கொண்டார். "சிதம்பரத்தில் ஆனித் திருமஞ்சன விழாவிற்கு அடுத்த நாள், ஆயிரக்கால் மண்டபத்தில் தோணிபுரித் தோன்றல் ஸ்ரீ பொன்னப்பக் கவிராயருக்குக் கவிச்சக்ரவர்த்திப் பட்டம் கொடுக்கப்படும்" என்று சபாரஞ்சித தீட்சிதர் ஆயிரம் பேருக்கு அறிக்கையும் அழைப்பும் அனுப்பினார். குறிப்பிட்ட நன்னாளில் மதுரையிலிருந்து கோடை

யிடிக் கவிராயரும், காஞ்சியிலிருந்து அடுக்குமொழி ஆனந்தக் கூத்தரும், சென்னை வரகவி (வறட்டுக்கவி யென்று சிலர் சொல்வார்கள்) வரதராஜ முதலியாரும் வந்திருந்தார்கள். பட்டம் பெற வந்திருந்த கவிராயரைத் தவிர, பன்னிரண்டு பேர்கள் ஆயிரக்கால் மண்டபத்தில் சமுகம் அளித்தார்கள். சுபமுகூர்த்தத்தில் மா்சிமை தங்கிய திட்சிதப் பெருந்தகை நீண்ட கரகோஷத்தின் இடையே எழுந்து பட்டுச் சால்வையைக் கவிராயர் தோளிலே போர்த்து, கட்டிச் சாமந்தி மாலையை அவர் கழுத்தில் அணிந்து, "வித்வசிரோமணிகளே! சகல பந்த சரபம், சரம கவிச் சிங்கம், தோணிபுரி தழைக்க வந்த தோன்றல், ஸ்ரீ பொன்னப்பக் கவிராஜ மூர்த்திகளுக்கு நடராஜர் சந்நிதியிலே கவிச்சக்ரவர்த்தி என்ற பட்டத்தை நாம் சூட்டுகின்றோம். இன்று முதல் என்றென்றும் இவரைக் கவிச்சக்ரவர்த்தி யென்று காசினி வழங்கக் கடவது'' என்று ரஞ்சிதமாகப் பேசி முடித்தார். அடுக்குமொழிக் கூத்தர் அதை ஆமோதித்தார். ஏகமனதாக அகத்தியர் மாணுக்கர்போல் சபையில் வீற்றிருந்த பன்னிருவரும் சிரக்கம்பம் செய்தார்கள். கோடையிடிப் புலவர் வந்தனம் முழக்கினுர். சந்தனப் பூச்சுடனும் கொட்டு முழக்குடனும் வித்வசபை கலைந்தது. கவிச்சக்ரவர்த்திப்பட்டம் பெற்ற சரம கவிராயர் பட்டுச்சால்வையோடு நடராஜரைத் தரிசித்து விட்டுத் தம் இருப்பிடம் சென்றுர்.

---

# 24. சொக்கர் பாட்டு

தமிழ் நாட்டிலே புலவர் பாடும் புகழுடையார் என்றும் உள்ளார். அன்னவருள் ஒருவர் ஐம்பதாண்டுக்கு முன்னே நெல்லையம் பதியில் வாழ்ந்தார். அவர் முத்தமிழ்ச் சுவை தேர்ந்த வித்தகர்; முத்துசாமி என்னும் பெயரினர். அந்நாளில் ஆசு கவியாய் விளங்கிய அழகிய சொக்க நாதர் அவ்வள்ளலின் ஆதரவைப் பெற்ருர். ஆற்றிலே நீராடச் செல்லும் போதும், மேடையிலே நின்று மெல்லிய தென்றலை நுகரும் போதும், கோடையிலே குளிர் பூஞ்சோலையிற் சென்று உலாவும் போதும் அழகிய சொக்கர் அவ் வள்ளலின் குறிப்பறிந்து கவி பாடுவார்; அவர் இன்புறக் கண்டு தாமும் இன்புறுவார்.

ஒரு நாள் அச் செல்வர் அழகிய சொக்கருடன் உலாவி வரும்பொழுது, கரும்புத் தோட்டத்தின் அருகே ஒரு கான மயில் ஆடக் கண்டு களிப்புற்று நின்ருர். இளங் காற்றிலே ஆடிய கரும்பின் தோகையும், இன்பப் பெருக்கிலே ஆடிய மயிலின் தோகையும் அவர் கண்ணைக் கவர்ந்தன. அந்நிலையில் அழகிய சொக்கரை நோக்கிக் கரும்புக்கும் கான மயிலுக்கும் பொருந்தும் கவியொன்று பாடும்படி வேண்டினர். கவிஞரும், அக் காட்சியைக் கண்டு களிப்புற்று உடனே பாடலுற்ருர்.

"மேனி யெலாம் கண்ணுறலால்
வேள்விரும்பும் தன்மையினுல்
ஆனபசுந் தோகையினுல்
ஆடலினுல் - மீனவன் நேர்
மானபரா! நெல்லை நகர்
வாழுமுத்து சாமி மன்ன
கானமயில் ஒப்பாம் கரும்பு"

என்ற சொக்கர் பாட்டின் சுவை யறிந்து இன்புற்ருர் வள்ளல். "மயிலுக்கு மேனியெல்லாம் கண்; கரும்புக்கும்

மேனியிலே கண். (கணு) மயிலைக் குமரவேள் விரும்பி வாகனமாகக் கொண்டான். கரும்பை மாரவேள் விரும்பி வில்லாகக் கொண்டான். இன்ப வுணர்ச்சி யுற்றபோது மயில் தோகையை விரித்து ஆடும்; இளங்காற்று வீசும்போது கரும்பின் தோகையும் அசைந்து ஆடும். எனவே, கானமயில் ஒப்பாகும் கரும்பு'' என்ற கருத்தமைந்த கவியைக் கேட்டு வள்ளல் மன மகிழ்ந்தார்.

கரும்புத் தோட்டத்தைக் கடந்து சாலையின் வழியே நடந்தனர் இருவரும். வளமான வாழைத்தோட்டம் ஒன்று அவர் கண்ணைக் கவர்ந்தது. மேல் நோக்கி விரிந்த இலை களையும், தரை நோக்கித் தாழ்ந்த பசுங் குலைகளையும் கண்ட வள்ளல், அருகே நின்ற கவிஞரை நோக்கினார்; 'காய்' என்று தொடங்கி 'இலை' என்று முடியும்படி ஒரு கவி சொல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். உடனே வந்தது செந்தமிழ்ப் பாட்டு.

''காய்சினம் இல்லாதான்
    கருணைமுத்து சாமிவள்ளல்
வாய்மையு ளான்பாடி
    வருவோர்க்குத்-தாய் நிகர்வான்
எல்லை யில்லா மாண் பொருளை
    ஈவான் இவனிடத்தில்
இல்லை யென்ற சொல்லே இலை''

என்று சொக்கர் சொல்லிய பாட்டு வள்ளலின் உள்ளத் தைத் தொட்டது. இலையையும் குலையையும் நோக்கி நின்றவரைத் தலை கவிழச் செய்தது அப்பாட்டு. காய் என்றெடுத்து இலை யென்று முடித்த கவியிலே அப்படி என்ன பொடியைப் போட்டு விட்டார் சொக்கர்? அவ் வள்ளலிடம் அமைந்திருந்த குணங்களையே பொருளாக வைத்து, அவர் எடுத்துக் கொடுத்த இரு சொல்லையும் ஆதியும் அந்தமுமாக அமைத்து ஆனந்தமாகப் பாடி விட்

டார். முத்தமிழை ஆதரித்த முத்துசாமி வள்ளலை வாயாரப் புகழ்ந்து பாட எப்போது வாய்ப்பு வரும் என்று எதிர் பார்த்திருந்த கவிஞர் இப்போது தம் ஆசையை நிறைவேற்றிக் கொண்டார். அப்பாட்டின் நயத்தைச் சிறிது பார்ப்போம்:

வள்ளல், காயும் சினம் அற்றவன்; கருணையுற்றவன். வாய்மை உடையவன்; தாய்மை வாய்ந்தவன். கையால் அவன் அளிக்கும் கொடைக்கு எல்லையில்லை; அவன் நாவில் இல்லை யென்ற சொல்லே இல்லை என்பது பாட்டின் கருத்து. சேர்ந்தாரைக் கொல்லும் தன்மை யுடைய தென்று திருவள்ளுவர் முதலிய சான்றோர் சொல்லிய முறையில் 'காய் சினம்' என்று கவிஞர் எடுத்த எடுப்பும், ஊழி பெயரினும் பெயரா உரையுடையார் என்று கம்பர் முதலிய கவிஞர் பாராட்டிய காராள குலத்திற் பிறந்த வள்ளலை 'வாய்மை யுளான்' என்று குறித்த வண்ணமும், பெற்ற பிள்ளைக்குப் பால் நினைந்தூட்டும் தாய்போல் பாடி வந்த பாவலர்க்குப் பரிசளித்த தலைவனைத் 'தாய் நிகர்வான்' என்று போற்றிய தன்மையும், எவர்க்கும் இல்லை யென்னாது எல்லை யின்றிக் கொடுத்த நல்லானிடம் 'இல்லை யென்ற சொல்லே இலை' என ஏத்திய அழகும் இப்பாட்டிலே அமைந்திருக்கக் கண்டு எல்லையற்ற இன்பம் அடைவர் தமிழறிஞர். வள்ளலும் கவியின் சுவை யறிந்து களிப்புற்றார். ஆயினும், தம் பெருமையைப் பாட்டின் வாயிலாகக் கேட்டபோது நாணித் தலை கவிழ்ந்தார்.

ஒரு நாள் வள்ளலின் மிதியடி காணமற் போயிற்று. அதைக் கவர்ந்த கள்வனைக் கண்டுபிடிக்க முடியாமல் வருந்தினர் காவலாளர். அச்செய்தியை அறிந்த வள்ளல், சொக்கரைப் பார்த்துப் புன்னகை புரிந்து 'செருப்புக்கும் திருடனுக்கும்' பொருத்தமான பாட்டிசைக்கும்படி வேண்டினர். அப்போது எழுந்தது ஒரு பாட்டு.

"அங்கங் களவால்
அதுகண்டுதைப் புறலால்
எங்கும் மிதியடி யென்றே
சொலலால்-வெங்கல்
காடுமுட் கஞ்சாததினுல்
காமர் முத்துசாமி!
திருடனை ஒப்பாகும் செருப்பு"

என்ற கவியை விருப்பமாய்க் கேட்ட வள்ளல் 'செருப்புத் தொலைந்ததால் அன்ரே இச்செய்யுள் கிடைத்தது" என்று அகமகிழ்ந்தார்.

அப்பாட்டின் சிலேடை நயத்தைப் பார்ப் போம். கள்வனுக்கு அங்கம் களவு; செருப்புக்கு அங் கங்கு அளவு; கள்வனது களவு கண்டு உதைப்பார்கள்; செருப்பின் அளவு கண்டு தைப்பார்கள். கள்வனை மிதி அடி என்று சொல்வார்கள்; செருப்பையும் மிதியடி என் பார்கள். இன்னும் கல்லும், முள்ளும், கரடும் கண்டு அஞ்சாது செல்வான் கள்வன். அவ்வாறே செருப்பும் கல்லும், முள்ளும், கரடும் கண்டு அஞ்சாது என்பது அப் பாட்டின் பொருள்.

முத்தமிழ் அறிந்த முத்துசாமி வள்ளல் மகிழ்ந்து அளித்த பரிசுகளைச் சொக்கர் நன்றியுடன் பெற் றுக் கொண்டாரேனும், பொருள் ஒன்றையே அவர் கருதியவ ரல்லர்; வருவாய் மாசம் பத்து வந்தாலும் அதனை மா சம்பத்தாகக் கொள்ளும் மனப் பண்புடைய வர். இரும்பை யிழுக்கும் காந்தம்போல் வள்ளலின் இன்சொல் கவிஞரைப் பிணித்தது. அவர் சொல்லில் அமைந்த சுவை அமுதம் போன்றிருந்தது. அம்மானைப் பாட்டிலே அதைப் புகழ்ந்து பாடியுள்ளார் கவிஞர்.

"காராள மாமரபிற்
கன்னன் முத்து சாமி யெனும்

"சீராளன் வாய்ச் சொற்கள்
தெள்ளமுதம் அம்மானை
சீராளன் வாய்ச் சொற்கள்
தெள்ளமுதம் ஆமாயின்
ஆராய்ந்து தேவர்கள்
உண்டாடுவரோ அம்மானை
அருமைப் புலவர்கள்
கொண்டாடு வாரம்மானை"

என்று அல்லும் பகலும் அவ்வள்ளலின் அமுத மொழிகளைப் பருகி மகிழ்ந்த அழகிய சொக்கநாதர் புகழ்ந்து போற்றுகின்றார். திருப்பாற் கடலில் எழுந்த தெள்ளமுதைத் தேவர்கள் உண்டு ஆடினார்கள். முத்துசாமி மன்னன் எனும் செந்தமிழ்க் கடலினின்றும் எழுகின்ற சொல்லமுதை அருமைப் புலவர்கள் கொண்டாடுகின்றார்கள் என்று சொக்கர் பாடியகவி சாலச் செம்மை வாய்ந்ததாகும். விண்ணிலே உறையும் அமரர் விரும்பி உண்ணும் அமுதம்போல், மண்ணிலே வாழும் புலவர் மகிழ்ந்து போற்றுவது அருந்தமிழ் அமுதமேயென்றும், தெள்ளமுதுண்டு திளைத்த தேவர் மாறிலா இன்பத்தில் மகிழ்தல் போலச் செந்தமிழ் அமுதம் பருகிய புலவரும் செவ்விய இன்பம் நுகர்ந்து செம்மாந்திருப்பர் என்றும் கவிஞர் அமைத்த உவமை செவிச்சுவையுடைய செல்வர்க்குச் சிறந்த இன்பம் தருவதாகும்.

இன்னும் 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்னும் கட்டுரைக்கிணங்க, கல்வியின் அருமையறிந்து ஆதரித்த இம்மன்னனது பெருமையை,

"மாணுற எல்லாம் படித்த
மன்னன் முத்துசாமி வள்ளல்
ஆண்மைத் திறத்தில் மத
யானை காணம்மானை

ஆண்மைத் திறத்தில் மதயானை
யென்ப தாமாயின்
காணுமிவன் அங்கங்
கருமையோ அம்மானை
கற்றவர்க்கங் கங்கருமை
காட்டுவான் அம்மானை''

என்று அம் மன்னனது அருமைக் குரியராய் விளங்கிய கவிஞர் ஆர்வமுற எழுதி யமைத்தார். இயலிசை நாடக மென்னும் முத்தமிழையும் முறையாகக் கற்ற நற்றமிழ்ச் செல்வனை 'மாணுற எல்லாம் படித்த மன்னன்' என்று கவிஞர் மனமாரப் புகழ்ந்தார். அறிவும் ஆண்மையும் ஒருங்கே யமைந்த வள்ளலை விழுமியவேழத்திற்கு உவமை கூறினார். வேழத்தின் மேனி கருமை காட்டும் என்றும் வள்ளல் கற்றவர்க்கு அங்கங்கு அருமை காட்டுவான் என்றும் கவிஞர் பாராட்டினார்.

ஆண்மையும் அழகும் வாய்ந்த அவ்வள்ளலைத் தலைவனாக வைத்து ஒரு 'காதலும்' பாடினார் கவிஞர். பொதிய மலைச் சாரலில் வேட்டையாடப் போந்த முத்துசாமி மன்னன்,

''சில்லென்று பூத்த
செழுமலர்ப்பூங் காவனத்தில்
வில்லொன்று செங்கையுடன்
மேவி வரும் போதில்''

ஒரு கட்டழகியைக் கண்டு காதலுற்றார்; அவள் ஊரும் பேரும் கேட்டார். மாற்றம் ஒன்றும் பேசாமல் தலை கவிழ்ந்து நின்றாள் மங்கை. அது கண்ட தலைவன்,

''ஊமையோ, வாயிலையோ
ஓர் வசனம் நீ உரைத்தால்
தீமையோ வாய்திறந்து
செப்பினால் ஆகாதோ''

என்று பின்னும் வினவினார். அப்போதும் அவள் வாய் திறக்கவில்லை. 'வாய் இலையோ' என்று கேட்டுப் பார்த்தோம்; பலிக்கவில்லை; மனம் காயோ?' என்று கேட்டுப் பார்க்கலாம்' எனக் கருதி மேலும் பேசலுற்றார்.

> "வெள்ளரிக் காயா, விரும்பும்
> அவரைக் காயா
> உள்ள மிளகாயா
> ஒரு பேச்சுரைக் காயா"

என்று நயமுறக் கேட்டபோது நங்கை புன்னகை புரிந்தாள் என்று காதற் பிரபந்தம் கூறிச் செல்கின்றது.

வாக்குவளம் உடைய அழகியசொக்கர் நெல்லையம்பதியிலே கோயில் கொண்டுள்ள காந்திமதி யம்மையின்மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடினார். அதன் சுவையை ஒரு பாட்டால் அறியலாம்.

> "வாரா திருந்தால் இனிநானுன்
> வடிவேல் விழிக்கு மையெழுதேன்
> மதிவாள் நுதற்குத் திலகமிடேன்
> மணியால் இழைத்த பணிபுனையேன்
> பேரா தரத்தி னொடுபழக்கம் பேசேன்
> சிறிதும் முகம் பாரேன்
> பிறங்கு சுவைப்பால் இனிதூட்டேன்
> பிரியமுடன் ஒக்கலையில் வைத்துத்
> தேரார் வீதி வளங்காட்டேன்
> செய்ய கனிவாய் முத்தமிடேன்
> திகழு மணித் தொட்டிலில் ஏற்றித்
> திருக்கண் வளரச் சீராட்டேன்
> தாரார் இமவான் தடமார்பில்
> தவழும் குழந்தாய் வருகவே
> சாலிப் பதிவாழ் காந்திமதித்
> தாயே வருக வருகவே"

என்ற சொக்கர் கவிதையைக் காதாரக் கேட்டார் வள்ளல். அதன் சுவை அவருள்ளத்தைக் கொள்ளை கொண்டது. செவிச்சுவை யுடைய கவிஞரது செவிக்கு ஓர் செவ்விய பரிசளிக்க விரும்பினார். காந்திமதியம்மை கோவிலில் பிள்ளைத்தமிழ் அரங்கேறியவுடன் வள்ளல் தான் அணிந்திருந்த வயிரக் கடுக்கனைக் கழற்றிக் கவிஞர் காதிலே மாட்டி மகிழ்ந்தார். "செவிச்செல்வமே செல்வத்துட் செல்வம்" என்று அக் கடுக்கனைப் புகழ்ந்து வயிரப் பரிசளித்த வள்ளலை வாயார வாழ்த்தினார் சொக்கர்.

# 25. பந்து விளையாட்டு

இந் நாட்டுக் கல்விச்சாலைகளில் கலை பயிலும் இளைஞர்கள் பெரும்பாலும் உடல் நலம்பேணும் ஊக்கமற்றவராய்க் காணப்படுகின்றனர். மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது, கல்விகற்று, உடல் நலிந்து, பொலிவிழந்த மாணவரே பலராவார். இங்ஙனம் உடல் நலம் பேணாது வாழும் வழக்கம் தமிழ் மக்களது தொன்மையான வழக்கமென்றும், ஆங்கில மக்களொடு பலகால் பழகியும் உடல் நலம் பேணும் உயரிய பழக்கத்தை நாம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் குறை கூறப்படுகின்றது. இவ்வாறுரைப்போர், இந்நாட்டின் பழைய பழக்கவழக்கங்களை அறியாதவரே யாவர். இந்நாட்டில் கந்தமூலம் உண்டு கடுந்தவம் புரிந்த முனிவரும் உடலின் பெருமையை உணர்ந்து அதனைப் பேணவேண்டும் என்று அருளிய பொன்னுரைகள் தமிழ் நூல்களில் ஆங்காங்கு இலங்குகின்றன.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்பது திருமூல முனிவர் அருளிய திருமந்திரமாகும். ஆகவே, பழந்தமிழ் மக்கள் உயிரைப் பேணியவாறே உடலையும் பேணினார்கள் என்பதும், உடலை இகழ்த்தலைப் பட்ட பேதைமை இடைக்காலத்தில் இந்நாட்டில் புகுந்த தொன்றே என்பதும், அருங்கலை தேரும் அறிஞரது கருத்தாகும்.

உடம்பைச்செம்மையாய் வளர்ப்பதற்கு நல்லுணவும் நற்பயிற்சியும் இன்றியமையாதன வென்பது சொல்லாமலே அமையும். இத்தகைய உடற் பயிற்சிக் கேற்ற உயரிய பல விளையாட்டுகள் அக்காலத்திய தமிழ் மக்கள் வாழ்க்கையில் அமைந்திருந்தன. இக்காலத்தில் இளைஞர்

விரும்பி விளையாடும் பந்தாட்டம் பழந்தமிழ் நாட்டிலேயே வழங்கியதாக அறியப்படுகின்றது. மன்னர் வாழும் தலை நகரத்தில் அமைந்திருந்த அரிய காட்சிப் பொருள்களில் பந்தாடும் இடமும் ஒன்றாக விளங்கிற்று. இவ்வாறு அமைந்த அரங்குகள் பல பத்திகளாய் வகுக்கப்பட்டு, பத்தி தோறும் பசும் பொன்னும் பன்மணியும் இழைக்கப்பட்டு, விளிம்பில் முத்து அழுத்தப்பட்டுக் கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்திருந்தன. அவ்வரங்கின் அழகை,

"முத்தம் வாய் புரித்தன
மொய் கதிர்ப் பசும்பொனால்
சித்தி ரத்தியற்றிய
செல்வம் மல்கு பன்மணி
பத்தியிற் குயிற்றிவான்
பதித்து வைத்த போல்வன
இத்திறத்த பந்தெறிந்து
இளையராடு பூமியே"

என்று சிந்தாமணி எடுத்துரைக்கின்றது. இவ்வாறு வகுத்தமைத்த அழகிய அரங்கத்தில் மைந்தரேயன்றி மங்கையரும் பந்தாடி மகிழ்ந்தார்கள்.

மயில்போன்ற சாயலமைந்த ஒரு மெல்லியல் மாது, வளையணிந்த கையால் வலப்புறமும் இடப்புறமும் பந்தைப் போக்கி ஊக்கமாய் விளையாடக் கண்ட தோழியர், தம் தலைமகளின் மெல்லிய மேனி வருந்துமே என்று இரங்கி நின்றார் என்பது,

"துணையில் தோகை மஞ்ஞை
ஈயற் கிவரும் வகைபோல்
மணியார் வளைசேர் முன்கை
வலனும் இடனும் போக்கி
இணையில் தோழி மார்கள்
இறுமால் இடையென் றிரங்க
அணியார் கோதை பூம்பந்
தாடு மவளைக் காண்மின்"

என்னும் கவியால் இனிது அறியப்படும். மென்மையும் அழகும் அமைந்த மாது, அரங்கத்தில் அங்கு மிங்கும் செங்கை நீட்டிப் பந்தடிக்கும் ஆர்வம், மெல்லிய தோகை மயில் பறந்து வரும் ஈயலைப் பற்றுதற்கு அவற்றின்மேல் விரைந்து செல்லும் பான்மையில் அமைந்திருந்ததென்று ஆசிரியர் அமைத்துள்ள இயற்கையணி சால அழகியதாகும்.

இவ்வாறு அரங்கில் விளையாடுவதேயன்றி மங்கையர் சிறுபந்துகளை மேலே வீசிப்பிடித்து விளையாடும் வழக்கமும் அக்காலத்தில் இருந்ததென்று தெரிகின்றது. இப் பந்துகள் தூய வெண்மை வாய்ந்தனவாய்ப் பளிங்கு போல் இலங்கிய பான்மையையும், சார்ந்ததன் வண்ணமாய் விளங்கிய தன்மையையும்,

> "மையரி நெடுங்கண் நோக்கம்
> படுதலும் கருகிவந்து
> கைபுகில் சிவந்து காட்டும்
> கந்துகம் பலவும் கண்டார்"

என்று கம்பர் வியந்துரைக்கின்றார். அஞ்சனம் எழுதிய அழகிய கண்களுடைய மங்கையர் பளிங்குபோன்ற பந்துகளை மேலே எறிந்து அவற்றை மீண்டும் செந்தாமரைபோற் சிவந்த கைகளால் ஏந்திப் பிடித்தபோது, அப்பந்துகள் அடைந்த நிற வேற்றுமையைக் கவிஞர் அழகுற எழுதிப்போந்தார். மையெழுதிய கண்ணெதிரே வந்தபோது, அப்பந்துகள் அந்நிறத்தை ஏற்றுக் கருமையாய் விளங்கின என்றும், பின்பு, அம்மாதரது சிவந்த கையிற் சேர்ந்தபோது அந்நிறத்தை ஏற்றுச் செம்மையாய் விளங்கின என்றும் கவிஞர் கூறுகின்றார். தீயரைச் சேர்ந்தோர் தாமும் தீயர் ஆவதுபோலவும், செய்யரைச் சேர்ந்தோர் தாமும் செய்யராய்த் திகழ்வது போலவும் பளிங்குபோன்ற பந்து சார்ந்ததன் வண்ணம் பெற்று இலங்கிற்று.

இவ்வாறு மாதர் மகிழ்ந்து பந்தாடும்பொழுது இறைவனையும் மன்னனையும் வாழ்த்திப் பாடும் வழக்கமும் அக்காலத்தில் இருந்ததாக அறியப்படுகின்றது. அறநெறி தவறியதென்று அறிந்த நிலையில் உயிர்துறந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் குலத்தினை,

"பொன் இலங்கு பூங்கொடி
பொலஞ்செங் கோதை வில்விட
மின் இலங்கு மேகலைகள்
ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று
சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க
என்று பந்தடித்துமே"

என்று பாடி மாதர் வாழ்த்திய மாண்பினைச் சிலப்பதிகாரக் கந்துவரியிற் காணலாம்.

இவ்விருவகை விளையாட்டோடு காலாலே பந்தடித்து விளையாடும் வழக்கமும் அக்காலத்து இளைஞரிடம் அமைந்திருந்தது. பந்தைக் காலால் எடுத்தலும், கையினால் அடித்தலும், நெற்றியால் தட்டுதலும், பத்தியாய்ப்புடைத்தலும், பரந்துலாவும்படி அடித்தலும் ஆகிய பலவகை விளையாட்டுகளை இளைஞர் விரும்பி ஆடி எல்லையற்ற இன்பமுற்றார்கள் என்பது,

"வைத்த பந்தெடுத்தலும்
மாலையுட் கரத்தலும்
கைத்தலத்தின் ஓட்டலும்
கண்ணி நெற்றி நீட்டலும்
பத்தியிற் புடைத்தலும்
பையரவி னாடலும்
இத்திறத்த பந்தினோடு
இன்பம் எல்லை இல்லையே"

என்னும் சிந்தாமணியால் சிறந்து விளங்கும். இப்பொழுது காற்பந்தாடும் முறையில் மத்தியில் வைத்த பந்தைக் காலால்எடுப்பதும்,எடுத்த பந்தை மாற்ருர் கவராத வண்ணம் கொண்டு செல்வதும், நீள அடிப்பதும், உயர அடிப்பதும், உயர்ந்து வரும் பந்தைத் தலையால் தட்டுவதும் காணப்படுகின்றன. இது போன்ற பந்தாடு முறை அக்காலத்தும் இருந்ததென்பது இப்பாட்டால் இனிது விளங்குகின்றது. காலால் எடுக்கும் பந்துபோல், கையால் பந்து எடுத்து விளையாடு முறை இப்பொழுதும் ஆங்கில மக்கள்பால் வெகுவாக வழங்கக் காணலாம். பந்தைக் கையிலே தாங்கி மாற்ருரது பத்தியிற் புகுந்து, அவர் கைப்பற்ருவண்ணம் கரந்தும், வீசி எறிந்தும் விளையாடுவதே கைப்பந்தாடும் முறையாகக் கருதப்படுகின்றது. இது போன்ற ஒரு முறையும் தமிழ்நாட்டில் வழங்கியிருந்ததாகத் தெரிகின்றது.

இன்னும் இக்காலத்தில் பந்து முதலிய விளையாட்டுகளை விரும்பும் இளைஞர் அகன்று மடிந்த ஆடைகள் ஆட்டையைத் தடை செய்யுமெனக் கருதி முழந்தாள் அளவாகவுள்ள சிற்றுடை உடுத்துச் செல்வதைக் காண்கின்ருேம். இத்தகைய சிற்றுடை அக்காலத்தில் "வட்டுடை" என்று வழங்கிற்றென்பது பழந்தமிழ் நூல்களால் விளங்கும். சிந்தாமணியின் தலைவனய் இலங்கும் வீரனை "வட்டுடைப்பொலிந்த தானை வள்ளல்" என்றுஆசிரியர் கூறுமாற்ருல்வட்டுடையின் தன்மை நன்கு விளங்குவதாகும். வட்டுடையின் இயல்பைக் கூறப்போந்த உரையாசிரியர், அது முழந்தாள் அளவாக வீரர் உடுக்கும் உடை என்று உரை கூறுதலும் ஈண்டு உணரத் தக்கதாகும். ஆகவே, இக்காலத்திய போர் வீரரும்,பந்தாடும் இளைஞரும் உடுக்கும் சிற்றுடையின் நலங்களை அக்காலத்திய தமிழ் மக்களும் அறிந்திருந்தார்கள் என்று கொள்ளலாகும்.

# IX. பாரதியார் பாட்டின்பம்

## 26. செந்தமிழ் நாடு

இவ்வுலகில் முன்னணியில் நிற்கும் நன்னாடுகளெல்லாம் தமது தாய் மொழியைத் தலைக்கொண்டு போற்றுகின்றன. இத் தமிழ் நாட்டில் சில காலத்திற்கு முன்னர் அன்னிய மொழிகளில் பேசுவதும் எழுதுவதும் அறிவுடைமைக் கழகென்றும், தாய்மொழியைப் புறக்கணிப்பது தவறன்றென்றும் படித்தவர் கருதுவாராயினர். ஆயினும், அப்பொழுது அத்தகைய கொள்கைகள் அகன்று, ஆர்வம் நிறைந்த தமிழ்மக்கள் தமிழ்த் தாயை ஆதரிக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மொழியின் நயமறிந்த கவிஞரும் அறிஞரும் அம்மொழி பயிலும் தமிழகத்தை அன்பு ததும்பும் இன்ப மொழிகளாற்போற்றும் அழகு, கருத்திற்கு இன்பம் தருவதாகும். தமிழ் மணங் கமழும் திருநாட்டில் அமைந்த மலையும் ஆறும் தமிழ்க்கவிஞரது மனத்தில் தமிழ் மயமாகவே விளங்கித் தோன்றுகின்றன. 'என்றுமுள தென் தமிழை இயம்பி இசைகொண்ட' திருமுனிவன் வாழும் பொதியமலை தமிழ்மலை யாகவே திகழ்கின்றது. வடதிசையினின்றும் இலங்கையை நாடிச் சென்ற வானர வீரரை நோக்கி, "தென் தமிழ் நாட்டில் அமைந்த அகன்ற பொதியமலையில் அகத்திய முனிவன் அமர்ந்திருக்கின்றான். அம்முனிவன் அமிழ்தினுமினிய தமிழ்மொழியை ஆதரித்து வளர்க்குமிடம் அதுவாதலின், வானரங்காள்! அம் மலையை வணங்கி அப்பாற் செல்க" என்று கம்பர் கூறும் மொழிகளில் தமிழ் அன்பு கனிந்து இலங்குகின்றது. இன்னும்

அப்பொதிய மலையிற் பிறந்து, திருநெல்வேலி வழியாய்ச் சென்று அந்நாட்டை ஊட்டி வளர்க்கும் பொருனை என்னும் தமிழ் ஆற்றைப் "பொன் திணிந்த புனல் பெருகும் பொருனை எனும் திருநதி" என்று கவி அரசர் போற்றிப் புகழ்ந்தார்.

இத்தகைய தலையாய அன்பு பிற்காலத்துப் புலவரிடமும் பொருந்தித் திகழக் காணலாம். செந்தமிழின் சுவை தேர்ந்து செஞ்சொற்கவி செய்த பாரதியார், தமிழ் மொழி வழங்கும் திருநாட்டைப் போற்றிப் புகழும் மொழிகள் புதியதோர் ஊக்கம் அளிப்பனவாம்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே — எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று கவிஞர் அழகாக எடுத்துரைத்தார். செந்தமிழ் நாடு என்று சொல்லும் பொழுது தென்தமிழின் தீந்தேன் செவிகளில் விரைந்து பாய்ந்து நிரம்புகின்றது. அன்னையின் இனிமையும் அன்பும் செந்தமிழ்நாடு என்னும் பெயரில் அமைந்திருத்தலால், நம செவியின் வாயிலாக இன்பத் தேன் வந்து பாய்வதாகும். இத்தமிழ் நாட்டில் வாழ்ந்த அறிஞர் இனிமையும் தமிழும் வேறென்று அறிந்தாரல்லர். தமிழ் என்னும் பதத்திற்கே இனிமை என்ற பொருள் கண்டார்கள். இத்தகைய இனிமை வாய்ந்த தமிழ் ஒலி, இன்னொலியாய், இன்ப ஒலியாய், ஆனந்தத் தேன் சொரியும் அழகிய ஒலியாய் இனிமை பயப்பது இயல் பேயன்றோ? இன்னும், இந்நாட்டைத் தந்தை நாடென்று கருதும் பொழுது அத்தந்தையின் மக்களாய்ப் பிறந்த நமது உரிமை மனத்தில் முனைந்து தோன்றுவதாகும். இவ்வுரிமைக் கருத்து உள்ளத்தைக் கவரும்பொழுது வீரம் கிளம்புகின்றது. தாயை அன்பின் உருவமாகவும், தந்தையை வீரத்தின் வடிவமாகவும் கருதிப் போற்று

தல் தமிழ் வழக்காகும். அந்த முறையில் தமிழ்நாட்டைத் தாய் நாடு என்று நினைக்கும்பொழுது அன்பினால் இன்பம் பிறக்கும். தந்தை நாடு என்று கருதும் பொழுது ஆண்மையால் வீரம் பிறக்கும். இவ்வுண்மையை உணர்த் தக்கருதிய பாரதியார், முதலில் தாயன்பை அமைத்து, பின்பு தந்தையின் வீரத்தைப் பேசும் முறை அறிந்து போற்றுதற்குரியதாகும். இறைவனைத் தாய் வடிவாகவும், தந்தை வடிவாகவும் கொண்டு அம்மையப்பர் என்று வணங்கும் முறைமையும் இக்கருத்தையே வலியுறுத்துவ தாகும். பாசங்களினின்றும் நீங்கிப் பேரின்பம் பெற விரும்பிய பெரியார், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று இறைவனை முதலில் அன்னையாகவே கருதி அகங் குழைவாராயினர். ஆகவே, செந்தமிழ் நாடு முதலில் எம் தாய்நாடு; அப்பால் எம் தந்தை நாடு. இதுவே உண்மைத் தொண்டராய் உழைக்கும் உயர்ந் தோர் உளப்பான்மையாகும்; மெய்யன்பு வாய்ந்த மேலோர் உணர்ச்சியாகும்.

இத்தகைய செந்தமிழன்னையை நாம் போற்றுவது மெய்யாயின் அத்தாயின் அருந்தவப் புதல்வரை ஆர்வத் தோடுபேணுதல்வேண்டும். காவிய நயங்களெல்லாம் கனிந் தொழுகும் நூல்செய்த கம்பரை நாம் இன்னும்உரியமுறை யில் போற்றவில்லை. தன்னேரிலாத தெள்ளுதமிழ்ப் புலவ ராய வள்ளுவரை இன்னும் தமிழ்நாடு தக்க முறையில் தெரிந்துகொள்ளவில்லை. அருந்தமிழ்ச் செல்வமே பெரும் பொருட் செல்வத்தினும் சிறந்ததென்று தெளிந்து இள மையிலேயே துறவறம் பூண்ட இளங்கோவடிகளது பெரு மையை இன்னும் உணர்ந்தோமில்லை. தமிழ்மொழிக்குற்ற குறையைத்தனக்குற்ற குறையாகக்கருதி மனமும் மெய்யும் வருந்திய மணிமேகலை ஆசிரியரது மாண்பை அறிந்தோ மில்லை. நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று முக்கணன் முன்னின்று மொழியும் கலையில்

தெளிவும், கட்டுரை வன்மையும் வாய்ந்த பொய்யடிமை யில்லாப்புலவரைப் போற்றுகின்றோமில்லை. முத்தமிழ்த் துறையின் முறைபோகிய மற்றைய உத்தமக் கவிகளையும், நல்லிசைப் புலமை மெல்லியலாரையும் மனக்கோயிலில் அமைத்து மகிழ்கின்றோமில்லை. ஏனைய நாடுகள் தம் புலவரையும், கவிஞரையும் போற்றுகின்ற முறையினையும் நம் தமிழ்நாடு, தமிழறிஞரைப் புறக்கணிக்கின்ற முறையையும் அறிவோமாயின் பிறரது பெருமையும் நமது சிறுமையும் வெள்ளிடை மலைபோல் விளங்கும். இத்தகைய பெருந்துயிலினின்றும் விழித்து அருந்தமிழைப் போற்றும் நாள் எந்நாளோ, அந்நாளே நம் நாட்டுக்கு நன்னாளாகும்.

# 27. முப்பெருங் கவிஞர்

நல்லறிஞரது உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப் பொங்கும் ஆர்வத்திற் பிறப்பது இயற்கவியாகும். இத்தகைய கவிபாடும் நல்லியற்கவிஞர் உலகில் சிலரேயாவர். அன்னார் இயற்றும் அருங்கவிதையில் மாந்தர் அறிந்து உய்தற்குரிய விழுமிய உண்மைகள் அமைந்து மிளிரும். அவர் மொழிகளில் ஒளியும் இனிமையும் நிரம்பித் ததும்பும். இத்தன்மை வாய்ந்த கவிஞருள் ஒருவராகிய பாரதியார் தமிழ்நாடு செய்த தவப்பயனாகப் பொருநை நாட்டிற் பிறந்தார். அருந்தமிழ் மொழியுடன் ஆரியமும் ஆங்கிலமும் அளவொடு பயின்று தம் உள்ளத்திலெழுந்த தள்ளரிய ஆர்வத்தால் இனிய தமிழ்ப் பாட்டிசைத்தார்.

பழம் பெருமை வாய்ந்த தமிழகத்தின் அறிவையும், ஆண்மையையும், வளத்தையும் வாணிபத் திறத்தையும், ஆற்றையும் அருங் காற்றையும் அக்கவிஞர் போற்றிப் புகழ்ந்துள்ளார். சோழநாட்டை வளநாடாக்கிய காவிரியும், தொண்டை நன்னாட்டின் நல்லணியாய்த் திகழும் பாலாறும், புலவர் நாவிற் பொருந்திய வைகையாறும், பொன் திணிந்த புனல்பெருகும் பொருநையாறும், தமிழ் நாட்டினை அழகு செய்யுந் தன்மையை நினைந்து பாரதியார் நெஞ்சம் தழைக்கின்றார். ஆயினும், நல்லறிவே நாட்டின் உயிரெனக்கருதிய பாரதியார் தமிழ் நாட்டிற்கு என்றும் அழியாப் பெருமையளித்த நல்லியற்கவிஞரை நாவார வாழ்த்துகின்றார்.

> ''கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
> கம்பன் பிறந்த தமிழ்நாடு''

என்றெழுந்த பாரதியார் பாட்டின் நயம் அறியத்தக்கதாகும். கல்வி நலம் படைத்த தமிழ் நாட்டிலே கம்பர் பிறந்தார்; இறவாத பெரும் பனுவல் இயற்றினார்; தமிழ் நாட்டிற்கு அழியாத பெருமையை அளித்தார்; கல்வியிற் பெரி

யவர் கம்பர்' என்ற அழியாத புகழ்மாலை பெற்றார். இத்தகைய கவிஞர் அருளிய காவியம் செந்தமிழ் நாட்டிற்குச் சிறந்ததோர் அணியன்றோ?

இன்னும் இம் மாநிலத்தில் வாழும் மாந்தர்க்கெல்லாம் ஒளிநெறி காட்டும் உயரிய கவிஞரைப் பிறப்பித்து நல்கிய பெருமையும் செந்தமிழ் நாட்டுக்கே உரியதாகும்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்றெழுந்த பாரதியார் வாய்மொழி தமிழ்நயமறிந்தோர்க்குத் தேனினும் இனிப்பதாகும். திருவள்ளுவர் என்னும் ஞானச் செல்வர் பன்னூற்றாண்டுகட்கு முன்பு இந்நாட்டில் தோன்றினார்; உலகெலாம் இன்புற்று வாழுமாறு ஒளிநெறி காட்டினார். இன்று உலகறிந்த கவிஞருள் ஒரு தனிக் கவிஞராக ஒளிர்கின்றார். அக்கவிஞர் தென்னாட்டிற் பிறந்தவரேனும் எந்நாட்டிற்கும் உரியவர். அவர் பொருளுரை தென்மொழியில் எழுந்ததேனும் பன்மொழியாளர்க்கும் பொதுவுரையாகும். சமயக் கணக்கர் மதிவழி செல்லாது உலகியல் காட்டி உறுதிப் பொருள் நாட்டிய அக்கவிஞர் நிலமிசை நீடுவாழ்கின்றார். இத்தகைய மதிநலம் வாய்ந்த கவிஞரைத் தன்னகத்தே தோற்றுவித்து வான் புகழ்கொண்ட தமிழ் நாட்டின் பெருமையைப் பாரதியார் வாயார வாழ்த்துகின்றார்.

இன்னும் சேரநாட்டின் செல்வத்தினும் செந்தமிழ்ச் செல்வமே சிறந்ததெனத் தேர்ந்து இளமையிலேயே துறவறம் ஏற்று, தமிழர் குலமணி விளக்காய் விளங்கிய இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமென்னும் செம்மை சான்ற காவிய அமுதை அள்ளி உண்டு அளப்பரிய இன்பமுற்ற பாரதியார்,

"நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு"

என்று நம் தாய்நாட்டைப் புகழ்ந்து மகிழ்ந்தார். கற்போர் மனத்தைக் கவரும் திறம் வாய்ந்த நூல்களுள் சிலப்பதிகாரம் தலைசிறந்ததாகுமென்று பாரதியார் அறிந்துணர்த்தினார். இரும்பினை இழுக்கும் காந்தம்போல் கற்போர் கருத்தினைக் கவருந் திறம் சிலப்பதிகாரத்தில் அமைந்திருத்தலை உணர்ந்த கவிஞர் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று அச்செஞ்சொற் காவியத்தைப் போற்றினார். இனிய செந்தமிழ்ப் பனுவலாய் இலங்கும் சிலப்பதிகாரத்தைத் தமிழ்த் தாயின் கழுத்தில் இலங்கும் செம்மணி மாலையாகக் கருதி உள்ளம் தழைத்தார். தமிழ் நாட்டு மூவேந்தர் தகைமையையும், முந்நாட்டின் சீர்மையையும், முத்தமிழின் நீர்மையையும், முறையாக இளங்கோ முனிவர் தொடுத்தமைத்த பாமாலை தமிழ்த்தாயின் திரு மார்பில் ஆரமாக அமைந்து அழகு செய்தற்குரியதன்றோ?

இத்தகைய பழம் பெருமை வாய்ந்த பைந்தமிழ் நாட்டிற் பிறந்தும், தமிழ் மொழியின் பெருமையையும், இனிமையையும் உணராது வறிதே காலங் கழிக்கும் இக்காலத் தமிழ் மக்கள் நிலை கண்டு பாரதியார் இரங்குகின்றார். "முன்னோர் முயன்று தேடித் தந்த முழுமணிகள் மண்ணுள் மூழ்கி மறைந்து கிடப்ப, அவர் பின்னோராய நாம் வறிஞராய் இவ்வுலகில் வாழ்கின்றோம்; பாலிருந்த பானையைப் பாற் பானை என்பதுபோல் தமிழறிஞர் மரபிற் பிறந்த நம்மையும் தமிழரெனப் பிற நாட்டார் அழைக்கின்றார்கள்." இங்ஙனம் வாயிருந்தும் ஊமையராய், கண்ணிருந்தும் குருடராய், செவியிருந்தும் செவிடராய்த் திரியும் இக்காலத் தமிழ் மக்களை நோக்கி,

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்?
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

என்று கவிஞர் பரிவுடன் வேண்டுகின்ருர். நறுஞ்சுவை நிறைந்த தமிழின் நீர்மையைத் தமிழ் மக்கள் அறிந்து மகிழ்தல் வேண்டும்; யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்னும் முன்னேர் மொழியின் வழிநின்று இனிமை வாய்ந்த தமிழ் மொழியை யாண்டும் பரப்புதல் வேண்டும். வீடுதோறும் தமிழின் முழக்கம்; வீதிதோறும் தமிழின் விளக்கம்; நகரமெங்கும் தமிழோசை; நாடு எங்கும் தமிழோசை; இவ்வாருக எங்கும் தமிழ் முழக்கமே பெருமுழக்கமாய்ப் பொங்கி எழுதல் வேண்டு மென்பது பாரதியாரது பெரு விருப்பமாகும்.

# 28. கலையின் விளக்கம்

'அழகிய பொருளால் அடைவது என்றும் ஆனந்தமே' என்று ஆங்கிலக் கவிஞர் ஒருவர் அருளிப் போந்தார். கண்ணினைக் கவரும் அழகையும், கருத்தினைக் கவரும் அறிவையும் தெய்வ நலங்களாகக் கருதி வழிபட்ட பெருமை பாரத நாட்டினர்க் குரியதாகும். அழகினைத் திருமகள் என்றும், அறிவினைக் கலைமகள் என்றும் கொண்டு பாரத முன்னோர் போற்றினர்கள். வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப்பணி பூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளைப் பாரதியார் போற்றும் முறை சாலச் சிறந்ததாகும்.

இவ்வுலகில் வழங்கும் கலைகளைக் கவின்கலையென்றும் பயன்கலை என்றும் பகுத்துக் கூறுவதுண்டு. கண்ணையும் செவியையும் கவர்ந்து, அவற்றின் வாயிலாக மனத்திற்கு இன்பம் ஊட்டும் கலைகள் கவின்கலைகளாகும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பல திறப்பட்ட பொருள்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமாகிய கலைகள் பயன்கலைகள் எனப்படும். இவ்விருவகைக் கலைகளின் வடிவமாக நாமகள் விளங்குகின்றாள் என்னும் உண்மையைப் பாரதியார் நன்கு அருளிப் போந்தார்.

செஞ்சொற் கவி இயற்றும் கலைவாணர் கருத்திலும், உள்ளொளி வாய்ந்த உரவோர் மனத்திலும், உலகினர்க்கு ஒளிநெறி காட்டும் உயரிய மறையிலும், கலைமகள் மகிழ்ந்துறைகின்றாள். இன்னும், இன்னிசை வீணையை மலர்க்கரத்திலேந்திய கலைமகள், மக்கள் பேசும் மழலை மொழியிலும், மாதர் இசைக்கும் மதுரப் பாட்டிலும், கீதம் பாடும் குயிலின் குரலிலும், சிறையாரும் மடக்கிளியின் செந்நாவிலும் அமர்ந்திருக்கின்றாள். அன்றியும், மாடகூடங்களை அழகு செய்யும் ஓவியங்களிலும், கோயில்களில் அமைந்த சீரிய சிற்பங்களிலும் கலைமகள் விளங்குகின்றாள். எனவே, செவியினைக் கவரும் இயற்

கவியும் இன்னிசையும், கண்ணினைக் கவரும் ஓவியமும் சிற்பமும் அறிவுத் தெய்வம் உறையும் இடங்களாகும்.

இவ்வுலகில் வாழும் மக்களுக்குப் பயன்படும் பொருள்களை ஆக்கி அளிக்கும் தொழிலாளர் பலராவர். இரும்பை யுருக்கி வெம்படை வடிக்கும் கருங்கைக் கொல்லரும், திண்ணிய மரத்தைத் தறித்து முறித்துப் பணி செய்யும் தச்சரும், குழைந்த மண்ணாற் பாண்டங்களை வனையும் குயவரும், பட்டாலும் பருத்தி நூலாலும் ஆடைகள் நெய்யும் சாலியரும் உலக வாழ்க்கைக்குப் பயன்படுங் கலைகளைப் பயின்று பணி செய்கின்றார்கள். அன்னார் பணிகளிலும் கலைமாது பண்புற்று இலங்கு கின்றாள்.

இன்னும் வேதம் பயிலும் வேதியரும், வீரம் விளைக்கும் வேந்தரும், வான்பொருளீட்டும் வணிகரும், தாளாண்மையிற் சிறந்த வேளாளரும் ஒருங்கே வணங்கும் விழுமிய தெய்வம் அறிவுத் தெய்வமேயாகும். மாந்தரது உள்ளத் தாமரையில் இனிதுறைந்து, அவர் அறிவினுக்கறிவாய் நின்று, புன்னெறி விலக்கி நன்னெறி காட்டும் தெய்வம் கலைத்தெய்வமே யாகும். மேலோரென்றும் கீழோரென்றும் எண்ணாது, செல்வரென்றும் வறிஞரென்றும் கருதாது, முதியரென்றும் இளையரென்றும் பாராது, 'எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அறிவினை விரும்புவோர் அனைவரும் வருக' என்று அருள் கூர்ந்து அழைத்திடுந் தெய்வம் அறிவுத்தெய்வமே யாகும்.

இத்தகைய தெய்வத்தை நிறைமொழி மாந்தர் மறைமொழியாற் போற்றினார்கள். அறிவறிந்த மாந்தர் ஆண்டு தோறும் எண்ணும் எழுத்தும் அமைந்த ஏடுகளை வரிசையாக அடுக்கிக் கலைவிழா எடுத்தார்கள்; விரையுறு நறுமலர் தூவி வணங்கினார்கள்; வண்ணமும் சாந்தமும் வழங்கினார்கள். இவ்வாறு ஆண்டுதோறும் நிகழும் நாமகள் விழாவினைக் கண்ட பாரதியார்,

"செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன் மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம்"

என்று சாற்றியருளினார். ஆண்டிற்கொருமுறை கலையேடுகளை எடுத்தடுக்கி மலர்மாலை புனைவதும், சந்தனம் சாத்துவதும், மந்திரம் முரல்வதும், வந்தனை செய்வதும் உயரிய வழிபாடென்று கருதுதல் பெருந் தவறாகும். 'பொக்கமிக்கவர்' பூவையும் நீரையும் கலைமகள் பொருளாகக் கருதமாட்டாள். கலைவடிவாய நாமகளுக் குகந்த வழிபாடுதான் யாதோ என்றறிய விரும்புவோர்க்குப் பாரதியார் நல்வழி காட்டுகின்றார். தமிழ் நாட்டிலுள்ள வீடுதோறும் கலையின் ஒளி சிறக்க வேண்டும். வீதிதோறும் இரண்டொரு கல்லூரி இலங்க வேண்டும். நகரந்தோறும் கலாசாலைகள் ஓங்க வேண்டும். கல்வி நலம் அறியாத கசடர் வாழும் ஊர்களை எரியினுக்கு இரையாக்க வேண்டும். இவ்வாறு அறியாமையை அழித்து ஒழித்து யாண்டும் கலையின் மணம் கமழச் செய்தலே நாமகளின் அருள் பெறுதற்குரிய நல்ல வழிபாடென்று பாரதியார் அறிவிக்கின்றார்.

நாட்டிலுள்ள ஏழை மாந்தர்க்கு எழுத்தறிவித்தல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாய அறமென்னும் உண்மையை,

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்''

என்று பாரதியார் அறிவித்துப் போந்தார். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அறத்தின் பெருமையை அறிந்து அதனை ஆர்வமுற வளர்த்தநாடு தமிழ் நாடாகும். வருந்தி வந்தவர் அரும்பசி களைந்து அவர் திருந்திய முகங்கண்டு திளைத்த நாடு இந்நாடாகும். கொழு கொழும்பின்றிக் குழைந்து கிடந்த சிறு முல்லைக் கொடியின் துயர் கண்டு தரியாது, அக்கொடி படருமாறு தன் பொற்றேரை நிறுத்திச் சென்ற புரவலன் வாழ்ந்த நாடு இந்நாடாகும். வழி நடந்து செல்லும் ஏழை மக்கள் வெங்கதிரோன் கொடுமையால் வருந்தா வண்ணம் இனிய சாலைகளும் சோலைகளும் அமைத்து அறம் வளர்த்த நாடு இந்நாடாகும். மும்மைசால் உலகுக்கெல்லாம் முதல்வனாய இறைவனுக்குச் செம்மை சான்ற கோயில்களும் கோட்டங்களும் எடுத்த நாடு இந்நாடேயாகும். இங்ஙனம் அன்னசாலைகள் அமைத்தலும், ஆலயங்கள் எடுத்தலும், சாலைகள் வகுத்தலும், சோலைகள் வளர்த்தலும் சிறந்த அறங்களே எனினும், அறிவை வளர்க்கும் கலாசாலைகள் நிறுவுதலே தலையாய அறமென்று பாரதியார் அறிவுறுத்தினார்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்னும் உண்மையைப் பழந் தமிழ் மக்கள் பொன்னேபோற் போற்றினர். கல்வி நலம் வாய்ந்தவரே மக்களாவரென்றும், அந்நலம் அமையப் பெறாத மானுடர் விலங்கனையரென்றும், பழந் தமிழ்ப் பனுவல் பகுத்துரைக்கின்றது. 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்றார் நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர். எனவே, உடம்பினை வளர்க்கும் அன்னசாலையினும் உயிரினை வளர்க்கும் அறிவுச் சாலை சிறந்ததென்று அறைதலும் வேண்டுமோ? 'கற்ற

வர் விழுங்கும் கற்பகக் கனி' யாய இறைவன் 'கல்லார் நெஞ்சில் நில்லான்' என்னும் உண்மையை உணர்வோமாயின், இறைவனை வணங்குதற்குரிய ஆலயங்களை அமைப்பதற்கு முன்னே அறிவினை வளர்க்கும் கல்லூரிகளை அமைத்தல் வேண்டும் என்பது இனிது விளங்குவதாகும். இதனாலேயே கலைநல மறியாது வருந்தும் எளியவர்க்கு எழுத்தறிவிக்கும் அறம் ஏனைய அறங்களினும் நூறாயிரம் மடங்கு மேலானதென்று பாரதியார் அறிவித்தார். இத்தகைய கல்விச் சாலைகளை நாடெங்கும் நாட்டுதலே கலைமகள் உள்ளத்தை மகிழ்விக்கும் உயரிய வழிபாடாகும். கல்லூரிகளிற் போந்து எண்ணும் எழுத்தும் பயிலும் மாணவர் கண்ணெதிரே கலைமகளின் வீணையும் கையும் விரிந்த முகமலரும் விளங்கித் தோன்றும்.

# 29. பண்டாரப் பாட்டு

ஆன்ம வீரம் படைவீரத்தினும் பெரிதென்னும் உண்மையைப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னமே தமிழ் நாடு அறிந்து கொண்டது. நாடாளும் வேந்தரது மறப் படையையும் வெல்லும் ஆற்றல் அறப்படையை ஆளும் ஆன்ம வீரரிடம் உண்டு என்பது பண்டைத் திருத் தொண்டர் சரித்திரத்தால் நன்குணரப்படும். சைவ சமயத்தைத் தமிழ் நாட்டில் நிலை நிறுத்திய மூவருள் ஒருவராய திருநாவுக்கரசரை ஒரு சிறந்த ஆன்ம வீரராகக் கருதி அவர் வாழ்க்கையையும் வாய்மொழியையும் பாரதியார் ஊன்றிப் படித்துள்ளார். அவரதுஆன்ம வீரம் பாரதியார் உள்ளத்தில் புகுந்து உந்துவதாயிற்று. மாநில வேந்தரது மறப் படையின் வலிமையை அறப்படையால் வெல்லலாகு மென்று ஆயிரத்திருநூறு ஆண்டுகட்கு முன்னரே தமிழ் நாட்டார்க்கு அறிவித்தவர் திருநாவுக் கரசர். இவ்வுலகில் புயவலியும் படைவலியும் படைத் தோரே வீரராகக் கருதப்படுகின்றனர். மேலை நாட்டில் படைச் செருக்குற்று வாழ்ந்த அலெக்சாண்டர், நெப்போலியன் முதலியோரை வீரராகக் கொண்டு போற்று கின்றூர்கள். புயவலியினும், படைவலியினும் பெரிய ஆன்மத்திறல் படைத்த வீரராகத் திருநாவுக்கரசர் விளங்குகின்றூர். சமண சமயத்தைக் கைவிட்டு அப்பெரியார் சைவநெறியைச்சார்ந்தபொழுது சமணமன்னன் சீற்றமுற்ருன். மதம் மாறித் தவறிழைத்த நாவுக்கரசரைக் கொணருமாறு வெம்படை தாங்கிய வீரரைப் போக்கினுன். அவ்வீரர் அப்பர் இருந்த இடம் போந்து வீரமொழி பேசி ஆரவாரித்தனர். எனினும் அவரது உருண்டு திரண்ட மேனியைக் கண்டு அப்பர் சிறிதும் அஞ்சினூரல்லர்; அவர் கையிலமைந்த படைக்கலம் கண்டு இறையளவும் மயங்கினூரல்லர். "நாமார்க்குங் குடியல்லோம், நமனையஞ்சோம்" என்று தொடங்கும் வீரப்பாட்டிசைத்தார். இவ்வாறு

மன்னனது பரந்த படையின் முன்னே தனியராய், அஞ்சா நெஞ்சினராய் நின்று அவன் மறப்படையைத் தம் ஆன்ம வலியால்வென்ற அப்பரது வீரப்பாட்டு, பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்தது.

"யார்க்கும் குடியல்லேன் யான் என்ப
தோர்ந்தனன் மாயையே - உன்தன்
போர்க்கஞ்சுவேனோ பொடியாக்குவேன்
உன்னை மாயையே"

என்று தன்னை அச்சுறுத்திய மாயையைப் பழித்துப் பாடியுள்ளார். இப்பாட்டில் திருநாவுக்கரசரது வீரவுரை விளங்கக் காணலாம்.

பாரதியார் பாடிய வீரப் பாடல்களுள் தலையாய் நிற்கும் தகுதி வாய்ந்தது "அச்சமில்லை" என்று தொடங்கும் 'பண்டாரப் பாட்'டே யாகும். அப்பாட்டிலே,

"பச்சை ஊன் இயைந்தவேற் படைகள் வந்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்றெழுந்த அடிகள் நாவுக்கரசரை எதிர்த்து நின்ற மன்னன் படையைப் போன்ற மறப் படையைக் குறிப்பன என்று கருதுவது பொருத்த முடையதாகும். இன்னும், திருநாவுக்கரசரைத் துன்புறுத்தக் கருதிய அரசன் அவரை நீற்றறையிலிட்டான். அந்நீற்றறையின் வெம்மையை நாவுக்கரசர் தம் மனச் செம்மையால் வென்றார்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்னும் பாட்டு அந்நிலையில் அப்பரால் பாடப்பட்டதாகும். ஏழுநாள் நீற்றறையில் ஏதமின்றி இருந்து வெளிப்பட்ட நிலையிலும் அவர் பெருமையை அரசன் அறிந்தானல்லன். பலநாள் உணவின்றியிருந்த அப்பரது பசியைத் தீர்ப்பான்போல் நஞ்சு கலந்த பாற்சோற்றை அவருக்கு

ஊட்டுமாறு பணித்தான். அரசனது ஏவலாளர் நஞ்சு தோய்ந்த அன்னத்தை அப்பர் முன்னே படைத்து நயவஞ்சகம் பேசி நின்றார். ஆருயிர் மருந்து எனப்படும் அன்னத்தில் நஞ்சு கலந்த மாந்தரை நாவுக்கரசர் பகைவரெனக் கருதினாரல்லர்; நண்பரெனவே கருதினார்; அவரிட்ட சோற்றை உண்டு மகிழ்ந்தார். இங்ஙனம் பகைவரிட்ட நஞ்சையும், நண்பரிட்ட நல்லமுதெனக் கருதியுண்ட நாவுக்கரசர்,

> "பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்"

என்னும் திருக்குறளுக்குச் சிறந்த சான்றுவரன்றோ? இவ்வாறு நாவுக்கரசர் ஆற்றிய அருஞ் செயலை வள்ளுவர் அருளிய கருத்தொடு கலந்து,

> "நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டு போதினும்
> அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்று பாரதியார் நல்ல தமிழ்விருந்தளித்தார்.

நஞ்சுண்டும் சாகாதிருந்த நாவுக்கரசரை நசுக்கிச் சிதைக்குமாறு கடக்களிற்றை அவர்மேல் விடப்பணித்தான் காவலன். கட்டவிழ்த்து விட்ட கொலைக்களிறு கூடத்தைக் குத்தி ஒரு குன்றமெனப் புறப்பட்டது. வெஞ்சின வேழத்தைக் கண்ணுற்ற அப்பர் சிறிதும் சஞ்சலமுற்றாரல்லர்; செஞ்சடைக் கடவுளின் அடியார்க்கு

> "அஞ்சுவதியா தொன்று மில்லை
> அஞ்சவருவதும் இல்லை"

என்று நெஞ்சாரப் பாடினார். தறுகண் வேழம் வெம்மை நீத்து நாவுக்கரசரை வலம் வந்து தாழ்ந்து இறைஞ்சி எழுந்து சென்றது. மதவேழத்தின் செருக்கை யடக்குமாறு திருத்தொண்டர் பாடிய பாட்டே "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்னும் பல்லவிக்கு அடிப்படை என்று கருதுவது தவறாகாது.

என்ஞான்றும் படைச்செருக்குற்ற மன்னவர் உலகின் அச்சாணியன்ன ஆன்றோரையும், மக்கள் கருத்தில் உச்சமாக நின்று நிலவும் பெரியோரையும் துச்சமாகக் கருதித் தூறு செய்வதுண்டு. அவ்வகையிலேயே சைவசமய சீலராக விளங்கிய நாவுக்கரசரைச் சமண மன்னன் பலவாறு ஒறுக்கத் துணிந்தான். இத்தகைய உலகியலை நன்கறிந்த பாரதியார்,

"துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்று பாடினர்.

இன்னும், "ஊனம் ஒன்றில்லாத இறைவனுக்கு ஆட்பட்ட உத்தமர்" வேறொன்றையும் பொருளாகக் கருதார். மண்ணும் விண்ணும் நிலைகுலைந்தாலும், ஞாயிறும் திங்களும் திசை மாறினும் அன்னார் மனந்துளங்குவதில்லை. இவ்வுண்மையை,

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்
ஊனமொன் றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே"

என்று அப்பர் தம் தேவாரத்தில் அருளிப்போந்தார். அவ் ஆன்மத் திறலின் அருமை யறிந்த பாரதியார்,

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்று கற்றாரும் கல்லாரும் அறியும் முறையில் விளக்கிப் போந்தார்.

நாவுக்கரசர் பெருமையைஉலகறியக்காட்ட விழைந்த இறையனார் வானிள மங்கையரை அப்பர்பால் விடுத்து அவரைப்பதம்பார்க்கப் பணித்தார். அம்மங்கையர் கண் ணொளிவீசி நாவுக்கரசர் உழவாரத்தொண்டாற்றியஇடந் தோறும் தோன்றி நடமாடினர். வேற்படையினும் கொடிய அன்னார் கண்களைக் கண்டு நாவரசர் சிறிதும் கலங்கினரல்லர்; தளர்ந்தாரல்லர்; உரன் என்னும்அங்கு

சத்தால் ஐம்பொறிகளையும் காத்து நின்ற அப்பரை வெல்ல இயலாது வான மங்கையர் தோற்றொழிந்தார். இக்கருத்தை மனத்திற்கொண்டு, காதல்புரியும் மாதரார்

"கண்கள் வீசு போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்று பாரதியார் பாடிப்போந்தார். ஆகவே 'முற்காலக் கவிஞராகிய திருநாவுக்கரசரது வீர வாழ்க்கையும் வீரப் பாடலும் பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்து வீரக் கவிதையை விளைத்தன என்று கூறுதல் மிகையாகாது.

# 30. தமிழ்த் தாய் வாழ்த்து

தமிழ் மொழி வழங்கும் தென்னாடு தெய்வத் திருநாடென்று போற்றத் தக்கதாகும்; ஆன்றோர் வாழும் நாடென்று அறிந்து வணங்கத் தக்கதாகும். 'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற' திருமால் வடசொற்கும் தென்சொற்கும் வரம்பாய் அமைந்த வேங்கட மலையில் நின்று அருந்தமிழைக் காக்கின்றான். நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவஞ்செய்யும் கன்னித் தெய்வம் கருங்கடலைக் கையமர்த்திக் காவல்புரிகின்றாள். இன்னும் நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்த' முத்தமிழ் முனிவர், புகழ்பூத்த பொதியமாமலையில் அமர்ந்து தமிழகத்தைக்கண்ணிணைக் காக்கும் இமை போல் காத்தருள்கின்றார். இங்ஙனம் வடபால் நீலமேனி நெடியோனும், தென்பால் கன்னித் தெய்வமும், குடபால் அருந்தவ முனிவரும் கருத்துற நோக்கிக் காவல்புரிவதால் செந்தமிழ்நாடு தெய்வக் காவலில் அமைந்த திருநாடாகப் பாரதியார் உள்ளத்திலே தோன்றுகிறது.

இத்தகைய திரு நாட்டிற் பிறந்து வளர்ந்த தாய் மொழியின் முற்காலப் பெருமையையும், பிற்காலச் சிறுமையையும் தமிழ் மக்களுக் குணர்த்தஆசைப்பட்ட கவிஞர், தமிழ்த் தாய் முறையிடும் பான்மையில் உருக்கமாக ஒரு பாட்டுப் பாடியுள்ளார்.

தலையிலணிந்த சூளாமணி சரிய, இடையிலணிந்த மணிமேகலை தளர, இணையடிச் சிலம்புகள் புலம்ப, கண் கலங்கி நிற்கும் தமிழன்னை தன் தகை சான்ற பிள்ளைகளை நோக்கி 'என் ஆருயிர் மக்காள்! ஆதிசிவனருளால் இந்நானிலத்தில் தோன்றினேன். முத்தமிழறிந்த முனிவரருளால் திருந்தினேன்; நற்றமிழ் மன்னரது செல்வச் சிறுமியாய்ச் செழித்து வளர்ந்தேன். அறிவறிந்த மக்கள் ஆக்கியளித்த காவியக் கலனணிந்து விளங்கினேன். இடைக்

காலத்தில் பல நல்லணிகளைப் பறிகொடுத்தேன்; இன்று பசையற்ற மாக்கள் பதருமற் பேசும் வசைமொழி என் செவியினைச் சுடுகின்றது. உள்ளத்தை அறுக்கின்றது. புத்தம் புதிய கலைகள் மேலை நாடுகளில் மெத்த வளர்கின்றனவாம். அக்கலைகள் ஐம்பெரும் பூதங்களின் திறத்தினை அருமையாக உணர்த்துகின்றனவாம். அம் மேன்மைக் கலைகள் என்பால் இல்லையாம். மேலை நாட்டு மொழிகளே இனி மேலோங்கி வாழுமாம். யான் மெல்லத் தளர்ந்து மேன்மையிழந்து அழிந்து ஒழிவேனும். இவ்வாறு மதியிலார் உரைக்கும் மாற்றம் அறியீரோ? பேதையர் கூறும் புன்மொழி கேளீரோ? இவ்வசைமொழி என்பாலமைய நீர் வாளாவிருத்தலாகுமோ? எட்டுத்திசையும் சென்று கிட்டிய கலைகள் யாவும் கொணர்வீர். புத்தணி புனைந்து என் நலத்தினைப் புதுக்குவீர். நல்ல கலைப்பொருள் அனைத்தையும் வாரிக் கொணர்ந்து நல்குவீர். ஆதி பகவன் அருள் வலியாலும், இன்று சார்ந்த புலவரது தவ வலியாலும் அப்பேதையர் உரைத்த பெரும்பழி ஒழியும்; இசையோடு இப் புவிமிசை என்றுமிருப்பேன்'என்று தமிழன்னை தன் ஆற்றாமையை அறிவித்துத் தமிழ் மக்களைத் தட்டித்தேற்றி எழுப்புகின்றாள்.


இங்ஙனம் தமிழ்த் தாயின் வாய்மொழியாகப் பாரதியார் எழுதியுள்ள பாட்டின் கருத்து அறிந்து போற்றுதற் குரியதாகும். மேலை நாடுகளில் நாள்தோறும் நலமுற்றோங்கி வளரும் நவீனக் கலைகள் தமிழ் மொழியில் இல்லை என்பது உண்மையே. அக்குறைபாடறிந்து தமிழன்னை வருத்தமுற்றாளேனும் சீற்றமுற்றாளில்லை. மேலை நாட்டுக் கலைகளிலமைந்த அரும் பொருள்களை எடுத்துரைக்கும் திறம் தமிழ்மொழிக்கில்லை என்றும், அத்திறமின்மையால் இனி மெல்லத் தமிழ்மொழி இறந்துபடுமென்றும், விரிவிலா அறிவினர் கூறும் வசை மொழி கேட்டுத் தமிழ்த்தாய் சீறுகின்றாள்; அருந்தமிழின் ஆற்

றலறிந்தவர் எவரும் அவ்வாறு உரை செய்யாராதலால் 'கூறத்தகாதவன் கூறினன்' என்றாள். தமிழ் மொழியின் நீர்மை உணராத மூழுமகனே அவ்வாறு உரைக்கத் துணி வனுதலால் அந்தப் 'பேதை உரைத்தான்' என்று அன்னை அவனைச் சுட்டி இகழ்ந்துரைத்தாள். ஆயினும் அத்திய வெஞ்சொல் அன்னையின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய் கின்றது. தகவிலார் கூறும் வசையினைத் தீர்த்து இசை யினை நல்குமாறு அருந்தமிழ் மக்களை அன்னை வருந்தி அழைக்கின்றாள்.

ஆங்கிலம் முதலிய மேலை நாட்டு மொழிகளை யறிந்த மாணவர் கடமையைப் பாரதியார் பண்புறக் கூறுகின் றார். பிறநாட்டு நல்லறிஞர் இயற்றிய புத்தம் புதிய கலைநூல்களைத் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும். அக்கலைகளிலமைந்த புதிய கருத்துக்களை உணர்த்தும் பெற்றி வாய்ந்த பழந்தமிழ்ச் சொற்கள் பண்டைப் பனு வலிற் பதிந்து கிடக்குமாயின் அவற்றை அகழ்ந்தெடுத்து வழக்காற்றில் உய்த்தல் வேண்டும். புதிய சொற்கள் வேண்டுமாயின், தமிழ்ச் சொல்லாக்க முறையறிந்து அவற்றைப் பிறப்பித்தல் வேண்டும். நல்ல நூல்களை மொழி பெயர்த்தும், நவீன நூல்களை இயற்றியும் தமிழ் மொழியின் கலைச் செல்வத்தைப் பெருக்க வேண்டும். இங் ஙனம் விரைந்து பணி செய்ய முற்படாது, தமிழ் மொழி யின் பழம் பெருமை பேசி மகிழ்தலாற் பயனில்லை. "மறை வாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர்மகிமை யில்லை." கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோட மர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்த பைந்தமிழ் என்று பாராட்டுவதனுல் தமிழ்மொழி பரவிவிடமாட்டாது. 'என்றுமுளதென்றமிழ்' என்று இறுமாந்து பேசுதலால் தமிழ்மொழி ஏற்றமுற மாட்டாது. 'சங்கத் திருப்பிலே யிருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை' என்று வாய்ப்பறை சாற்றுவதால் தமிழ்மொழி வளர்ந்துவிட

மாட்டாது. தாய்மொழித் தொண்டு செய்யக் கருதும் தகை சான்ற அறிஞர் பழம் பெருமை பேசும் பழக்கத்தை விட்டொழித்து, தமிழ் மொழியின் குறைகளை அறிந்து பணிசெய்ய முற்பட வேண்டும். தமிழ் நாட்டிலமைந்த பல்கலைக் கழகங்கள் மேலை நாட்டுக் கலைகளை மொழி பெயர்க்கும் விழுமிய பணியை மேற்கொள்ள வேண்டும். அரசியலாளர் அம்முயற்சியை ஆதரிக்க வேண்டும். தமிழன்னை மீண்டும் தலை சிறந்து விளங்கும் காலம் வருமோவென்று ஏங்கித் தளர்பவர் இந்நாளில் பலராவர். இங்ஙனம் தமிழ்ச் சேய்களிற் பலர் மயங்கித் தளர்ந்தாலும் தமிழ்த் தாய் மனம் தளரவில்லை. உரனிழந்த மக்கள் மனத்தைத் தேற்றுகின்றாள்; எத்திசையும் புகழ் மணக்க மீண்டும் தான் ஏற்றமுறும் காலம் அண்மையில் வருமென்று அறிவிக்கின்றாள். ‘ஆதிசிவன் அருளாலும் அறிவறிந்த மக்கள் ஆர்வத்தாலும் வீறுபெற்று விளங்குவேன்’’ என்று தமிழன்னை வாயிலாகப் பாரதியார் கூறும் வாய்மொழி கார்மேகத்தினிடையே இலங்கும் கதிரொளியாகும்.

"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!"



## எமது வெளியீடுகள்:—

1. தமிழரிடையே அன்புப்போர்-முதல் பாகம்

[பழம்நீ-கே. வீ. வீரராகவன் B.A., B.L.,]

"தமிழ் இலக்கியஉலகில் இது ஒரு புதுமை"

இலக்கியத்தில் ஒரு புரட்சி.

விலை ரூ. 1—0—0

2. வீரத் தமிழருக்கு—ஆவேசக் கடிதங்கள்.

கவியோகி - சுத்தானந்த பாரதியார்

வாழ்க்கையில் பல துறையிலும் வழி காட்டக் கூடிய கடிதங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

விலை ரூ. 1...6...0

3. பெண்களுக்குச் சம உரிமை

முகவுரை - யோகி சுத்தானந்த பாரதியார்.

"பல கல்லூரி மாணவிகளால் எழுதப்பெற்ற ஒரு அருமையான நூல். ஆண், பெண் அனைவரும் படிக்கத்தகுந்தது."

— தமிழர் நாடு

விலை 0...12...0

4. விதி வழியே—நாவல்

(சுகி)

விதியின் விளையாட்டைப் பிரதிபலிக்கும் இந் நாவல் வைரம் போன்றது. கிராம வாழ்க்கையின் இனிமையும், புதுமைப் பாத்திரங்களின் இதய ஏக்கமும் ஊடும் பாவுமாக, 'சுகி'யின் சிந்தனைத் தறியில் இணைகின்றன. தாய்மைக்கு ஒரு சிறந்த கதை.

விலை ரூ. 2—4—0

**நியூ இந்தியா புக் ஹவுஸ்**

இராமச்சந்திரபுரம் (P. O.)

திருச்சி ஜில்லா.

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 35 | 3 | பெறும் | நடைபெறும் |
| 46 | 16 | சிலப்பதிாகரம் | சிலப்பதிகாரம் |
| 110 | 1 | பழிப்பா | பழிப்பர் |
| 153 | 7 | அப்பொழுது | இப்பொழுது |